184

# கோகர்ண

# புராண சாரம்



1948

சர்வதாரி

Q23:38.K
N48
109848

# கோகர்ண புராண சாரம்

வடமொழியிலிருந்து
பென்ஷண்ட் டிஸ்ட்ரிக்ட் முன்சிப்
**வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள்**
மொழிபெயர்த்தது


உரிமையாளர் :
**வ. ச. மயிலேறும் பெருமாள்,** B. A., B. L.,
292, லிங்க செட்டித் தெரு, சென்னை

*Copy-right reserved ]* *May 1948* [ விலை அணா 12
சர்வதாரி வைகாசி

Q23:38·K
N48

(வடக்கு)

# கோகர்ணம்




109848

குறிப்பு : ஊரிலுள்ள ஆலயங்கள், தீர்த்தங்கள் முதலிய எல்லா விவரங்களையும் காட்டும் கோகர்ண க்ஷேத்திர முழுப்படம் (18 × 23) கோகர்ணத்திற் கிடைக்கும்.

உ

திருச்சிற்றம்பலம்

# முகவுரை

1933-ஆம் ஆண்டிற் சிவராத்திரி தினத்தில் (24-2-1933) கோகர்ண மஹா க்ஷேத்திரத்தைத் தரிசிக்கும் பேறு பெற்ற என் தமையனார் திரு. வ. சு. சண்முகம் பிள்ளை அவர்கள் (பென்ஷண்ட் டிஸ்டிரிக்ட் முன்சீப்) வடமொழியி லிருந்த **'ஸ்ரீ கோகர்ண புராண சாரம்'** என்னும் நூல் அத்தலத்திற் கிடைக்கப் பெற்று அதைத் தமிழ்ப் படுத்தி வைத்திருந்தார். "தமிழில் நான் எழுதிவைத்துள்ள கோகர்ண புராணத்தை என் செலவில் நீ அச்சிடுக"— என எனக்கொரு பணியிட்டு அவர் 24-2-1941 வந்த சிவராத்திரிக்கு எட்டாம் நாள் (3-3-1941) சோமவார தினத்திற் சிவனடி கூடினர். அவர் எழுதிவைத்தது வடமொழிப் போக்கில் உள்ளபடியே தமிழில் இருந்ததால், வசனத்தைத் தமிழ் நடைக்குப் பொருந்த மாற்றிச் சிவநேசச் செல்வர்களுக்குப் பயன் படும்படி எழுதி யுள்ளேன். எனது தமையனாரது மொழியைப் பொன்னே போற் போற்றி அவரது மனைவியாரும் குமாரர் சிரஞ்சீவி மயிலேறும் பெருமாளும் இந்நூலை அவர்களது செலவிலேயே அச்சிட்டு வெளியிடுகின்றார்கள்.

தமிழ்மொழிக்கண் ஆர்வம் நிறைந்தவரும் சிவபக்தி செறிந்த உள்ளம் படைத்தவருமான எனது நண்பர் பாரத்வாஜி **பிரமஸ்ரீ சுந்தரராமஸ்வாமி ஐயரவர்கள்** இந்நூல் அச்சேறி உலவுதற்கு வேண்டிய பேருதவிகள் பல புரிந்தனர். அவரது உதவி இலதாயின் இந்நூல் இச் சமயத்திலும் இவ்வளவு விரைவிலும் வெளிவந்திராது. இப் பெருந்தகையார்க்கு என் நன்றி என்றும் உரித்தாகும். ஸ்ரீ மஹாபலேசுரர் திருவருளால் இவர் நோயிலா வாழ்வுடன் பல்லாண்டு பாரிற் பொலிவாராக. நூல் அச்சாகிவரும் பொழுது ஆங்காங்கு எனக்குத் தோன்றிய ஐயப்பாடுகளை வடமொழி மூலத்தை ஆய்ந்து நீக்கியும், அருமையான உரைக் குறிப்புக்களை விளக்கியும் உதவிய பிறிதொரு நண்பர் பிரமஸ்ரீ. ல. **ராமச் சந்திர சாஸ்திரியார்** அவர்களுக்கும், என் தமையனொடு 1933-ஆம் ஆண்டிற் கோகர்ணத் தலத்தைத் தரிசித்தவரும், பின்னும் அண்மையில் இவ் வாண்டில் அத் தலத்தை மறுமுறை தரிசித்தவரும், அத் தல சம்பந்தமான படங்களைக் காட்டியும், தலத்தைப் பற்றிய பல குறிப்புக்களைத் தந்து உதவியவருமான திருத்தணிகை **பிரமஸ்ரீ தக்ஷிணாமூர்த்திக் குருக்கள்** அவர்களுக்கும் யான் மிகக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

பல வேலைகளுக்கிடையே இக் நூலுக்கு முதன்மைத் தானம் தந்து விரைவில் இதை அச்சேற்றித் தந்த ஸ்ரீ சரஸ்வதி விலாசம் அச்சுக் கூடத்துத் தலைவரும், எங்கள் குடும்ப நலத்தில் விருப்புள்ளவரும், என் தமையனருக்கு உகந்த நண்பருமான **பிரமஸ்ரீ பரசுராம ஐயரவர்களுக்கும்** என் மெய்ந் நன்றி பெரிதும் உரித்தே.

இந்த அரிய சிவப் பணியில் என்னை ஈடுபடச் செய்து எனக்குத் துணை புரிந்த எனது நாயகர் திருத்தணிகை யாண்டவர் திருவருளுக்கு யான் யாது கைம்மாறு செய்ய வல்லேன்!

சென்னை,<br>11—5—1948

**வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ.**<br>**292, லிங்க செட்டித் தெரு, சென்னை**

# I. திருஞான சம்பந்தர்

## திருவிராகம் (பண் சாதாரி)

### திருச்சிற்றம்பலம்

என்றுமரி யானயல வர்க்கியலி சைப்பொருள்க ளாகியெனதுள்
நன்றுமொளி யானொளிசி றந்தபொன்மு டிக்கடவுள் நண்ணும் இடமாம்
ஒன்றிய மனத் தடியர் கூடியிமை யோர்பரவு நீடரவமார்
குன்றுகள் நெருங்கிவிரி தண்டலை மிடைந்து வளர் கோகரணமே. ௧

பேதைமட மங்கையொரு பங்கிடமி குத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ ழுந்தவிட முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடியி றைஞ்சிநிறை மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல் கின்றவளர் கோகரணமே. ௨

முறைத்திற முறப்பொருள் தெரிந்துமுனி வர்க்கருளி யாலநிழல்வாய்
மறைத்திற மறத்தொகுதி கண்டுசம யங்களைவ குத்தவனிடம்
துறைத்துறை மிகுத்தருவி தூமலர் சுமந்துவரை யுந்தி மதகைக்
குறைத் தறையி டக்கரி புரிந்திட று சாரல்மலி கோகரணமே. ௩

இலைத்தலைமி குத்தபடை யெண்கரம்வி ளங்கஎரி வீசிமுடிமேல்
அலைத்தலை தொகுத்தபுனல் செஞ்சடையில் வைத்தஅ ழகன்தன் இடமாம்
மலைத்தலை வகுத்தமுழை தோறுமுழை வாளரிகள் கேழல் களிறு
கொலைத்தலை மடப்பிடிகள் கூடிவிளை யாடிநிகழ் கோகரணமே. ௪

தொடைத்தலை மலைத்திதழி துன்னிய எருக்கலரி வன்னி முடியின்
சடைத்தலை மிலைச்சிய தபோதனனெம் ஆதிபயில் கின்ற பதியாம்
படைத்தலை பிடித்து மற வாளரொடு வேடர்கள் பயின்று குழுமிக்
குடைத்தலை நதிப்படிய நின்றுபழி தீர நல்கு கோகரணமே. ௫

நீறுதிரு மேனிமிசை யாடிநிறை வார்கழல் சிலம்பொலி செய
ஏறுவிளை யாடவிசை கொண்டிடு பலிக்குவரும் ஈசனிடமாம்
ஆறு சம யங்களும் விரும்பியடி பேணியர னாகம மிகக்
கூறுமனம் வேறிரதி வந்தடியர் கம்பம்வரு கோகரணமே. ௬

கல்லவட மொந்தை குழல் தாளமலி கொக்கரைய ரக்கரைமிசை
பல்லபட நாகம்விரி கோவணவ ராளுநக ரென்ப ரயலே
நல்லமட மாதரர னாமமு நவிற்றிய திருத்த முழுகக்
கொல்லவிட நோயகல் தரப் புகல் கொடுத்தருளு கோகரணமே. ௭

வரைத்தல நெருக்கிய முருட்டிருள் நிறத்த வன வாய்கள் அலற
விரற்றலை யுகிர்ச்சிறிது வைத்தபெரு மானினிது மேவும் இடமாம்
புரைத்தலை கெடுத்தமுனி வாணர்பொலி வாகிவினை தீர அதன்மேல்
குரைத்தலை கழற்பணிய ஓமம்வில கும்புகைசெய் கோகரணமே. ௮

வில்லிமையி னல்விறல ரக்கனுயிர் செற்றவனும் வேத முதலோன்
இல்லையுள தென்றிகலி நேடஎரி யாகியுயர் கின்ற பரனூர்
எல்லையில் வரைத்த கடல் வட்டமு மிறைஞ்சி நிறை வாசமுருவக்
கொல்லையில் இளங் குறவர் தம்மயிர் புலர்த்தி வளர் கோகரணமே. ௯

நேசமில் மனச் சமணர் தேரர்கள் நிரந்த மொழி பொய்களகல்வித்
தாசைகொள் மனத்தையடி யாரவர்த மக்கருளும் அங்கணனிடம்
பாசம தறுத்தவனி யிற்பெயர்கள் பத்துடைய மன்ன னவனைக்
கூசவகை கண்டுபி னவற்கருள்கள் நல்கவல கோகரணமே ௰

கோடலர வீனும்விரி சாரல்முன் நெருங்கிவளர் கோகரணமே
ஈடமினி தாகவுறை வானடிகள் பேணியணி காழி நகரான்
நாடிய தமிழ்க்கிளவி யின்னிசை செய் ஞானசம் பந்தன் மொழிகள்
பாடவல பத்தரவர் எத்திசையும் ஆள்வர் பர லோக மெளிதே. ௧௧

## II. திருநாவுக் கரசுநாயனர் (திருத்தாண்டகம்)

சந்திரனும் தண் புனலும் சந்தித் தான் காண்
    தாழ்சடையான் காண் சார்ந்தார்க் கமுதானன் காண்
அந்தரத்தில் அசுரர் புரம் மூன்றட்டான் காண்
    அவ்வுருவி லவ்வுருவம் ஆயினன் காண்
பந்தரத்து நான் மறைகள் பாடினன் காண்
    பலபலவும் பாணி பயில் கின்றான் காண்
மந்திரத்து மறைப் பொருளும் ஆயினன் காண்
    மாகடல் சூழ் கோகரணம் மன்னினனே. ௧

தந்த வத்தன் தன்தலையைத் தாங்கி னன் காண்
    சாரணன் காண் சார்ந்தார்க்கின் னமுதா னன்காண்
கெந்தத்தன் காண் கெடில வீரட் டன் காண்
    கேடிலி காண் கெடுப்பார்மற் றில்லாதான் காண்
வெந் தொத்த நீறுமெய் பூசி னன்கான்
    வீரன் காண் வியன்கயிலை மேவி னன் காண்
வந்தொத்த நெடுமாற்கும் அறிவொ ணன் காண்
    மா கடல் சூழ் கோகரணம் மன்னி னனே. ௨

தன்னுருவம் யாவருக்கும் தாக்கா தான் காண்
    தாழ்சடையெம் பெருமான்காண் தக்கார்க் குள்ள
பொன்னுருவச் சோதி புனலாடி காண்
    புராணன் காண் பூதங்க ளாயி னன் காண்
மின்னுருவ நுண்ணிடையாள் பாகத் தான் காண்
    வேழத்தி னுரிவெருவப் போர்த்தான் தான் காண்
மன்னுருவாய் மாமறைக ளோதி னன்காண்
    மாகடல் சூழ் கோகரணம் மன்னினனே. ௩

ஆறேறு செஞ்சடையெம் ஆரூரன் காண்
அன்பன் காண் அணிபழனம் மேயான் தான் காண்
நீறேறி நிழல்திகழும் மேனி யான் காண்
நிருபன் காண் நிகரொன்று மில்லா தான் காண்
கூறேறு கொடுமழுவாட் படையி னான் காண்
கொக்கரையன் காண்குழூஉப் பூதத் தான் காண்
மாறாய மதில் மூன்றும் மாய்வித் தான் காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னினானே. ௪

சென்றச் சிலைவாங்கிச் சேர்வித் தான் காண்
தீயம்பன் காண் திரிபுரங்கள் மூன்றும்
பொன்றப் பொடியாக நோக்கி னான் காண்
பூதன் காண் பூதப் படையாளி காண்
அன்றப் பொழுதே அருள்செய் தான் காண்
அனலாடி காண் அடியார்க் கமுதா னான் காண்
மன்றல் மணங் கமழும் வார்சடை யான்காண்
மாகடல்சூழ் கோகரணம் மன்னி னானே. ௫

பிறையோடு பெண்ணொருபால் வைத்தான் தான்காண்
பேரவன்காண் பிறப்பொன்று மில்லா தான் காண்
கறையோடு மணிமிடற்றுக் காபாலி காண்
கட்டங்கன் காண் கையிற் கபால மேந்திப்
பறையோடு பல்கீதம் பாடி னான் காண்
ஆடினான் காண் பாணி யாக நின்று
மறையோடு மாகீதம் கேட்டான் தான்காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னி னானே. ௬

மின்னளந்த மேல் முகட்டின் மேலுற் றான்காண்
விண்ணவர்தம் பெருமான் காண் மேவி லெங்கும்
முன்னளந்த மூவர்க்கும் முதலானான் காண்
மூவிலை வேற் சூலத்தெங் கோலத் தான் காண்
எண்ணளந் தென் சிந்தையே மேவி னான் காண்
ஏவலன் காண் இமையோர்க ளேத்த நின்று
மண்ணளந்த மாலறியா மாயத் தான் காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னினானே. ௭

பின்னு சடை மேற் பிறை சூடி னான் காண்
பேரருளன்காண் பிறப் பொன் றில்லாதான் காண்
முன்னி யுலகுக்கு முன்னா னான் காண்
மூவெயிலுஞ் செற்றுகந்த முதல்வன் தான் காண்
இன்னவுரு என்றறிவொண் ணாதான் தான்காண்
ஏழ்கடலும் ஏழுலகும் ஆயி னான் காண்
மன்னும் மடந்தையோர் பாகத்தான் காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னி னானே. ௮

வெட்ட வெடித்தார்க்கோர் வெவ்வழ லன் காண்
வீரன் காண் வீரட்டம் மேவி னான்காண்
பொட்ட அநங்கனையும் நோக்கி னான் காண்
பூதன்காண் பூதப் படை யி னான் காண்
கட்டக் கடுவினைகள் காத்தாள் வான் காண்
கண்டன் காண் வண்டுண்ட கொன்றை யான் காண்
வட்ட மதிப்பாகஞ் சூடி னான் காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னி னானே. ௯

கையாற் கயிலை யெடுத்தான் தன்னைக்
கால்விரலால் தோள் நெரிய வூன்றினான் காண்
மெய்யின் நரம்பிசையால் கேட்பித் தாற்கு
மீண்டே யவற் கருள்கள் நல்கி னான்காண்
பொய்யர் மனத்துப் புறம்பா வான் காண்
போர்ப் படையான் காண்பொருவா ரில்லா தான் காண்
மைகொள் மணிமிடற்று வார் சடையான் காண்
மாகடல் சூழ் கோகரணம் மன்னி னானே. ௰

திருச்சிற்றம்பலம்.

## சுப்பிரமணியக் கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்

ஏகநா யகன் கயிலை இமையவர்கள் தம்பிரான்
இராவண னுள்ள மகிழ
ஈந்துசிவ லிங்கமொன் றீது தரை வையா
திலங்கையிற் கொடு போவெனச்
சாகரத் தின்கரையில் வரும்வேளை யொருபிரம
சாரியாய் வாங்கி யதனைத்
தரைவைக்க அதுசத்த பாதாளம் வேருறச்
சமர்செயுமி ராவணன் றன்
ஆகமொரு பந்தென வெடுத்தண்ட கூடமுற
அம்மானை யாடிவிளை யாட்
டதிபல பராக்கிரம விநாயகன் மகிழ்தம்பி
யம்பரவை ரத்னாகரச்
சீகரம் வந்துலவு கோகரணம் வாழ்முருக
சிறுதே ருருட்டி யருளே.
சிவன்மகா லிங்கபெல லிங்க மூர்த்தி யருள்குக
சிறுதே ருருட்டி யருளே.

## சிவ க்ஷேத்திர சிவநாமக் கலிவெண்பா

திகழ் துளுவ நாட்டிற் சிறந்து — புகழ்கொண்ட
கோகரண மேவுதிருக் கோகரண நாயகியாள்
பாகமுறு மாபல பரா பரா!

உ

# கோகர்ணம் தலமும் தலவிசேடமும்

கால்க ளாற் பயனென் — கறைக் கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக் — கால்களாற்பயனென் ?
(அப்பர் : திரு அங்கமாலை பண் — சாதாரி)

தில்லைச்சிற்றம்பலமும்... கோகரணம் கோடிகாவும்...
கயிலாய நாதனையே காணலாமே...
(அப்பர் : க்ஷேத்திரக் கோவை — திருத்தாண்டகம்)

## (1) இடம் :

கோகர்ணம் பம்பாய் மாகாணத்தில் வட கன்னடம் ஜில்லாவில் மேற்கடற் கரையில் உள்ளது. மார்மகோவாவில் கப்பலேறிக் கார்வார் வழியாகத் தெற்கே வந்தால் இந்தத் தலத்தை அடையலாம். தென் கன்னடம் ஜில்லாவில் உள்ள மங்களூரிலிருநது வடக்கே கடல் வழியாகவும் நில வழியாகவும் செல்லலாம். மங்களூரில் கப்பலேறிக் குண்தாப்பூர், ஹனோவர், கும்டா மார்க்கமாய்ச் சென்று ததரி என்னும் ஊரில் இறங்கி 4 மைல் சென்றாலும் கோகர்ணத்தை அடையலாம். மங்களூரிலிருந்து உடுப்பிக்குப் போய் அங்கிருந்து 60 மைல் ரோட் வழியாகவும் போய்ச் சேரலாம். ஹுப்ளி புகைவண்டி நிலையத்தில் இறங்கி அங்கோலா வழியாக நேராய் மோட்டார் வண்டியில் சுமார் 12 மணி நேரத்தில் கோகர்ணம் போய்ச் சேரலாம். இதுவே சுலபமான வழி. ஹுப்ளியிலிருந்து 55-மைல் தூரமுள்ள சீர்சி சேர்ந்து அங்கிருந்து 30 மைல் தூரமுள்ள உப்பின் பட்டணத்தை அடைந்து அங்கிருந்து 16 மைல் சென்றாலும் இத் தலத்தை அடையலாம். மைசூர் சமஸ்தானத்திலுள்ள கிருஷ்ணராஜபுரம் புகைவண்டி நிலையத்திலிருந்தும் மோட்டார் வண்டியில் சீர்சி அடையலாம். பங்களூர், தும்கூர், ஹரிஹர, ஹாவேரி மார்க்கமாகவும் மோட்டார் வண்டியில் சீர்சி சேரலாம்.

## (2) ஊர் :

கோகர்ணம் அரபிக் கடற் கரையில் உள்ளது. கோயிலுக்கு மேற்கே அரை பர்லாங்கு தூரத்தில் கடற்கரை; கோயிலுக்குத் தெற்கே ஊர். தபால், தந்தி வசதி உண்டு; கன்னட மொழி வழங்குகின்றது.

## (3) திருக்கோயில் :

பிரதான ஆலயம் ஸ்ரீ மஹாபலேசுரர் ஆலயம். கோயிலுக்குத் தெற்கிலும் மேற்கிலும் வாயில்கள் உள. கோயிலின் மேற்கு வாயில் வழியாகக் கடற் கரைக்குப் போகலாம். தெற்கு வாயில் வழியாகக்

கோயிலுக் குள்ளே சென்று வலம் வந்தால் தென் மேற்கில் தத்தாத்ரேயர் சந்நிதியும், வடக்கே ஆதி கோகர்ணர் சந்நிதியும் உள்ளன. அடுத்த உட் பிராகாரத்தில் தேவி தாம்ர கௌரி சந்நிதி கிழக்குப் பார்த்தது; அதற்கு அருகில் தாம்ர குண்டம் என்னும் சிறு தடாகம் உள்ளது. அதற்கும் உள் பாகத்தில் மூலவர் மஹாபலேசுரர் சந்நிதி உள்ளது. மேற்குப் பார்த்தது.

(1) **சுவாமி திரு நாமங்கள்:** பிராணலிங்கம், ஆத்மலிங்கம், கலகலேசுரர், மஹாபலர். (2) **தேவியார் திரு நாமம்:** தாம்ரகௌரி, (3) **தலத்தின் பெயர்கள்:** கோகர்ணம், ருத்ரயோனி, வருணாவர்த்தம், ராமசேதுகாசி. (4) **தீர்த்தங்கள்:** பக்கம் 10, 14, பார்க்க. (5) **வழிபட்டுப் பேறு பெற்றோர்:** பிரமன், கருடன், அகத்தியர், விஷ்ணுவர்மா, விகசன், காமதேநு, தர்மகுப்தன், மார்க்கண்டேயர், தருமதேவதை, ஷண்முகர், தாருணன், சரஸ்வதி, காயத்திரி, சாவித்திரி, நாகங்கள், பூமிதேவி, வசிஷ்டர், நிமி, விசுவாமித்திரர், சுமித்திரர், துர்க்கை, பாண்டவர், ஸ்ரீராமர், பீமன், ஔர்வர், சந்திரன், நாகராஜன், சிம்சுமாரன், சநத்குமாரர், அரண்யன், சுநாதன், அசோகன், காமன், சம்பு, ராவணன், கும்பகர்ணன், விபீஷணன், குபேரன், பைரவர், கண்டாகர்ணன், விநாயகர், பிரகலாதன், கிருஷ்ணமூர்த்தி, துர்வாசர், தத்தாத்ரேயர், வேதங்கள், வியாசர், சுகர், விசுவகர்மா சக்ரன், கௌதமர், ஹநுமார், காளி, சுஹோத்ரன், மேரு, ஜர்நுமுனிவர். சத்யதபர், இடும்பி, நகுடன், மணிபத்திரன், சித்தன், பூதநாதன், சந்திரதேவன், மாலினி, துர்முகன், சம்வர்த்தகன் முதலானோர் (பக்கம் 44, 47, 50-ம் பார்க்க.)

## (4) உற்சவம் :

கோகர்ணம் சிவராத்திரிக்குப் பேர் போனது. மாசி மாதத்தில் பிரமோற்சவம் நடக்கிறது. சிவராத்திரி தினத்தில் * ரதோற்சவம்.

* "சுரபிநீள் செவி யிலிங்கச் சுடருருவாயினான்ற னிரவினிற் திருத்தேர் மன்ற னடக்குமூ ரிவ்வூர்". (திருவிளையாடற் புராணம். அருச்சனைப் படலம் 12). சுடருருவாயினான் தன் இரவு—சிவராத்திரி.

## (5) பிற ஆலயங்களும் தீர்த்தங்களும் :

(1) **த்விபுஜ விநாயகர் :** இவரது ஆலயம் மஹாபலேசுரர் கோயிலுக்குக் கிழக்கே ½ பர்லாங்கு தூரத்தில் உள்ளது; இந்த விநாயகரே ராவணனைப் பந்தாடினவர். கம்பீரமான திருவுருவம். (2) **பெருமாள் கோயில் :** ஊரில் பெரிய கோயிலுக்குத் தெற்கே 2 பர்லாங்கு தூரத்தில் வெங்கடேசப் பெருமாள் ஆலயம்; (3) **பத்ரகாளி கோயில்:** இது பெருமாள் கோயிலுக்கு நேர் கிழக்கே ¾ மைல் தூரத்தில் உள்ளது. (4) **கோடி தீர்த்தம்:** இதுவே பிரதான தீர்த்தம் ; பெரிய குளம். இதில் முதலில் ஸ்நாநம் செய்ய வேண்டும் ; இது பெரிய கோயிலுக்குத் தெற்கே 2 பர்லாங்கு தூரத்தில் உள்ளது. (5) **ஷண்முகராலயம் :** கோடி தீர்த்தத்துக்குப் போகும் வழியில் உள்ளது. (6) **கோ கர்ப்பம்** - (பக்கம் 26 பார்க்க)- **கோயிலுக்குத் தெற்கே அடுத்துள்ள சத சிருங்க மலைமேலே சுமார்**

1 மைல் தூரத்தில் உள்ள ஒரு மலைக் குண்டில் உள்ள குகை இது. ஒரு பசுவின் வயிற்றில் நுழைந்து ஒரு ஏணி ஏறி, சற்றுக் கஷ்டத்துடன் வெளியில் வரும்படியான குகைவழி. (7) **ஜடாயு தீர்த்தம்:** கோகர்ப்பத்துக்கு நேர் மேற்கே ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இங்கு சிறு துளிகளாக நீர் வீழ்ச்சி விழுகின்றது, தரிசிக்கத் தக்கது. (8) **ராம தீர்த்தம்:** சிறிய தடாகம்; மலை நீர் இதில் விழுகின்றது. ஜடாயு தீர்த்தத்துக்குப் போகும் வழியில் உள்ளது.

## (6) தலத்தைப்பற்றிய பிற குறிப்புக்கள்:

கோகர்ணம் ஸ்ரீ சம்பந்தர், அப்பர் இருவர் தேவாரமும் பெற்ற தலம். ஸ்ரீ சம்பந்தப் பெருமான் திருக் காளத்தியி லிருந்தே தமிழ் வழங்காத வடநாட்டுத் தலங்களையும் மேற்றிசைத் தலங்களையும் பாடினர் எனச் சேக்கிழார் பெருமான் கூறுகின்றனர்; "குடக்கில்... அருந்தமிழின் வழக்கங்கு நிகழாதாக... கூற்றுதைத்தார் மகிழ்ந்த கோகரணம் பாடி" என்றார் (பெரிய புராணம் - சம்பந்தர்-1026 - 1027). "தெலுங்கு கடந்து கன்னட மெய்தினர்" (திருநாவு-350 — எனவருவதால் அப்பர் சுவமிகள் கோகர்ணத்தை நேரில் தரிசித்தனர் போலும். இத்தலம் சிவராத்திரிக்கு விசேஷமானது என்பதைப் பிரமோத்தர காண்டத்திலும், உபதேச காண்டத்திலும், சிவராத்திரி புராணத்திலும் காணலாம். காசி, ஸ்ரீசைலம் என்னுந் தலங்களிற்போல, இந்தத் தலத்திலும் பிராமணர் அல்லாதாரும் தீர்த்தம் கொண்டுவந்து தாமே மஹாபலருக்கு அபிஷேகம் செய்யலாம். கோகர்ணம் எனப்பெயர் வந்ததின் காரணம்—இந்த நூலில் ஒருவாறிருக்க (பக்கம் 2) சிவராத்திரி புராணத்தில் வேறுவகையாக உள்ளது. விநாயக மூர்த்தியால் கீழே வைக்கப்பட்ட லிங்கத்தை இராவணன் தனது இருபது கைகளாலும் எடுக்க முயன்ற போது அந்த லிங்கம் வாராதது கண்டு இது "மா பெலம்" என்றான். அது முதல் அந்த லிங்கம் 'மாபல லிங்கம்' எனப் பேர் பெற்றது. அவன் அங்ஙனம் எடுத்த பொழுது லிங்கமானது பசுவின் காது போல மெலிந்து நிமிர்ந்ததாம். அதனால் ஊருக்குக் கோகர்ணம் எனப்பெயர் வந்ததாம். "இலிங்கம் மெலிந்து நிமிர்ந்தது கைந்தங்கே, ஆவின் நெடுஞ் செவி போல நிமிர்ந்திடும் அதனால் ஊர், காவினிடும் பெயர் கோகன மென்றனர்" (சிவராத்திரி புராணம்). மாபல லிங்கம் எனப் பெயர் வந்ததின் காரணத்தை க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத் தமிழ்ச் செய்யுளால் (பக்கம் vii) அறியலாகும்.

இத் தலத்துக்கு ஒப்பான வேறு தலம் இல்லை என்பதற்கு—

**"ஆடு முனிக் குழு ஆயிர கோடி; அரன் சீரைப்**
**பாடு முனிக் கணம் எண்ணில ; சித்தி படுத்தி யோகிற்**
**கூடு முனித் திரள் பற்பல , உற்றிடு கோகன்னம்**
**வீடு பெறற் கினி யப்பதி யொப்புள வேறுண்டோ"**

எனவரும் சிவராத்திரி புராணச் செய்யுள் ஓதி மகிழத் தக்கது.

உ

# கோகர்ண புராண சாரம்

---

## காப்பு

### விநாயகர்

எண்ணிய நம் எண்ணமெலாம்
　　எளிதினிலே ஈடேற இன்பம் வாய்க்கத்
திண்ணியதோ ளிரண்டுடையான்
　　கோகரணத் தலமுறைவான் செம்மை சேரும்
புண்ணியர்கள் வேட்டவரம் அளித்திடுவான்
　　புழைக்கைமுகம் பூண்டான் தாளைக்
கண்ணிநிதங் கருத்திருத்திக் கருத்திருத்தும்
　　வகை நாடிக் களிப்போம் நாமே.

## அத்தியாயம் 1.

## கோகர்ணத் தல விசேடம்

### சூதமுநிவர் வருகை

முன்னொரு காலத்தில் பரீக்ஷித்தின் குமரனும் ராஜரிஷியுமான சதாநீகரும் சௌநகாதி முநிவர்களும் இருந்த இடத்துக்கு வியாசமுநிவரது மாணக்கரும் ரோமஹர்ஷணர் புதல்வருமான சூதமுநிவர் வந்தார். வந்த சூதமுநிவர் தாம் கோகர்ணம் என்னும் தலத்திற் பலகாலம் தங்கியிருந்து வந்ததாகக் கூறினர். அதைக் கேட்ட சதாநீகர் கோகர்ண தலத்தின் சிறப்புக்கள் யாவை என வணங்கிக் கேட்கச் சூதமுநிவர் கூறுகின்றார்.

## கோகர்ணம்-பெயர்க்காரணம்-பிறபெயர்கள் தலவிசேடம்.

கோகர்ண ஸ்தலத்தின் பெருமையை முதல்முதல் மஹே சுரர் ஷண்முகருக்கு விரித்துரைத்தார். ஷண்முகர் நாரதருக்கு அதை விளக்க நாரதர் அதை அக்னி சுதருக்குச் சொன்னர். தேவர்களும் அறியாத பெருமை வாய்ந்த சித்திக்ஷேத்திரங்கள் மூன்று ; அவைதாம்:— (1) சாலக்ராமம் (2) புஷ்கரம் (3) கோகர்ணம். இவை மூன்றிற் கோகரணமே விரைவிற் சித்தி தரும் ஸ்தலம். ஒரு காலத்திற் படைப்புத் தொழிலை மேற்கொளக் கருதிப் பிரமதேவன் தவஞ்செய்ய அவர் புருவ மத்தியில் ருத்ரப் பிரபு தோன்றி நரையும் மரணமும் இல்லாத சாத்துவிக குணம் ஒன்றே யுள்ளவராய் ஒருவரை ஒருவர் ஒத்தவராய் உள்ள பிரஜை களைச் சிருஷ்டிக்க நிச்சயித்து, மூன்று யுகமாகப் பாதாளத்தில் தவத்திலிருக்கப் பிரமதேவர் ருத்ர சிருஷ்டியின் தாமதத்தைக் கண்டு தாமே முன்போற் சிருஷ்டித்தார். ருத்ரமூர்த்தி பிரகிருதி (மாயை) மூலமாக இதைக் கேட்டுப் பூமிதேவியை நோக்கி 'நான் வெளியே செல்ல வழி காட்டுக' எனக் கோபத்துடன் கேட்டார். பூதேவி "கிருபாநிதியே! நானோ ஒரு பெண்; குற்றமற்றவள்; உங்கள் கோபத்துக்கு அஞ்சுகின்றேன். நீங்கள் ஒரு சிற்றுரு எடுத்து என் காதின் தொளை வழியாக வெளியே செல்லுங்கள்" என்றனள். ருத்ர மூர்த்தியும் அப்படியே என்று சொல்லி அங்குஷ்ட அளவான வடிவெடுத்து மேலே வெளிவந்து பூதே வியை நோக்கி, "மங்களமானவளே! என்னுடைய சங்கமத்தால் உன்பாற் சண்ட வீரியமுள்ள அங்காரகன் எனப் பெயரிய பிள்ளை தோன்றுவான். உனக்குக் "கோ' (பூமி) என்னும் பெயருண்டு. உனது கர்ண ஸ்தானத்திலிருந்து (காதிலிருந்து) நான் வெளிவந்த இடமாகிய இந்த ஸ்தலம் கோ கர்ணம் என இனிப் பெயர் வழங் கும். பாதாளத்தினின்றும் நான் இந்த மேல் வந்த காரணத்தால் யோநி துல்யமான இந்த ஸ்தலம் ருத்ர யோநி எனவும் பெயர் பெறு வதாகும். கற்பகால முடிவிலும் கடலின் நடு இடம் அடைந்து இத்தலம் நாசம் அடைவதில்லை யாதலால் "வருணவர்த்தம்" என்னும் பெயரும் வழங்கப்பெறும். யார் தினந்தோறும் காலையில் எழுந்து கோகர்ணத்தை நினைக்கின்றார்களோ அவர் இரவிற் செய்த பாவம் அந்த க்ஷணமே நாசமடையும்; பகலிற் செய்த பாவம் பிற்பகலில் நாசமடையும். ஐந்து குரோச[1] பரி மாணம் உள்ள இந்த க்ஷேத்திரத்தை யார் தரிசிக்கின்றார்களோ அவர் ஜன்ம முதற் செய்த எல்லா பாவமும் நாசம் அடையும். யார் இந்தத் தலத்தில் உள்ள புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நானஞ்

1. குரோசம்—$2\frac{1}{4}$ மைல் கொண்ட தூரம்

செய்கிறார்களோ அவர் தம் மூன்று ஜன்ம பாவம் தொலைந்து போம். எவ்வாறு எப்பொழுதும் தேவியுடன் கைலாசத்தில் இருக்கின்றேனோ அவ்வாறு கோகர்ண மண்டலத்திலும் எப்பொழுதும் இருக்கின்றேன். ஸ்ரீசைலம், காசி, ராமசேது, கோகர்ணம், முதலிய புண்ணிய பூமிகளில் அந்தப் பிரதான தேசம் தொடங்கிப் பன்னிரண்டு யோசனை[1] யளவுள்ள மண்டலத்தில் வசிக்கின்றேன்" எனக் கூறினர்.

## ருத்ர பூமி

ருத்ரமூர்த்தி பூமிதேவிக்கு இவ்வாறு சொல்லி ஈசான திசையை அடைந்து, பிரமாவின் சிருஷ்டியைக் கோபித்துச் சிவகணங்களைப் படைத்தார். அப்பொழுது விஷ்ணுமூர்த்தி அங்கு வந்து "ஓ! கடவுளே! பிரம சிருஷ்டியை முடிவில் நீங்களே அழிப்பீர்கள்; இப்பொழுது கோபம் வேண்டாம்" என்றார். ருத்ரமூர்த்தியும் கோபம் தணிந்து, 'யாம் உகந்த இந்த ஈசான பாகம்—ஈசான பூமி, ருத்ரபூமி எனப் பிரசித்தம் உற்றதாய், மனிதருக்குத் தகன கிரியையால் மோக்ஷந் தருவதாக; நான் இவ்விடத்தில் பிரகிருதி (மாயை) யுடனும் சிவகணங்களுடனும் வசிக்கின்றேன்' என்றனர். விஷ்ணுமூர்த்தியும் அப்படியே செய்யுங்கள் எனச் சொல்லித் தமது உலகத்தை அடைந்தார்.

## பிராணலிங்க வரலாறு

கோகர்ண ஸ்தலத்தில் நித்ய வாசத்தையும், அங்குள்ள முத்தி மண்டபத்தில் மரணம் அடைதலையும், அங்குள்ள ருத்ரபூமியில் தகனம் ஆதலையும் தேவரும் விரும்புகின்றனர். மஹேசுரர் வருங்கால நிகழ்ச்சிகளை மனத்திற்கொண்டு சகல ஜீவராசிகளின் சத்வ பாகத்தைக் கவர்ந்து அதைக்கொண்டு நான்கு கால்கள் மூன்று கண்கள் கொண்ட சொர்ண மயமான உத்தம மிருகம் ஒன்றைப் படைத்தார். மூவர் (ருத்ரர், விஷ்ணு, பிரமா) வலிமையினின்றும் மூன்று கொம்புகளையும் அவ்வாறே படைத்தார். இந்த சிருஷ்டியினால் எல்லா உயிர்களும் தத்தம் வலிமையை இழந்தன. இதைக்கண்ட விஷ்ணுவாதிதேவர்கள் மஹாதேவரைப் பூஜித்து முறையிடச் சிவபிரான் திருப்தியுற்று அந்த சத்வமயமான மிருகத்தைத் தந்தார்; தேவர்கள் அம்மிருகத்தைப் பங்கிட்டுத் தத்தம் வன்மையை அடைந்தனர். பிரமனும், விஷ்ணுவும், ருத்ரரும் தத்தம் கொம்பை எடுத்துக்கொண்டார்கள். ருத்ரர் தமது பங்கான கொம்பைப் பக்தியுடன் பூஜை செய்து கொண்டிருக்கின்றார். இதுவே "பிராண லிங்கம்" என்றும், "ஆத்மலிங்கம்" என்றும் சொல்லப்படுகின்றது.

---

1. யோசனை—4 குரோசம் கொண்ட நீட்டளவு; 9 மைல்கொ

## பிராணலிங்க மாஹாத்மியம்

ஒரு காலத்தில், மூவுலகங்களையும் ஆளவேண்டும் எனக் கருதித் தேவர்களும் அசுரர்களும் போர் செய்ய அசுரர்கள் வென்றனர். அதன்மேல் தேவர்கள் இந்தப் பிராணலிங்கேசரைப் பூஜைசெய்து, ஆற்றல் பெற்று, அசுரர்களை வென்று தம் மனோரதங்களைப் பெற்றார்கள். ஆதலால், எவன் இந்த லிங்கத்தைப் பூஜை செய்கின்றானோ அவன் தான் விரும்பினதை அடைகின்றான். இது நிச்சயம்.

## இராவணன் பிராணலிங்கேசரைத் தவஞ்செய்து பெற்றது

பிராணலிங்கேசரின் மகத்துவத்தை அறிந்து அதைப் பெற ராவணன் கயிலைக்குச் சென்று அருந்தவம் இயற்றினான். அதனையறிந்த நாரதர்—தேவர்களுக்கு அதை வெளியிட்டு ராவணன் அந்த லிங்கத்தைப் பெற்றால் நீங்கள் திருவும் வலிமையும் இழப்பீர்கள் எனச் சொல்லிப் போனார். ராவணன் சிவபிரானிடம் அந்த லிங்கத்தைப் பெற்று 'அதை மத்தியில் பூமியில் எவ்விடத்தும் வைக்கக் கூடாது' என்னும் கட்டளையுடன் இலங்கைக்கு வழி நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தான்.

## கோகர்ணத்தில் விநாயகமூர்த்தி லிங்கப் பிரதிஷ்டை செய்தது

வழி நடந்த ராவணனை இந்திராதி தேவர்கள் பின் தொடர்ந்தார்கள். லிங்கத்தை இராவணன் இலங்கைக்கு எடுத்துக் கொண்டு போகாத வழிக்கு உபாயம் ஒன்று செய்ய வேண்டி விநாயக மூர்த்தியை வேண்டினர். ராவணன் பித்ருஸ்தாலி நதிக்குச் சமீபத்திற் செல்லும்போது விஷ்ணுமூர்த்தி தமது மாயையால் சூரியனைச் சக்கரத்தால் மறைத்தார். கையில் லிங்கத்தை வைத்துக் கொண்டு சந்தி அநுஷ்டானம் எப்படிச் செய்வதென்று ராவணன் கவலை கொண்டான். அப்பொழுது விநாயகர் சிறு பிள்ளை வடிவாக ஒரு முனி புத்திரனைப் போல ஒரு புறம் வந்தார். ராவணன் அவரை ஒரு முனி குமாரன் என நினைத்து "முனிபுத்திரனே! இந்த லிங்க ரத்தினத்தை ஒரு முகூர்த்த காலம் பிடித்துக்கொள். இந்த நதியில் நான் சந்தியா விதியை முடித்துக்கொண்டு சீக்கிரமாக லிங்கத்தை வாங்கிக் கொள்ளுகின்றேன். இந்த லிங்கத்தைப் பூமியில் வைக்கக் கூடாது." என்றனன். அதற்கு விநாயகர் "இந்த லிங்கம் பெரியது. நான் சிறியவன். நெடுநேரம் என்னால் தாங்கமுடியாது. ஆதலால்

நான் உன்னை மூன்று முறை கூப்பிடுவேன். அதற்குள் நீ வரா விட்டால் லிங்கத்தைப் பூமியில் வைத்து விடுவேன்' எனப் பதில் கூறி லிங்கத்தைத் தனது கையிற் பெற்றுக்கொண்டார். ராவணன் சந்தித் தியானத்தில் அமர்ந்தான். அந்தச் சமயத்தில் தேவர்கள் அந்த ப்ராண லிங்கத்துக்கு மூன்று லோக பாரங்களும் ஒருங்கு அமையும்படிச் செய்தார்கள். விநாயகர் ராவணனை மும்முறை கூவி அந்த லிங்கத்தை சிலேஷ்மாதக வனத்தில் தாபித்தார். வைவச்வத மநு அந்தரத்தில், இருபத்து மூன்றுவது திரேதா யுகத்தில், ஈசுர வருஷத்தில், சரத் காலத்தில், கார்த்திகை மாதத்தில், சுக்லபக்ஷம் பிரதமையில் வியதீபாத ஞாயிற்றுக் கிழமையில், மீன லக்னத்தில், விசாகத்தில் இங்ஙனம் லிங்கமானது பிரதிஷ்டிக்கப்பட்டது. உடனே விஷ்ணு மூர்த்தி சூரியனை மறைத்த சக்கரத்தை எடுத்துக்கொண்டார். வானவர் பூமழை பொழிந்தார்; துதித்தார்; அப்ஸர கணத்தவர் வீணை, புல்லாங்குழல், ம்ருதங்கங் கள் வாசித்துப் பாடி நடித்தார்கள்.

(ஸ்காந்தம் - கோகர்ண கண்டம் - கோகர்ண மாஹாத்மியம் ஸாரோத்தாரத்தில் முதல் அத்தியாயம் முற்றும்.)

## அத்தியாயம் 2.

### ராவணன் மூர்ச்சித்ததும் லிங்கமூர்த்தி கலகலேசுரர் எனப் பெயர் பெற்றதும்

சூரியன் பிரகாசிப்பதை ராவணன் கண்டான்; லிங்கம் பூமியிற் ப்ரதிஷ்டிக்கப்பட்டதைப் பார்த்தான். பெருங் கோபங் கொண்டான். தனது முழங்காலைப் பூமியில் ஊன்றி இரண்டு கைகளாலும் லிங்கத்தைப் பிடித்து இழுத்துத் தூக்க முயன்றான். தனது முழு பலத்தையும் செலுத்திப் பார்த்தான். சக்தியற்று மூர்ச்சித்து விழுந்தான். அப்பொழுது அந்த இடத்தில் "கல கல" என்னும் பேரொலி உண்டாயிற்று தேவர்கள், முனிவர்கள் போற்ற லிங்கமூர்த்தி "கலகலேசுரர்" என்னும் திருநாமம் பெற்றார். இந்த லிங்கத்தைத் தரிசித்த அளவில் எப்படிப்பட்ட கொடிய பாவமும் அழிந்து போகும். இந்த லிங்கத்துக்கு அருகில் வடதிசையில் வைவாஹிகம் எனப் பெயர்பூண்ட கிரி சர்வ சித்தர்களாலும் வணங்கப் பெற்றதாய் விளங்குகின்றது. அதை வலம் வந்து 'ஹர' அல்லது 'ஹரே' எனக் கூட்டி அஷ்டா க்ஷரத்தை உரக்கச் செபிப்பவனுக்கு மரணம் என்பது கிடையாது.

## லிங்கமூர்த்தி 'மஹாபலலிங்கம்' எனப் பெயர்பெற்றது.

மூர்ச்சித்து விழுந்த இராவணன் மூர்ச்சை தெளிந்ததும் கோபத்தால் துடித்துச் சிறு பிள்ளை உருவத்தோடு நின்ற கணபதியைத் தலையிற் குட்டினான். இங்ஙனம் தனது முயற்சி பயனற்றதாகி ராவணன் நாணத்துடன் இலங்கை சேர்ந்தனன். லிங்கத்துக்குத் தென்கிழக்கில் கணபதியும் நாற்பதடி தூரத்தில் மேற்கு நோக்கி நின்ற திருக் கோலத்தோடு பொலிகின்றனர். தேவர்களும் கண்டகி க்ஷேத்திரத்திலிருந்து சாலக்ராம சிலாமயமான உத்தம பீடத்தைக் கொண்டுவந்து அந்த லிங்கத்துக்கு இணைத்துச் சேர்த்தார்கள். பின்பு மஹேசுரர் வாயு மூலமாக எல்லா விவரங்களையும் அறிந்து கோகர்ணத்துக்கு வந்து, கணபதியாற் பிரதிஷ்டிக்கப்பட்ட அந்த லிங்க ரூபத்தில் ராவணனுடைய நகக்கீறல் இருப்பதைக் கண்டு வருந்தித் "துஷ்டன் வசத்திற் கொடுத்ததால் இந்த அபராதம் என்னுடையதே. ஆயினும் கோகர்ணம் யான் தோன்றிய இடமாதலால் இங்கு எனக்குப் பிரசித்தமும் பெருமையும் உண்டு" என மதித்துத் தேவர்களை நோக்கித் "தேவர்களே! இந்த லிங்க ரத்னம் திரிலோகத்திலும் பலவானான ராவணனைத் தனது பலத்தால் ஜயித்த காரணத்தால் இந்த லிங்கத்துக்கு "மஹாபலம்" என்று பெயர் எனச் சொல்லிப் பார்வதியுடனும் கணங்களுடனும் அதை நமஸ்கரித்து—

"ராஜலிங்கமே! உனக்கு நமஸ்காரம்; லிங்க ரத்னமே! உனக்கு நமஸ்காரம்; ராவணனது புஜகர்வம் முழுமையும் அடக்கியவனே! உனக்கு நமஸ்காரம்; எனது பாக்கியப் பொருளே! உனக்கு நமஸ்காரம்; முக்குணங்களுக்கும் மூலகாரணனே! உனக்கு நமஸ்காரம்; கஜானன மூர்த்தியாற் பிரதிஷ்டிக்கப் பெற்றவனே! உனக்கு நமஸ்காரம்; வேதமுடிப் பொருளே! ஜோதியானந்த மூர்த்தியே! உனக்கு நமஸ்காரம்; திரசிரனுக்குப் பவரோக பயத்தைச் சிதைத்தவனே! உனக்கு நமஸ்காரம்; கோகர்ண க்ஷேத்திரத்திற் பிரியத்துடன் வாழும் மஹாபலமே! உனக்கு நமஸ்காரம்" எனத் துதிகள் கூறிக் கணபதியின் அருகில் வந்து அவரை அணைத்துக் கொண்டு, 'எவன் முதலில் உன்னைப் பூஜை செய்து பின்பு இங்குள்ள மஹாபல நாதரைப் பூஜிக்கின்றானோ அவன் இஷ்டப்பட்ட பொருளைப் பெறுவானாக' எனக் கூறிக் கணபதியையும் மஹாபலரையும் விதிமுறை பூஜித்துத் தேவர்களை நோக்கிக் கூறுகின்றார்:—

## கோகர்ண ஸ்தல விசேஷமும் மஹாபல லிங்கத்தின் பெருமையும்

"தேவர்களே ! இந்த லிங்கம் கார்த்திகை மாதத்திற் பிரதிஷ்டிக்கப் பெற்றது. ஆதலின் கார்த்திகையில் நாம் இங்கு வசிப்போம். மஹாபலரைப் பூசிப்போம். எவன் அப்பொழுது இங்குக் கோடி தீர்த்தத்தில் முழுகி மஹாபலரைப் பூசித்துச் சிறிதளவேனும் தானம் கொடுக்கின்றானோ அவன் கர்ம பந்தம் நீங்கி விடுபடுகின்றான். இத் தலத்தில் எது கொடுக்கப்பட்டாலும், ஓமம் செய்யப்பட்டாலும், ஜெபிக்கப் பட்டாலும் அது எனது திருவருட் ப்ரசாதத்தால் அளவு கடந்த பலனைத் தருவதாகும். கோகார்ண யாத்திரைக்கு விஷுவுடன் கூடிய கார்த்திகை (மதி) விசேஷம். மாக (மாசி) கிருஷ்ண சதுர்த்தசி (மஹாசிவராத்திரி) நள்ளிரவில் எவன் மஹாபல நாதரை ஏக (ஒரு) வில்வ பத்திரத்தினாலாவது அணு அளவு ஜலத்தினாலாவது பூசிக்கின்றானோ அவனது புண்ணியப் பேற்றை எடுத்துரைக்கப் பிரமனாலும் முடியாது. கோகர்ணம், வில்வ பத்திரம், லிங்கரத்ன மஹாபலர், சிவராத்திரி இந்த நான்கும் ஒருங்கே கிடைப்பது அரிதல்லவா! அந்தப் புண்ணிய தினத்திற் கொடுக்கப்படுவது ஒன்றுக்குக் கோடியாகப் பலன் அளிக்கும்.' இங்ஙனம் மாஹாத்மியங்களை எடுத்துக் கூறிச் சிவபிரான் கயிலையை அடைந்தார்.

கிருத யுகத்தில் மஹாபல லிங்கம் வெண்ணிறமாயும், திரேதா யுகத்தில் அதிக சிவப்பு நிறமாயும், துவாபர யுகத்தில் மஞ்சள் நிறமாயும், கலியுகத்திற் கறுப்பு நிறமாயும் விளங்கும். கோர கலியுகம் வந்தால் ம்ருதுத் தன்மை அடையும். இந்த லிங்கத்தைத் தரிசித்தாலும், அருகிலுள்ள கடலொலியைக் கேட்டாலும், இங்குள்ள கோடி தீர்த்தத்தில் முழுகினாலும் மறு பிறப்புக் கிடையாது. கோகர்ண ஸ்தலத்தில் கல்லெல்லாம் இலிங்கம், புனலெல்லாம் கங்கை, தலவாசிகள் யாவரும் முனிவர். ஒருவன் பிரமஹத்தி முதலாய நூறு பாவங்கள் செய்தாலும் இத்தல எல்லையை ஒரு முறை அணுகினால் அவன் பாதகங்கள் யாவும் விலகிவிடும். இந்திரன், பிரமன், திருமால் ஆதிய தேவர்களின் விருப்பத்துக்கு இணங்கிச் சிவபிரான் "மஹாபலர்" என்னும் திருநாமத்துடன் இங்கு விளங்குகின்றார். இங்கு ஒரு தினத்திற் செய்யும் உத்தம கருமம் வேறிடத்தில் லக்ஷ வருஷங்கள் செய்ததற்கு நிகராகும்.

## மஹாபலநாதரைத் தொழுது வழிபடுவோர்.

(1) கிழக்கு வாயில் வழியே வந்து சேவிப்பவர் :— இந்திரன், பிரமன், திருமால், விஸ்வ தேவர்கள், தேவகணங்கள், ஆதித்தர்கள், வசுக்கள், ருத்ரர்கள், சந்திரன் (நக்ஷத்திரங்களுடன்) — தத்தம் பரிவாரங்களுடன் ;

(2) தெற்கு வாயில் வழியே வந்து வழிபடுவோர் :— காலன், ம்ருத்தியு, எமன், சித்ரகுப்தன், பாலகர், பித்ருக்கள், ருத்ரர்கள்.

(3) மேற்கு வாயில் வழியே வந்து வழிபடுவோர் :— விபாவசு (அக்கினி), சித்ராதன் (சங்கீதத் தலைவன்), சித்ரசேனன், மஹாபலன்,—இவர்கள் கந்தர்வ வர்க்கத்துடன் பாடுகின்றார்கள்; ரம்பை, கிருதஸ்தலை, மேனை, பூர்வசித்தி, திலோத்தமை, ஊர்வசி முதலிய தேவ ஸ்திரீகள் சம்புமூர்த்தியின் சந்நிதானத்தில் நடனஞ் செய்கின்றார்கள்.

(4) வடக்கு வாயில் வழியே வந்து வழிபடுவோர் :— வசிஷ்டர், கச்யபர், கண்ணுவர், விசுவாமித்திரர், ஜைமினி, பரத்வாஜர், ஜாபாலி, கிருது, ஆங்கிரசு, கௌதமர், ஜமதக்னி, பார்க்கவர், அத்திரி, பராசரர், வியாசர், சுகர் முதலிய எல்லாப் பிரமரிஷிகளும், மற்றும் முனிவர்களும்.

(5) மேலிருந்து வழிபடுவோர் :— நாரதர், வாலகில்யர், மரீசி முதலிய பெரியோரும் சனகராதி மஹாத்மாக்களும்; இன்னும் நாகர்கள், பிசாசர்கள், வேதாளங்கள், அசுரர்கள், முதலியோர் யாவரும். மேற்சொன்ன பெரியோர்கள் தத்தம் பெயரால் ஆசிரமும், தீர்த்தமும், லிங்கமும் வேறு வேறு தாபித்தனர். அவை முப்பத்து முக்கோடி தீர்த்தமும், லிங்கமும் என நிச்சயிக்கப் பட்டுள. இங்ஙனம் அமைக்கப்பட்ட சகல லிங்கங்களுக்கும் ஏக சக்ராதிபதியாகும் மஹாபல லிங்கம். சகல தீர்த்தங்களுக்கும் முதன்மையானது கோடி தீர்த்தம்.

## தல விசேடம்

தாய் தந்தையரைக் கொன்றவரும், உயிர் வதை செய்தவரும், நன்றி கொன்றவரும், பிறன் மனைவியை இச்சித்தவரும், கோகர்ணத்தில் புண்ணிய தீர்த்தத்தில் முழுகி மஹாபல நாதரைப் பூசிக்க வீட்டின்பம் பெறுகின்றார்கள். கோகர்ணமே காசி, மகாபலரே விசுவ நாதர், கோடி தீர்த்தமே கங்கா நதி. இங்கு சமுத்திர தீர்த்தம் காசியினும் அதிகமாயுள்ளது. கோகர்ணம் “ ராம சேது காசி ” எனும் முத்தலங்களாகக் கருதப்படுகின்றது.

## கோகர்ணத்திற் செய்யவேண்டிய ஸ்நாந விதிகள் முதலிய

கோகர்ணத்தை அடைபவன் முண்டனம், உபவாசம், சிராத்தம் இவைகளை விதிப்படி செய்யவேண்டும். கங்கையிலும், பாஸ்கர க்ஷேத்திரங்களிலும், சௌளம் (குடுமிக் கலியாணம்) உபநயனம் செய்தல் விசேஷம் ; ஒன்பது மாதம் கழித்து மறுபடி இத்தலங்களுக்கு வந்தால் க்ஷௌரம், உபவாசம் செய்தல் வேண்டும். சிவபிரான் வீற்றிருக்கும் புண்ணிய ஸ்தலங்கள் பாஸ்கரக்ஷேத்திரங்கள் எனப்படும். அவைதாம் :—

1. காசி, 2. புஷ்பகிரி, 3. காஞ்சி, 4. நிவிருத்தாக்கியம்,
5. அலம்புரி, 6. ஸ்ரீசைலம், 7. விரூபாக்ஷம், 8. சேது,
9. கேதாரம், 10. கோகர்ணம்.

முதலில் கோடி தீர்த்தத்தில் முழுகி, பிரமதண்டக்கிரியை செய்தல் வேண்டும். விதிமுறை க்ஷௌரம் செய்து ஸ்நாநம் பத்து விதம் செய்தல் வேண்டும். பஸ்மம், கோமயம், மிருத்து, பஞ்ச கௌவியம், மலாபகர்ஷணம் (எண்ணெய் ஸ்நாநம்) முதலாக ஸ்நாநம் பத்து விதம். பிறகு சமுத்திரத்தில் விதிப்படி முழுகி பிண்டாதிகளைச் செய்தல் வேண்டும். சர்வ தீர்த்தங்களும் சமுத்திரத்தை அடைகின்ற காரணத்தால் சமுத்திர ஸ்நாநம் முத்தி தருவதாகும். ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளில் அமாவாசை வந்தால் அப்பொழுது சமுத்திர ஸ்நானம் அதிக பலன் தரும். சேது, சிந்து, சரஸ்வதி, கோகர்ணம், புருஷோத்தமம், சமுத்திரம் இவைகளில் ஸ்நாநம் எல்லாக் காலங்களிலும் விசேஷம். மற்றைய க்ஷேத்திரங்களில் பருவ காலத்தில் ஸ்நாநம் விதித்திருக்கின்றது. பிப்பலாதர், கவிகண்வர், க்ருதாந்தர், ஜீவிதேசுரர், மந்யு, காள ராத்திரி, வித்யை, துர்க்கை, கணுதிபர், தேவர்கள், ருஷிகள், பித்ருக்கள் இவர்களை விதிப்படி திருப்தி செய்து மறுபடி ஸ்நானஞ் செய்து, பிராமணர்களுக்கு விதிப்படி கோ, பூமி, எள், பொன் முதலிய தானம் தக்ஷிணையுடன் தருதல் வேண்டும். பின்பு பித்ரு ஸ்தாலியை அடைந்து பித்ருக்களுக்குப் பிண்டம் தரவேண்டும். இங்ஙனம் செய்யப் பித்ருக்கள் கோடி குலத்தினர் சுவர்க்கத்தை அடைகின்றார்கள். ருத்ர பதத்திலும் மூழ்கி, மஹா பலரை அருச்சித்து, தீர்த்த மாஹாத்மியத்தைக் கேட்க வேண்டும். இரவில் நித்திரை செய்யக் கூடாது. பிராமணர்களுக்கு அன்னமிட்டுப், பின்பு, தான் மௌனமாக இருந்து உண்ணுதல் வேண்டும்.

## தீர்த்தங்களின் விவரம்

இங்ஙனம் விதிகளை அநுஷ்டித்து முக்கியமான 33 தீர்த்தங்களில் 33 தினங்களில் கிரமமாக ஸ்நாநம் செய்து அங்கங்குள்ள லிங்கத்தை அர்ச்சிக்க வேண்டும்.

33 தீர்த்தங்களின் பெயர் :—

1. கோகர்ண தீர்த்தம்.
2. குக தீர்த்தம்.
3. தாம்ர கௌரி நதி.
4. காயத்ரி தீர்த்தம்.
5. ராம தீர்த்தம்.
6. பிரமகுண்ட தீர்த்தம்.
7. விஸ்வாமித்ர தீர்த்தம்.
8. சங்கம தீர்த்தம்.
9. சக்ர தீர்த்தம்.
10. கபில தீர்த்தம்.
11. அரண்ய தீர்த்தம்.
12. அக்கினி தீர்த்தம்.
13. விநாயக தீர்த்தம்.
14. குபேர தீர்த்தம்.
15. நாத தீர்த்தம்.
16. சாம்வர்தக தீர்த்தம்
17. சூரிய தீர்த்தம்
18. மார்க்கண்டேய தீர்த்தம்.
19. பாபநாச தீர்த்தம்.
20. துர்க்காகுண்ட தீர்த்தம்.
21. நாக தீர்த்தம்.
22. கோடி தீர்த்தம்.
23. உந்மஞ்சனமஹா தீர்த்தம்.
24. வைதரணி நதி.
25. அசோக பஞ்சக தீர்த்தம்.
26. கங்கா தாரம்.
27. பீமகுண்ட தீர்த்தம்.
28. அகத்திய தீர்த்தம்.
29. வசிஷ்ட தீர்த்தம்.
30. கருட தீர்த்தம்.
31. மாலினி நதி.
32. சிம்சுமார தீர்த்தம்.
33. ஏகபிந்தாதி விந்து தீர்த்தம்.

இவை ஒவ்வொன்றும் கோடி தீர்த்தங்களுக்கு நாயக மாகும்.

‘ சூரிய மூர்த்தியே ! உன் கிரணங்களால் பிரமாண்ட மத்தியில் உள்ள தீர்த்தங்கள் தொடப்பட்டன. ஆதலால் அந்த உண்மை நிலையில் கோகர்ணத்தில் உள்ள தீர்த்தங்களில் நீ ஆவாஹிக்கப் பட்டவனாய் இரு” என்ற மந்திரத்தை ஓதி ஸ்நாநம் செய்தல் வேண்டும். இவற்றுள் ஸ்நாநம் செய்யச் சக்தி யற்றவன் (1) கோகர்ண தீர்த்தம் (2) குக தீர்த்தம் (3) தாம்ர கௌரி நதி (4) காயத்திரி தீர்த்தம் (5) கோடி தீர்த்தம் (6) பிரமகுண்ட தீர்த்தம் (7) ராம தீர்த்தம் (8) சங்கம தீர்த்தம் எனப்படும் எட்டு தீர்த்தங்களிலும் கோகர்ணம், சதசிருங்கம், தாம்ர கௌரி நதி, தீர்த்த ராஜம், சமுத்திரம் என்னும் புண்ய பஞ்சக மாகும் இவ் வைந்தையும் சிந்தித்து ஸ்நாநம் செய்ய வேண்டும். இங்ஙனம் பக்தியுடன் செய்பவர்கள் மஹாபலேசுரர் திருவருளாற் சகல புண்ணியங்களையும் அடைந்து, பலவித போகங்களை அநுபவித்து, சிவலோகம் சேர்வர்.

இரண்டாம் அத்தியாயம் முற்றும்

# அத்தியாயம் 3.

## சதசிருங்க கிரியின் வரலாறு

### கருடனும் அகத்தியரும்

இமயமலையின் பின்பக்கத்தில் மூன்று இடங்கள் உள்ளன:— கிழக்கில் விஷ்ணு ஸ்தானம் இந்திர நீலமலை; அதனினும் மிக உத்தமமானது மேற்கில் சங்கர ஸ்தானம் கயிலைமலை; மத்தியில் பிரமாவின் ஸ்தானம் சதசிருங்ககிரி என்பது; இந்த கிரி சண்பகாதி விருக்ஷங்களாற் சூழப் பெற்றதாய்த் தேவர்கள், கந்தர்வர்கள், சித்தர்கள் வாசஸ்தலமாய், புண்ணிய தீர்த்தங்கள் பல பொலிவன வாய் விளங்கும். கருடன் ஒரு காலத்தில் துர்முகன் என்னும் சர்ப்பத்தைத் தூக்கிக்கொண்டு பறந்து சென்று சத சிருங்க கிரியின் உச்சியில் தங்கி அந்த சர்ப்பத்தைத் தின்னும் விருப்புடன் கீழே யுள்ள விருக்ஷங்களை நோக்கினன். அப்போது அவன் வாயி னின்றும் நழுவிய துர்முகன் மலையில் ஒரு பிலத்தில் நுழைந்தது. கருடன் அதைத் தேடியுங் காண முடியாது கோபங்கொண்டு அம் மலையைப் பிடுங்கி எடுத்துக்கொண்டு பறந்து சென்றான். அப்போது அம் மலையில் வீற்றிருக்கும் பிரமதேவர் கோபித்து மூன்றுலக பாரத்தையும் தம் பீடத்திற் பொருந்த வைத்தார். கருடன் பாரந் தாங்க முடியாது தவித்துக் கோகர்ண தலத்துக்கு நேரே மேலே வரும் பொழுது கீழே தபோவனத்தில் அகத்திய முனிவரைக் கண்டு — "கிருபாளுவே! என்னைக் காத்தருள்க" என முறையிட்டனன். அகத்தியர் பயப்பட வேண்டாம் எனக் கூறி மலையுடன் கடலில் விழுந்து முழுக இருந்த கருடனிடமிருந்து அந்த மலையை வாங்கி ருத்ர யோனியின் தென்பால் வைத்துக் கருடனை விடுவித்தார்.

### பிரமன் கருடனுக்கு அருளியதும், சங்கரரைப் பூசித்ததும்—(பிரம தீர்த்தம்).

இதை அறிந்து பிரமதேவர் அங்கு வந்து அகத்தியரைப் புகழ்ந்து கருடனை நோக்கிச் சொல்லுகின்றார்: "குழந்தாய்! இந் நிகழ்ச்சி சிவபிரானது திருவருளால் நடந்ததாகும். நீ ஒரு நிமித்த மாத்திர மாயுள்ளாய்! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றனர். அதற்குக் கருடன் "பகவானே! மூன்று லோக பாரத்தையும் எளிதில் வகிக்க வல்ல ஆற்றலை விரும்புகின்றேன்; உலகில் எனக்கு மேற்பட்ட பராக்ரமம் உள்ளவர் ஒருவரும் இருக்கக் கூடாது" என வேண்டினன். பிரமனும் 'திரிலோக குரு விஷ்ணு மூர்த்தியை

நீ எப்பொழுதும் சுமப்பாயாக; எந்த ஆயுதமும் உன்னை ஊறு படுத்தாது; யாவரினும் நீ எப்பொழுதும் மேம்பட்டு இரு' என வரங்கள் தந்தனர். பின்பு அம் மலையில் பிரம தீர்த்தத்தை உண்டு பண்ணி ருத்ரமூர்த்தியைப் பூசித்துச் சத்திய லோகஞ் சேர்ந்தனர்.

## கருடன் பூசித்தது—(கருட தீர்த்தம்).

கருடனும் சங்கரமூர்த்தியைப் பூசித்துத் தன் பெயரால் தீர்த்தம் உண்டாக்கி, இலிங்கம் தாபித்து, அகத்தியரிடம் விடைபெற்று, விஷ்ணு மூர்த்தியிடம் சேர்ந்தனன். தீர்த்தம் கருடதீர்த்தம் எனவும், கருடன் இருந்த ஆசிரமம் கருட மண்டபம் எனவும் வழங்கும். இவை அகத்திய தீர்த்தத்துக்கு வடமேற்கில் உள்ளன. கருட தீர்த்தத்தில் முழுகி, கருட காயத்திரி நான்கு லக்ஷம் ஜெபித்தால் அணிமாதி மஹா சித்திகள் கிட்டும்.

## அகத்தியர் பூசித்தது—(அகத்தியர் தீர்த்தம்).

அகத்தியரும் தன் பெயரால் ஒரு உத்தம தீர்த்தத்தை உண்டாக்கி, "வரதேசுரர்" எனப்படும் லிங்கத்தைத் தாபித்துத் தவங்கிடந்து பல சித்திகள் பெற்றுக் கோகர்ணத்தில் இருந்தனர். சத சிருங்க கிரியை நாக லோகத்தின் பின்புறமென்பர் பெரியோர். இந்தப் ப்ரதேசம் 'பிரமலோகம்,' 'பிரமவாசம்' எனப்படும். ருத்ர மூர்த்தியின் ஆக்ஞைப்படி சர்வபூத கணங்களும் அங்கு வந்திருந்தன.

## கோடி தீர்த்த வரலாறும் பெருமையும்.

சத சிருங்க கிரியைக் கருடன் தூக்கிவந்த பொழுது கருடனுக்குப் பயந்தது போல அந்தக் கிரியிலிருந்த கோடி தீர்த்தங்களும் ஒன்றாயின. அங்ஙனம் ஒன்றாயின தீர்த்தம் "கோடி தீர்த்தம்" எனப் பிரசித்திபெற்றுச் சத சிருங்கத்துக்கு வடபக்கத்தில் விளங்குகின்றது. இதில் ஸ்நாநம் செய்பவன் சகல தீர்த்தங்களிலும் முழுகின பலனை அடைகின்றான். அவன் செய்த சர்வ பாபங்களும் நசித்துப் போம். கோடி தீர்த்த ஸ்நானத்தை 'தச அசுவமேத அவப்ருத ஸ்நாந'த்துக்குச் சமமெனச் சொல்லுவர். இதில் ஸ்நானம் செய்தவர்கள் மஹா புண்ணியத்தையும், புண்ணியம் செய்தவர்கள் உயர்ந்த விண்ணுலகத்தையும் அடைகின்றார்கள். சத சிருங்ககிரியின் தென்மேற்குப் பாகத்தில் வேறு கோடி தீர்த்தங்கள் கடலில் நழுவின. பிரமஹத்தியாதி நூறு பாவங்கள் ஒருவன் செய்திருப்பினும் கோடிதீர்த்த ஸ்நாநத்தால் சர்வ பாவங்களினின்றும் அவன் விடுபடுகின்றான்; இதன் உண்மையைப் பின் வரும் சரிதம் விளக்குகின்றது.

## விஷ்ணுவர்மாவின் சரித்திரம்.

அவந்தி தேசத்தில் விஷ்ணுவர்மா என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் துர்மதியினன். கிருத யுகத்தில தனது ராஜ்யத்தைப் பரிபாலித்துத் தாசிகளையும் தாரஸ்திரீகளையும் இச்சித்துப் பிரமஹத்தியாதி பல பாபங்களையும் செய்தான். அவனுக்கு க்ஷயநோய் வந்தது. எத்தகைய சிகிச்சையும் அந்நோயின் கொடுமையை நீக்கவில்லை. தெய்வகதியால் சநகர் என்னும் யோகீந்திரர் அவன் அரண்மனைக்கு வந்தார். அரசன் மனைவி 'புண்ணிய சீலை' என்பவள் அந்தப் பெரியாரை வணங்கி 'என் கணவனைக் காத்தருளும்' என நயமொழிகள் கூறினள். விஷ்ணுவர்மனும் யோகீசுரரை வணங்கி—"பாபம் பல செய்தவனும், துராசாரமுள்ளவனும், காமலோலனுமான என்னைக் காத்தருளும்! முநிபுங்கவரே! என் பூர்வ புண்ணியத்தால் தங்கள் தரிசனம் கிடைத்தது" என இனிய வசனங்கள் கூறினன். இதைக்கேட்ட சநகர் "அரசனே! கேள்! பழவினைப் பயனை இங்கு தடுக்கவல்லவர் யாரும் இல்லை; அநுபவித்தே தீரவேண்டும். பிருந்தாவனம், சாளக்ராமாதி பூஜை இல்லாத இடத்தும், வேதசாஸ்திர ஆராய்ச்சி இல்லாத இடத்தும், சத்ஜன சங்கம் இல்லாத இடத்தும், ஆசார ஒழுக்கம் குன்றியுள்ள இடத்தும், பிறர்க் குதவிசெய்யும் தருமசிந்தையர் இல்லாத இடத்தும், பாபத் தொழிலில் சதா விருப்பமுள்ளாருள்ள இடத்தும், சகல நோய்களும் நிலைபெறும். பூர்வ ஜன்மத்தில் செய்த பாப புண்ணியத் தொழில்களுக்கு ஏற்ப சுப அசுப கர்மங்கள் இந்த ஜன்மத்தில் ஏற்படுகின்றன. நீ முன் ஜன்மத்தில் ஒரு சூத்திரனுக்கு ஒரு வேசியிடம் பிறந்தாய். தர்மத்வஜன் எனப் பெயர் கொண்டவனாய், வேட்டுவத் தொழில் பூண்டுப் பிராணிகளை ஹிம்சை செய்தாய். பாப கர்மங்களையே விரும்பினாய். தினந்தோறும் தேவ - பிராமண — சொத்துக்களை அபகரித்தாய்; ஒரு முறை, மாசி மாதத்தில் கங்கையில் ஸ்நாநஞ் செய்ய வந்த ஒரு பிராமணன் மனைவியைக் கண்டு காமங் கொண்டாய்; அவர்களுடன் நீயும் கங்கையில் ஸ்நாநஞ் செய்தாய். பின்பு அவர்கள் தங்கியிருந்த இடத்தைத் தெரிந்து கொண்டு இரவில் கன்னம் வைத்து நுழைந்து தூங்கிக் கொண்டிருந்த அவளது அங்கத்தைத் தடவினாய். அவள் விழித்துக்கொண்டு "ஐயோ! திருடன்" எனக்கூவ அங்கிருந்தவர் எழுந்து உன்னைக் கட்டிக் கொண்டு போய் அரசனிடம் விடுக்க, அரசன் உன் கை, கால்களை வெட்டுவித்து ஊருக்கு வெளியே ஒருமலை உச்சியில் உன்னைத் தள்ள, ஜனமில்லாத அவ்விடத்தில் நீ இறந்தாய். மாசி மாதத்திற் செய்த ஸ்நாந விசேடத்தால் நீ இப்பொழுது அரசன் ஆனாய்; இப்பிறப்பிலும் பாபத் தொழிலிலேயே புத்தி செல்லுகின்றது. ஸ்நாநஞ் செய்த அந்த உத்தமப்

பிராமணனைத் தரிசித்த விசேடத்தால் என்னை இப்போது காணப் பெற்றாய். பழைய ஜன்மப் பாபத் தொழில்களால் இப்பிறப்பில் நோய்க்கு ஆளானாய். பாபம் நரகத்துக்கும், புண்ணியம் சுவர்க்கத் துக்கும் வழி காட்டும் அல்லவா?' எனக் கூறினார். இங்ஙனம் தனது முற்பிறப்பின் வரலாற்றைக் கேட்ட அரசன்—"பகவானே! என் பூர்வ கதையைக் கேட்டு என் உள்ளம் கொதிக்கின்றது. இப் பிறப்பிற் செய்த என் பாபத் தொழில்களை நினைத்தால் எனக்கு 'நரகம்' நிச்சயம் என்று தெரிகின்றது. தாங்களே எனக்கு நல்ல கதி பெறும் வகையைத் தெரிவிக்க வேண்டும்' எனப் பணிவுடன் வினவினன். சநகரும் "உனக்கு உய்யும் வழியைச் சொல்லு கின்றேன்; உன் பாபங்கள் தொலைந்து, நீ நோயற்றவனாய்ச் சுத்த னாகும் வழியைக் காட்டுகின்றேன். மேற்குக் கடற்கரையிற் கோகர்ணம் என்னும் உத்தம க்ஷேத்திரம் இருக்கின்றது. அத் தலத்திற் 'கோடி தீர்த்தம்' என்னும் நிர்மல தீர்த்தம் உள்ளது. அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்தால் சகல பாபங்களும் நசித்து விடும். சந்தேகம் இல்லை; நீ அந்த க்ஷேத்திரத்தை அடைந்து மாசி மாத அருணோதயத்தில் கோடி தீர்த்தத்தில் விதி முறை முழுகி மஹாபல நாதரைப் பூஜை செய். உன் பாபங்கள் நசித்து நீ நெடுங்காலம் சுகமாக வாழ்வாய். முன்பொருகால் விகசன் என்னும் மறையவன் பிருகு முனிவரின் சொற்படி கோகர்ணத்துக் கோடி தீர்த்தத்தில் முழுகி மஹாபல நாதரைப் பூசித் துப் பாபங்களினின்றும் விடு பட்டு மங்கள முற்றான்'' எனக் கூறிச் சென்றார். விஷ்ணுவர்மா அங்ஙனமே மாசி மாதத்திற் கோகர்ணம் சென்று, கோடி தீர்த்தத்தில் முழுகித் தானங்கள் செய்து மகாபல நாதரை வணங்கி வாழ்த்தித் தன் நோய்களினின்றும் விடுபட்டவனாய்ச் சுகமடைந்து, தன் ராஜ்யம் சேர்ந்து நெடுங் காலம் வாழ்ந்து அந்தத்தில் விமானம் ஏறிப் பத்தினியுடன் சுவர்க்கம் அடைந்தான்.

மூன்றாம் அத்தியாயம் முற்றும்

## அத்தியாயம் 4.

## தீர்த்த வரலாறுகள்

சத சிருங்கத்தின் இரண்டு பாகங்கள் சமுத்திரத்தில் விழுந் தன. துர்க்கா சிருங்கம் என்பது கோகர்ணத்தில் வடபக்கத்தில் விழுந்தது. நாக சிருங்கம் என்பது தென் பக்கத்தில் விழுந்தது. நாக சிருங்கத்தில் பெருமை வாய்ந்த ஐந்து தீர்த்தங்கள் உள்ளன. அவை 1. ருத்ரகுண்டம் 2. நாக தீர்த்தம் 3. வசோர்தாரம்

4. சங்க தீர்த்தம் 5. சித்தகுண்டம். இத் தீர்த்தங்களில் முழுகுகின்றவன் நற் பலன் பல பெறுகின்றான். தூர்க்கா (அல்லது கௌரீ) சிருங்கத்தில் உள்ள நூறு தீர்த்தங்களுட் சிறந்தன:— 1. கங்காதாரம் 2. வசோர்தாரம் 3. மாஹிஷம் 4. நாக தீர்த்தம் 5. கௌரி ஹ்ருதம் (மடு) 6. கௌமாரம் 7. காளீ ஹ்ரதம் 8. முண்டோத் பவம் 9. வாருணம். நவமியில் இவைகளில் ஸ்நாநம் செய்பவன் பாபத்தினின்றும் விடுபடுகிறான். ருத்ர யோனிக்குக் கீழ் பால் சற்று ஈசான திக்கில் குஹ தீர்த்தமும் குமாரேசுர லிங்கமும் உள்ளன.

## தாம்ர கௌரி தேவியின் திருமணம்.

முன்பொரு காலத்தில் பிரமதேவர் இந்திரியங்களை அடக்கித் தியானத்தில் அமர்ந்தார். அப்பொழுது அவரது வலக்கரத்திலிருந்து அழகிய கன்னிகை ஒருத்தி தோன்றினாள். அவள் தனக்குத் தக்க கணவனை நாடி நின்றாள். அதனை உணர்ந்த பிரமா —'நீ ருத்ர மூர்த்திக்குப் பத்தினி ஆவாய்' என ஆசி கூறினர். அவளும் ருத்ர மூர்த்தியை இச்சித்துத் தக்க க்ஷேத்திரம் கோகர்ணம் என அறிந்து தாம்ர கிரிக்கு நேராகவந்து ஆகாசத்தினின்றும் மூன்று வழி செல்லும் புண்ணிய கங்கையாக விழுந்தாள். பிறிதொரு அம்சத்தால் மேலான திவ்ய ரூபங் கொண்டு ருத்ர மூர்த்தியைத் தியானித்து நின்றாள். ருத்ர மூர்த்தி பிரசன்னமாகத் தேவி வணங்கி நின்று மௌனமாய் லச்சையுடன் இருந்தாள். இதை உணர்ந்த ருத்ரர் பிரமனை நினைத்தார். அவர் நினைத்தவுடன் பிரமாவும் தேவகணங்களுடன் அங்கு வந்து "தேவ! உன் பொருட்டுப் பெருந் தவப்பயனாய் வந்த இவள் உன்னையே மணக்க விரும்புகின்றாள்: இவளை மணந்தருளுக" என உரைத்து அக் கங்கையைச் சிவ மூர்த்திக்கு ஐப்பசி மாசத்திற் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி, திங்கட்கிழமை, சுவாதி நக்ஷத்திரத்தில் திருக் கலியாணம் செய்வித்துச் சென்றார். மூவுலகத்துக்கும் பிதாவின் விவாக ஸ்தான மாதலால் அம்மலை அதுமுதல் "வைவாஹிகம்" எனப் பெயர் பெற்றது. தேவியும் தாம்பிராசல சம்பந்தத்தால் தாம்ர கௌரி யானாள். திவ்விய ரூபத்துடன் மஹா பலருடைய சமீபத்திற் கிழக்கு நோக்கி நிற்கின்றாள். அத்தேவியை அன்புடன் அருச்சித்தவர்கள் விரும்பின வரங்களைப் பெறுகின்றார்கள்.

## தாம்ர கௌரி நதி

புண்ணிய கங்கையாக விழுந்த அம்சம் சர்வ பாபங்களையும் போக்கும் நதியாகத் திகழ்ந்தது. இந்நதி தாம்ராசலத்திருந்து புறப்பட்டுப் பல் தீர்த்தங்களுடன் கலந்து மிகப் பரிசுத்தையாய்த்

தெற்கு நோக்கி அரைக் குரோச தூரம் ஓடிப் பிறகு சிறிது வடக்குத் திரும்பி ருத்ர யோனியை அடைந்து பித்ருஸ்தாலிக்கு அருகில் சமுத்திரத்தை அடைகின்றது. சகல தீர்த்தங்களேயும் தன்னுட் கொண்ட தாம்ர கௌரியானது நதிகளில் உத்தமோத்தமமானது. பிண்டம், திலோதகம், ஸ்நாநம் இந் நதியிற் செய்வது மிகச் சிறந்தது. இவைகளைச் செய்பவனுடைய பித்ருக்கள் நரகத்திலிருந்தாலும் சுவர்க்கம் அடைவார்கள். பௌர்ணமி ஸ்நாநம் விசேடமானது. பசு, பக்ஷி, மிருகங்களுங்கூட அந்தத் தீர்த்தத்தின் ஸ்பரிச மாத்திரையில் சர்வ பாபங்களும் விடுபட்டு உத்தம கதியைப் பெறுகின்றன. இதற்கு ஒரு ஆச்சரியமான கதை உண்டு.

## குரங்கு—ராஜகுமாரனான கதை

இந்த தாம்ர கங்கைக் கரையில் முன்னொரு காலத்தில் ஒரு குரங்கு இருந்தது. அது அங்கிருந்த குரங்குகளுக்கு அரசாய் இருந்தது. ஒருநாள் அங்கிருந்த மரத்தில் இருந்த பழத்தை உண்பதற்காக அது மரத்தின்மேல் தாவிற்று. குறி தப்பிக் கீழே ஒரு கற்பாறையின் மேல் விழுந்து பலத்த அடிபட்டு மூர்ச்சையுற்றது. சற்று மூர்ச்சை தெளிந்து அந்த மரத்தில் மெல்ல ஏறி அதன் கிளைகளின் நடுவில் நோயுடன் இருந்து வேதனை பொறுது இறந்தது. பிறகுசிலநாளில் அதன் உடல் அழுகி, அதன் சிரோபாகம் (தலை) பிரிபட்டுக் கீழே தாம்ர கங்கா ஜலத்தில் விழுந்தது. அந்தப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்பரிசம் ஏற்பட்ட காரணத்தால் அக் குரங்கு **சித்ர ரூபன்** என்னும் அரசனுக்குக் குழந்தையாகப் பிறந்தது. குழந்தையின் முகம் மாத்திரம் அழகிய மனித வடிவு. மற்றைய பாகங்களெல்லாம் குரங்கின் வடிவம். இந்த விசித்திரத்தைக் கண்ட அரசன் மிகக் கவலையடைந்தான். நாளேறக் குழந்தையும் வளர்ந்தது. நமக்கு ஏன் இத்தகைய கவலையைக் கொடுத்தார் இறைவன் என அரசன் துக்கித்துப் பலரையும் விசாரித்தும் காரணம் தெரியவில்லை. பின்பு ஒருநாள் ஒரு சித்த புருஷர் அரசனிடம் வந்தார். அவரிடம் அரசன் தன் குறையைக் கூறினன். சித்தர் ஞான திருஷ்டியால் நோக்கி அந்தப் பிள்ளை முன் ஜன்மத்தில் குரங்காயிருந்ததும், இறந்ததும், அழுகிப்போன சிரோ பாகம் கோகர்ணத்தில் தாம்ர கங்கையில் விழுந்ததும், ஏனைய அங்கங்கள் மரக்கிளையில் அழுகிச் சிக்கிக் கிடப்பதுமான விவரங்களைக் கூறி, அந்த அழுகின மற்றைய பாகங்களையும் அந் நதியில் தள்ளி விட்டால் குழந்தை உடம்பு முழுதும் மனித ரூபமாகும் என அரசனுக்குக் கூறினர். இதைக் கேட்ட அரசன் மகிழ்ந்து அவ்வாறே அந்த இடத்தைக் கண்டு பிடித்து மரக்கிளையில் இருந்த அழுகின பாகங்களைக் கீழே தாம்ர நதியின் ஜலத்தில் தள்ளுவித்தான்.

உடனே ராஜகுமாரன் திவ்ய மானுட தேகம் உடையவனானான். லக்ஷ்மீகரம் விளங்கும் சூரிய தேஜசு உடையவனானான். கண்டோரெல்லாம் ஆச்சரியப் பட்டுக் களித்தனர். சித்தரும் வந்த வழி நோக்கிச் சென்றார். தாம்ர கௌரி நதியின் மாஹாத்மியம் இது. இறந்தோரது எலும்புகளை இந் நதியிற் புதைத்தால் எலும்புகளின் அணுக்கள் அங் குள்ளளவும் பித்ருக்கள் திவ்ய போகங்களைச் சுவர்க்கத்தில் அநுபவித்து மகிழ்வார்கள். இதன் உண்மையை விளக்க ஒரு பழைய கதை உள்ளது.

## உந்மூசி சக்கரவர்த்தியின் கதை

உந்மூசி என்னும் பேருள்ள ஒரு அரசன் இருந்தான். அவன் கொடுங்கோல் மன்னன். ஜனங்களுக்குப் பலவித கஷ்டங்களைத் தந்தான். அவனுக்கு சமஸன் என்னும் புத்திரன் ஒருவன் இருந்தான். சமஸன் நற்குணம் வாய்ந்தவன்; தர்மாத்மா. அவனை யாரும் புகழ்வார்கள். தந்தை யிறந்ததும் சமசன் சற்றுத் துயருடன் தந்தைக்குச் செய்யவேண்டிய கரும காரியங்களைத்தொடங்குமுன் அவனது பித்ருக்களுடைய அசரீரி "மஹா பாக்கியவானே! உன் பிதா கொடியவன். அவன் செய்த பாப மேலீட்டால் நாங்கள் எல்லோரும் மஹா ரௌரவம் என்னும் நரகத்தில் துன்புறுகின்றோம். எங்களைக் காப்பாற்ற வேண்டி நீ உன் பிதாவின் ஹஸ்திகளை (எலும்புகளை) கோகர்ண க்ஷேத்திரத்தில் தாம்ர கௌரி நதியிற் சேர்ப்பிக்க"— எனக் கேட்டது. இதைக் கேட்ட சமஸன் அப்படியே கோகர்ணத்துக்குச் சென்று ஹஸ்திகளை அந் நதியிற் சேர்ப்பித்தான். அப் புண்ணியச் செயலால் உந்மூசியும் எல்லாப் பிதிருக்களும் சுவர்க்கத்தை அடைந்து மகிழ்ந்தார்கள்.

நான்காம் அத்தியாயம் முற்றும்

# அத்தியாயம் 5

## காமதேநு பூசித்தது

தாம்ர கங்கை சமுத்திரத்திற் சேரும் இடத்தில் விநூத பாபஸ்தாலீ என்னும் இடம் மிக விசேடமானது. அதன் கீழே கோ மாதா (காமதேநு) இருக்கின்றாள். அவள் பிரமாவின் மனதிலிருந்து பிறந்தவள். முன் அநிந்திதை யானவள். அவளது பால் பெருகிப் பாற் கடல் உண்டாயிற்று. பாற்கடலிலிருந்து அமுதம் பிறந்தது. அந்த அமுதத்திலிருந்து திவ்விய லிங்கம் ஒன்று உண்டாயிற்று. அதைத் தேவர்கள் எடுத்துக் கொண்டார்கள்.

காமதேநு பிரமனை நோக்கி யான் இருப்பதற்குத் தக்க இடம் ஒன்று காட்டுக என வேண்ட, பிரமதேவர் நீ பரமேசுரனைத் தரிசித்து வணங்கிக் கேட்டுத் தெரிந்து கொள் என்றனர். தேநு அப்படியே சிவபெருமானைப் பூசித்துக் கேட்கச் சிவபிரான் எனக்கு உகந்த ஸ்தானம் கோகர்ணம்; நீ அங்கு வசிக்கலாம்' என்னத், தேநு அப்படியே வந்து பாபஸ்தாலீ எனப் படும் இடத்தில் தங்கித் தவநிலையில் இருந்து தேவர்கள் வசமிருந்த திவ்ய லிங்கத்தை அங்குப் பிரதிஷ்டை செய்து பூசித்தாள். அவள் முன்பு சிவபிரான், திருமால் இருவரும் பிரசந்நமாகி நீ என்ன வரம் விரும்புகின்றாய் என வினவத், தேநு "என் தேகத்தில் உண்டாகும் பால் தேவர்கள், ருஷிகள், பித்ருக்கள் இவர்கள் உபயோகத்துக்கு யோக்கியதையாம் பெருமையையும், இந்த லிங்கத்தைப் பூசிப்போர்களுக்குப் பெருஞ் செல்வப் பேறு கிடைத்தலையும், இங்கு நீங்கள் இருவீரும் எப்போதும் வீற்றிருக்கும் பாக்கியத்தையும் நான் பிரார்த்திக்கின்றேன்" என்றனள். இதைக் கேட்ட அரியும் அரனும் "அங்ஙனே ஆகுக! மங்களையே! இந்த ஸ்தானமும் இந்த லிங்கமும் மூவுலகங்களுக்கும் திலகம் போல விளங்கும். இந்த ஸ்தானம் பித்ருஸ்தாலி என்னும் பெயரால் பிரசித்தி பெறும். இங்கு செய்யப்படும் தானம், ஹோமம், ஜெபம், தபம் இவைகளின் பலன் அக்ஷயமாகும்." எனக்கூறி அங்கு அமர்ந்தனர். காமதேநுவும் மிக மகிழ்ந்து சமுத்திரத்திலுள்ள "கோபிலம்" என்னும் பிலத்தில் தங்கிப் பகலும் இரவும் வெளிச் சென்று நண்பகலிலும் நள்ளிரவிலும் பிலத்துக்குத் திரும்பி வந்து சேரும். காமதேநுவுக்கு ஒரு இரவும் பகலும் நரருக்கு வருஷக்கணக்காம். நடுப் பகல், விஷு, துலா, நள்ளிரவு இக்காலங்களில் பித்ருஸ்தாலியில் தானங்கள் செய்து, காமம், குரோதம் இவைகளை விட்டால் காமதேநுவின் பிரசாதம் கிடைக்கும். அந்த இடத்துக்கு அடிக்கடி செல்லுபவர் தேநுவின் சுவாசக் காற்று மேலே படுவதால் தமது பாபங்கள், பெருங் காற்றிற் பட்ட சருகு போலத் தூரத்தில் விலகப் பெற்று விளங்குவார். இங்ஙனம் பாபங்கள் அவ்விடத்தில் 'விதூதபாபம்' ஆகுமாதலால், அந்த இடம் 'விதூத பாபஸ்தாலி' எனப்படும். அந்த இடத்துக்குப் "பித்ருஸ்தாலி" எனப் பெயர் வந்ததின் காரணம் கூறுகின்றேன்.

## பித்ருஸ்தாலி-பெயர்க் காரணமும், பெருமையும்

முன்பொருகால் பிரமதேவர் "சந்த்யா ரூபி" யாயிருந்து சந்தியாதேவி ரூபமாய்) பிதிருக்களைச் சிருஷ்டித்தார். அந்த (ந்த்யாதேவி அர்யமா முதலிய தன் குழந்தைகளுடன் விதூத ாபஸ்தாலியில் அமுத லிங்கத்தைப் பூசித்தாள். சிவபெருமான்

மகிழ்ச்சியுற்று "மங்களேயே! உனக்கும் உன் குழந்தைகளுக்கும் சகல சித்திகளும் உறுவதாக. இந்த இடம் சகல பாபங்களேயும் போக்கும். பித்ருஸ்தாலி என்னும் பெயருடன் பிரபலமாகும். இங்குப் பக்தியுடன் பித்ருக்களேக் குறித்துத் தரப்படும் தானமும், செய்யப்படும் ஹோமமும் அக்ஷயமாகும். மாசி மாதம் சதுர்த்தசியிலாவது, அமாவாசையிலாவது இங்கு தானம், ஓமம் செய்தல் விசேஷ பலனேத் தரும். பிண்டத்தையும், திலோதகத்தையும் இங்கு சிரத்தையுடன் எவன் தருகின்ருனே அவனது சர்வ பித்ருக்களும் பரிசுத்தர்களாய் மோக்ஷம் அடைவார்கள். பிசாசத்வம் அடைந்தவர்களின் பிள்ளே இங்கு விதிமுறை சிராத்தம் செய்தால் அவர்கள் பிசாசத்வம் நீங்கப் பெறுவார்கள்"—என வரங்கள் தந்து லிங்கத்தில் மறைந்தனர்.

பித்ரு லோகத்துள்ள பித்ருக்கள் நமது வம்சத்தில் எப்பொழுது ஒருவன் பித்ருஸ்தாலிக்காவது கயாவுக்காவது சென்று பிண்டத்தையும் திலோதகத்தையும் நமக்குக் கொடுப்பான்; நாம் எப்போது முத்தி பெறுவோம்! என எதிர்பார்த்தவாறே இருக்கின்ருர்கள். ஆதலால் பித்ருக்களுடைய அந்த ஆசையைப் பூர்த்தி செய்பவன் தானும் விசேஷகதி அடைவான். அவனுக்கு மறு பிறப்பு இல்லே. தெய்வகதியால் ஒரு வருஷகாலம் சந்த்யா வந்தனம் தவறினும் பித்ருஸ்தாலியில் ஒரு முறை சந்த்யா வந்தனம் செய்தால் சந்த்யா பலன் குறைவுற்றது நிரம்பிவிடும். விதிப்படி அங்கு ஒரு அந்தணனுக்கு அன்னமளித்தாலும் அந்நனம் அளிப்பவனது பித்ருக்கள் யாவரும் என்றும் திருப்தி யடைந்தவர்களாவார்கள். அங்கு ருத்ர காயத்திரியை ஒருவன் 24,000 உரு மௌனமாய் ஜெபித்தால் அவன் தனது ஜென்மமுதல் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாபங்கள் யாவும் தொலேயக் காண்பான். பரம பதம் அடைவான். வேசியைச் சேர்ந்தவன் அங்கு ருத்ர காயத்திரியை ஒரு மாதகாலம் ஜெபித்தால் சுத்தி யடைகின்ருன். பிரமஹத்தி செய்தவனும், குரு பத்தினியைச் சேர்ந்தவனும், சுராபானஞ் செய்தவனும், பரதார கமனம் செய்தவனும் அங்கு ருத்ர காயத்திரியை ஒரு வருஷகாலம் ஜெபித்தால் வெகு சுத்தியடைவான். பித்ரு கர்மத்தில் எவ்வளவு எள்ளுகள் மனிதர்களால் எடுபட்டனவோ அவ்வளவு ஆயிர வருஷங்கள் அவர்கள்தம் பித்ருக்கள் சுவர்க்க வாசிகளாக இருப்பார்கள்.

## பித்ருஸ்தாலியின் மாஹாத்மியத்தைக் காட்ட வைசியன் தருமகுப்தன் கதை.

சந்திரிகா நகரத்தில் தரும குப்தன் என்னும் பெயரை உடைய வைசியன் ஒருவன் இருந்தான். அவன் செல்வம் உடையவன்; பந்துக்கள் நிரம்பியவன்; மனேவி மக்கள் உடையவன். ஆனல்,

லோபி, தருமசிந்தனையிலாதவன்; எந்த புண்ணிய காலத்துங்கூட தருமஞ் செய்யாதவன். இவனது லோப குணத்தைக் கண்டு விருந்தினர்களும் இவன் 'பிசாசு ஆருக' எனச் சபித்தனர். ஒரு நாள் இவன் வீடு எரியிற்பட்டு அழிந்தது. மனைவியும் மக்களும் வியாதியால் இறந்தனர். இவனும் குஷ்ட நோயாற் பீடிக்கப் பட்டான். இவன் பொருள்களும் திருடர்களாற் கொள்ளைபோயின. இங்ஙனம் வறுமையும், நோயும் கலக்கப் பசியினல் துக்கமடைந்து திரிந்து ஒரு காட்டில் ஒரு மரத்தடியில் தங்க அங்கு ஒரு புலி இவனைக் கொன்று தின்றது. இவனும் பிசாச ரூபமானுன். பிசாசு ரூபத்துடன் கோரமான ஜனமற்ற காட்டில் (சஹ்யாரண்யத்தில்) பிராணிகளைக் கொன்று தின்று வசித்தான். ஒரு நாள் தீர்த்த யாத்திரை செய்து வந்த குத்ஸர் என்பவர் அக்காட்டு வழியாக வர அவரைக் கண்ட இப்பிசாசு இருகைகளாலும் அவரைப் பற்றிக் கொன்று தின்னப் பலாத்காரமாய் எடுத்தது. அவரைத் தொட்ட அந்த அளவிலேயே, பாபங்களெல்லாம் ஒழியப் பெற்று, பூர்வஞானம் அடையப் பெற்று 'என்னைக் காத்தருளுக, என்னைக் காத்தருளுக' எனப் புலம்பி குத்ஸரது திருவடியில் விழுந்து அப் பிசாசு வணங்கிற்று. குத்ஸர் "நீ யார்! உன் வரலாறு என்ன" என வினவ, தர்மகுப்தனும் அப் பிசாசு "நான் வைசியன்; என் பெயர் தர்ம குப்தன்; நான் மஹா லோபி; அந்தப் பாபத்தால் பிசாசு ஆனேன்; தங்களைத் தொட்ட மாத்திரத்தில் பூர்வ ஜன்ம நினைவு உண்டாயிற்று; என்னை உய்விக்கவேண்டும்' என்றது. குத்ஸர் "தர்மகுப்த! அஞ்சாதே! உன்னை நல்ல கதியிற் சேர்ப்பிக்கின்றேன்! என்னுடன் வா" எனக் கூறி, அப் பிசாசுடன் கோகர்ணத்துக்குச் சென்று அங்குப் பிதிருஸ்தாலியில் இருவரும் ஸ்நாகம் செய்தனர். தர்மகுப்தன் பேரால் விதிப்படி சிராத்தமும் குத்ஸர் செய்தனர். தர்மகுப்தனும் பிசாசுத் தன்மையினின்றும் விடுபட்டுச் சொர்க்கலோகம் அடைந்தான். குத்ஸர் தாம் விரும்பிய பிற தலங்களுக்குச் சென்றூர். இங்ஙனம் பிதிருஸ்தாலி சர்வ பாபங்களையும் போக்கும் புண்ணிய தீர்த்தமாம்.

(ஐந்தாம் அத்தியாயம் முற்றும்).

## அத்தியாயம் 6.

### மார்க்கண்டேயர் காலனை விலக்கியது.

பிருகு முனிவருக்குக் கியாதியிடம் உதித்தவர் மிருகண்டு. மிருகண்டு முனிவருக்குச் சுமித்ரையிடம் பிறந்தவர் மார்க்கண்டேயர். சுமித்ரை மஹா புண்யவதி. மார்க்கண்டேயர் மஹா புத்திமான்.

மார்க்கண்டேயர் பிறந்த வேளையில் அசரீரி, "மிருகண்டுவே! உன் புத்திரன் பதினாறாண்டில் இறப்பான்" எனக் கூறிற்று. இதைக் கேட்ட பெற்றோர் மிகத் துக்கம் உற்றனர். தக்க பருவத்தில் அப் பிள்ளையைக் குருவினிடம் ஒப்புவித்தார்கள். குருவிடம் வேதங்களை நன்கு கற்றுப் பெற்றோர்களிடம் மார்க்கண்டேயர் வந்து சேர்ந்தார். பெற்றோர் பிள்ளையைக் கண்டு இன்பமும் துன்பமும் ஒருசேர அடைந்தனர். பெற்றோர் முகத்தில் துக்கக்குறியைக் கண்ட மார்க்கண்டேயர் தமது பிதாவை நோக்கி அவர் துக்கத்தின் காரணத்தைக் கேட்டார். அவர் "நீ பிறந்த பொழுது அசரீரி நீ பதினாறாண்டில் மரிப்பாய் என்றது. நாங்கள் இருவரும் வஜ்ரத்தால் அடிபட்டது போலத் துயர் உறுகின்றோம். இப்பொழுது உனக்குப் பன்னிரண்டு வருஷம் முடிவு பெறுகின்றது. இதை எண்ணி எண்ணி நாங்கள் வருந்துகின்றோம்' எனக் கூறினார். இதைக் கேட்ட மார்க்கண்டேயர், "உங்கள் இருவர் துயரையும் நான் நீக்குகின்றேன்" என்று சொல்லிப் பிருகுவின் ஆசிரமம் சேர்ந்து விஷயங்களை அவருக்குத் தெரிவித்தார். பிருகு முனிவர் உபதேசித்தபடியே தவஞ்செய்து நான்காம் ஆண்டிற் காசி ஸ்தலத்துக்குச் சென்று கங்கைக் கரையில் மார்க்கண்டேயர் சிவபூஜை செய்து செயற்கரிய பெருந் தவநிலையி லிருந்தார். நான்காவது வருஷத்தில் (தமது பதினாறும் ஆண்டில்) அவர் காலம் முடியும் வேளை வந்தது. அவர் சௌசத்துக்கு இருந்து அசுசியாய் (வெளிக்குப் போய் அசுசியா யிருந்த வேளையில்) திடீரெனக் கோர ரூப காலன் அவர் முன்தோன்றி அவரை வெருட்டினான். மார்க்கண்டேயரும் பயமடைந்து கங்கைநீர் நிரம்பிய தன் கையிலிருந்த குடத்தையே சிவனெனப் பாவித்து அதையே நன்கு கட்டிக்கொண்டார். அவரைக் கொல்லக் காலன் சக்தியற்றவனாயினான். அவர் அணைத்துக்கொண்ட குடத்தினின்றும் சிவபிரான் உடனே பிரத்தியக்ஷமாயினார். மார்க்கண்டேயரும் பயம் நீங்கினவராய் "பகவானே! எனக்கு ஆயுளைத் தந்தருள்க" என வேண்டிப் பணிந்தார். மஹாதேவரும் "நீ கோகர்ணத்துக்குச் சென்று ஆயுள் வேண்டித் தவஞ்செய்க; கேசவனைத் திருப்தி செய்க; அவர் நீ விரும்பியவண்ணம் ஆயுளைக் கொடுப்பார். அப்பொழுது பிரமாவுடன் நானும் வருகிறேன், குழந்தாய்!" எனச் சொல்லி மறைந்தார். மார்க்கண்டேயரும் சித்த மார்க்கத்தால் கோகர்ணத்தை யடைந்து அங்கு லிங்கப் பிரதிஷ்டை செய்து செயற்கரிய தவத்தைச் செய்தார். ஹரியும் சந்தோஷ முற்றவராய்ப் பிரசன்னமாயினார். அவரைக்கண்டு மார்க்கண்டேயர் "நாராயண! உனக்கு நமஸ்காரம்! பக்தவத்ஸல! உனக்கு நமஸ்காரம். லோக கர்த்தனுக்கு, லோக ரக்ஷகனுக்கு, லோக நாசனுக்கு நமஸ்காரம்! நமஸ்காரம்!!" என வணங்கினார். ஹரியும், "பிராமணோத்தம! நீ

இச்சித்த வரத்தைப் பெற்றுக்கொள்" என்றார். அப்பொழுது சிவனும் அவர் விரும்பியபடி பிரமதேவனும் அங்கு வந்தார்கள். பிரமன் ஹரியைநோக்கி, "மஹா விஷ்ணுவே! இந்த முனிவர் ஆயுள் முடிந்தவராயினும் பக்தியால் ருத்ரமூர்த்தியின் கடாக்ஷத்தால் ஜீவனுடனிருக்கின்றார். முன் பதினாயிரம் ஜென்மங்களில் இவர் உன்னை ஆராதித்துள்ளார். ருத்ரமூர்த்தியும் இவருக்கு ஆயுள் அளித்துள்ளார். நீயும் இவருக்கு அருளுக" என்றார். திருமாலும் முனிவரை நோக்கி, "அன்ப! உனக்குள்ள சிவபக்தி காரணமாக உனக்கு மூப்பின்மை, மரணமின்மை என்னும் வரங்களைத் தந்தோம். நீ உண்டுபண்ணின இந்தத் தீர்த்தத்தில் விதிப்பிரகாரம் ஸ்நானம் செய்தவர்கள் தங்களது மூன்று ஜென்ம பாவங்கள் தொலையப்பெற்று 'விஷ்ணுயாகம் செய்த பலனை அடைவார்கள்'' என வரம் தந்து உடனிருந்த தேவர்களுடன் மறைந்தார். மார்க்கண்டேயரும் தாம் விரும்பிய இடத்துக்குச் சென்றார்.

## தருமம் பூசித்தது

பிரஜைகளைப் படைக்க எண்ணிய பிரமன் உத்தம தருமத்தைப் படைத்தான். அது நான்கு கால்கள் கொண்டதாய் வலிமை பெற்றதாய் லோக பரிபாலனத்துக்கென்றே அமைந்ததாய் விளங்கிற்று. பிரமன் அதை நோக்கி "நீ எல்லா உயிர்களையும் காக்கக் கடவாய்" என்றனன். தருமமும் அப்படியே செய்கிறேன் என்று சொல்லிக் காத்துவந்தது. அப்பொழுது தருமம் தன் பிறப்பின் வரலாற்றை ஆராய்ந்தது. சூரியன் கோகர்ணத்தில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்ததும் அவன் பிரதிஷ்டை செய்த லிங்கத்தைப் பூசிப்பவருக்குச் சகல பேறுகளும் கிடைக்கும் எனச் சிவபிரான் அவனுக்கு வரம் தந்ததும், பின்னர், சூரியன் தன் மனைவி சமிக்ஞையுடன் சேர்ந்து தன்னை (தருமத்தை)ப் பெற்றதும் ஆகிய விவரங்கள் தெரியவந்தன. இங்ஙனம் தனது வரலாற்றை யறிந்த தருமம் கோகர்ணத்துக்குச் சென்று தானும் லிங்கப் பிரதிஷ்டை செய்து தீர்த்த முண்டாக்கிப் பூசித்துத் தவமிருந்தது. அதன் பூசனைக் குகந்து எதிர் தோன்றிய பிரமா, விஷ்ணு, மகேசுரர், அதன் விருப்பத்தின்படியே, அது உண்டாக்கிய ஆசிரமம், தீர்த்தம், லிங்கம் இவை மூன்றும் சிரேஷ்டத்துடன் என்றும் விளங்கிச் சர்வ பாபங்களையும் போக்க வல்லன ஆகுக என வரந் தந்து மறைந்தனர்.

## ஷண்முகர் பூசித்தது

கோகர்ண க்ஷேத்திரத்தில் குமாரேசுரம் என்பது பதின்மூன்று குமாரர்கள் சித்திபெற்ற இடம். சிவபிரானது திருவருட்

சம்மதத்தைப் பெற்று ஷண்முகப் பெருமான் குமாரேசுரத்தி லுள்ள குஹோதக தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சிவலிங்கத்தைப் பூசித்துத் தவமியற்றினர். கார்த்திகை மாதத்தில் கிருத்திகை சேர்ந்த பௌர்ணமியில் சிவபிரான் பார்வதிதேவியுடன் பிரத்தியக்ஷ மாகிப், "புத்திரனே! நீ விரும்பிய வரத்தைக் கேள்" என்றனர். ஷண்முகர், 'நான் சித்தியை விரும்புகிறேன். நான் உண்டு பண்ண தீர்த்தமும், பூசித்த லிங்கமும் மிகப் புண்ணியம் தருவன வாய் விளங்க வேண்டும்' என்றனர். சிவபிரான், "நீ முன்னமே சித்தனுய் உள்ளாய்; நீ தேவசேநாபதியாகுக; தாரகாசுரனை வெல்ல நீயன்றி வேறொருவரில்லை," எனக் கூறிச் சகல சத்ருக் களையும் வெல்ல வல்ல சக்தியையும் ஷண்முகருக்குத் தந்து மறைந்தார். குஹோதக தீர்த்தத்தில் முழுகிக் குமாரேசுரரைப் பூசிப்பவர் மூவேழு தலைமுறைகளுடன் சிவ லோகத்தில் வாழ்வார்.

## தாருணன் பூசித்தது

வங்க தேசத்தை யாண்ட தாருணன் என்பவன், பகைவர் களால் வெல்லப்பட்டுத் தனது ராஜ்யத்தை இழந்து தன் மனைவி யுடன் காட்டில் உழன்றுகொண் டிருக்கும் பொழுது சநகர் என் னும் யோகீசுரரைச் சந்தித்து "யோகீசுரரே! நான் ராஜ்யத்தை மீளப் பெறுவதற்கு ஓர் உபாயம் உரைத்தருள வேண்டும்" எனப் பணிந்து கேட்டான். சநகர், "சர்வசித்திகளையும் தரும் க்ஷேத் திரங்களுள் உத்தம க்ஷேத்திரமான கோகர்ணத்துக்குச் செல்லுக; அங்கு குஹோதக தீர்த்தத்தில் முழுகிக் குமாரேசுரரைப் பூஜை செய்து தபஞ் செய்க; உன் எண்ணம் நிறைவேறும்" என்றார். தாருணனும் அவன் மனைவியுடன் கோகர்ணத்துக்குச் சென்று சநகர் சொன்னபடியே தவஞ் செய்தான். தாருணனது பூஜைக்கு இரங்கிச் சிவபிரான் எதிர் தோன்றி, "நீ விரும்பியபடியே பகைவரை வெல்வாய். இழந்த ராஜ்யத்தை அடைவாய்," என வரந்தந்து, சத்தியாயுதம் ஒன்றையும் தந்து இந்த சத்தியாயுதத் துக்கு அஞ்சி உன் பகைவர்கள் சிதறுண்டு ஓடுவர்" எனக் கூறி மறைந்தார். தாருணனும் மனைவியுடன் சிவ ப்ராசாதபலத்தாற் பகைவர்களை வென்று முன்போலத் தனது ராஜ்யத்தைப் பரிபாலித்தான்.

## சரஸ்வதி பூசித்தது

ஒரு முறை பிரமதேவர் பிரஜைகளைச் சிருஷ்டிக்க வேண்டித் தியானத்திலிருந்தார். அப்பொழுது அவர் நாவின் நுனியி லிருந்து ரசம் நழுவிற்று. அந்த ரசத்தைக் கெட்டியாக்க முடி யாமல் அதை உண்ணுவதற்காக வாயைத் திறந்தார். அப்போது அவர் வாயிலிருந்து திடீரென்று சுத்த வர்ண சரஸ்வதி தோன்றி

னாள். அவளைக் கண்டு பிரமதேவர் காதல் கொண்டவராய் "ரசம் பொருந்திய நாவினின்றும் தோன்றினவளே! உனக்குச் சரஸ்வதி என்னும் பெயர் விளங்குவதாக! நீ இரண்டு அம்சங்களாக விளங்குவாயாக! ஓரம்சத்தால் நதியாகுக, (இது சரஸ்வதிநதி); பிறிதோரம்சத்தால் அழகிய பெண்ணாகி என்னையே சேவிப்பாயாக. பின்னும் உருவருவாக உயிர்களிடத்தில் எப்பொழுதும் வசிப்பாயாக" என்றனர். சரஸ்வதியும் 'அப்படியே' என்றுரைத்துத் தக்ஷனுடைய மகளாகிக் கோகர்ணத்தை யடைந்து விரதம் அநுஷ்டித்தாள். தீர்த்தம் ஒன்றை உண்டுபண்ணி, லிங்கப்பிரதிஷ்டை செய்து தவநெறியில் இருந்தாள். பிரமதேவர் பிரத்தியக்ஷமாகி 'உனக்கு என்ன வரம் வேண்டும்' என வினவ, சரஸ்வதியும் 'எனது தீர்த்தத்தில் முழுகி யான் ஸ்தாபித்த லிங்கத்தைப் பூஜை செய்பவர்கள் வாக்கு வல்லபம் பெற்றவராக விளங்க வேண்டும்! தேவதேவனே!' என்றனள். பிரமதேவரும் அவ்வண்ணமே வரங்கள் தந்து நீ எப்பொழுதும் நாவில் வசிப்பாயாக. நீ உண்டுபண்ணின தீர்த்தம் 'சரஸ்வதி குண்டம்' என விளங்குக' என ஆசிதந்து மறைந்தார். சரஸ்வதியும் அன்பு நிறைந்த மனத்தளாய்ப் பிரமனை அடைந்தாள்.

(ஆறும் அத்தியாயம் முற்றும்)

## அத்தியாயம் 7.

## காயத்திரி — சாவித்திரி பூசித்தது

சிருஷ்டியின் பொருட்டுப் பிரமாவின் முகங்களினின்று பாரத வருஷத்தில் நான்கு ரகசியத்துடனும் சாகைகளுடனும் நான்கு வேதங்கள் உண்டாயின. பிரமா அவைகளை அலசிக் கடைந்தார். அப்படிக் கடைந்ததில் 'காயத்திரி' உண்டானாள். வேதங்களின் சாராம்சமாகச் சாவித்திரி வந்தனள். துதிப்பவரைக் காக்கும் காரணத்தால் 'காயத்திரி' எனப் பெயர் வந்தது. பிரமா காயத்திரியை நோக்கி, 'நீ கோகர்ணம் சென்று தவஞ்செய்க; பின்பு என்னிடம் சேர்ந்திரு' என்றனர் 'அங்ஙனமே செய்கின்றேன்' எனக் கூறிக் காயத்திரி மறைந்தாள். (முதலில் தன்னைக் கவனிக்கவில்லை எனப் பொறாமை கொண்ட) சாவித்திரியைப் பிரமா கோபத்துடன் நோக்கி உன் சரீரம் சீக்கிரத்தில் நாசமுறுக' எனச் சபித்தனர். சாவித்திரி சரீரம் இழந்து வாயுரூபமாகச் சஞ்சரித்துக் கோகர்ணம் அடைந்து உத்தம தவத்தைச் செய்தாள். ஒரு தீர்த்தத்தையும் உண்டு பண்ணினாள். பிரமா அங்குப் பிரத்யக்ஷமாகிக் காயத்திரியையும் சாவித்திரியையும் பார்த்து 'உங்களுக்கு வேண்டிய வரம் யாது' என்றார். காயத்திரி, "பகவானே!

Q23:38.28 N48



நான் சித்தியை இச்சிக்கின்றேன். நான் உண்டு பண்ணின தீர்த்தம் 'காயத்திரி தீர்த்தம்' எனத் தீர்த்தங்களுட் சிறந்ததாக வேண்டுகின்றேன்' என்றாள். சாவித்திரி 'தேவ! உனது பிரசாதத்தால் நான் சரீரம் பெற விரும்புகின்றேன்' என்றாள். 'காயத்திரி தீர்த்தத்தில் முழுகுபவர்கள் மூன்று ஜென்ம பாபங்களும் தொலைந்து சுகமுறுக' என்றும், 'சுபமான சரீரத்தைச் சாவித்திரி பெறுக' என்றும் வரங்களைத் தந்து பிரமதேவர் காயத்திரி சாவித்திரி என்னும் இருவருடனும் [illegible] இருப்பிடஞ் சேர்ந்தனர்.

TAMILNADU ARCHIVES 109848

## நாகங்கள் பூசித்தது

உச்சைச்சிரவசு காரணமாகத் தமது தாயினாற்*சாபம் பெற்ற, நாகங்கள் கோகர்ண க்ஷேத்திர மடைந்து தவஞ் செய்தன. நிர்மல மான தீர்த்தத்தை உண்டு பண்ணிச் சிவலிங்கப் பிரதிஷ்டையும் செய்தன. பிரமா தோன்றி 'நாகங்களே! உங்களுக்கு வேண்டிய வரம் யாது' என, நாகங்கள் "தேவே! நாங்கள் தாயார் சாபம் பெற்றுளோம். அந்தச் சாபத்தினின்றும் விடுதலை தந்தருளுக" என வேண்டின. பிரமா அப்படியே வரம் தந்து சாபத்தை நீக்கி "நீங்கள் உண்டு பண்ணின தீர்த்தமும் பூசித்த லிங்கமும் சர்வ சித்திகளையும் தருவனவாம். பித்ரு சாப விமோசனத்தைத் தரும்"— என வரம் தந்து மறைந்தார். ஆவணி ஸ்ரீ சுக்லபக்ஷம் பஞ்சமி திதியில் நாக தீர்த்தத்தில் முழுகிச் சிவபெருமானைச்

---

*சாப வரலாறு:—

உச்சைச் சிரவம் என்பது முழு வெளுப்பான குதிரை; இந்திரனுக்கு வாகனம்; விநதை, கத்துரு என்பவர் காசிபரின் மனைவிகள். விநதை உச்சைச் சிரவம் முழு வெளுப்பு என்றாள்: கத்துரு அதன் வால் மாத்திரம் கறுப்பு என்றாள்: முழு வெள்ளையாய் இருந்தால் கத்துரு விநதைக்கு அடிமையாக வேண்டும். கறுப்பு ஏதேனும் இருந்தால் விநதை கத்துருவுக்கு அடிமையாக வேண்டும் என்று பந்தயம் போட்டுக் கொண்டார்கள் இருவரும். கத்துரு, தான் சொன்னதைச் சாதிக்க வேண்டித், தன் பிள்ளைகளாகிய பாம்புகளை அழைத்து அந்தக் குதிரையின் வாலைக் கடித்து உங்கள் விஷத்தால் கறுப்பாக்கி விடுங்கள் என்றாள். குழந்தைகள் "தாயே! எங்கள் பெரியதாயை எப்படி வஞ்சிப்போம்; இது எங்கள் பிதாவுக்கும் சம்மதமாகாது; நாங்கள் அப்படிச் செய்ய மாட்டோம்." என்றன. கத்துருவுக்குக் கோபம்வந்து "சொந்த தாயின் சொல்லை மறுக்கின்றீர்கள், நீங்கள் உங்கள் குழந்தைகளைத் தின்னக் கடவீர்கள்" என்று சபித்தாள். இந்தச் சாபத்துக்கு அஞ்சின ஒரு பாம்பு—கார்க்கோடகன்—அக்குதிரையின் வாலைக் கடித்துக் கறுப்பாகச் செய்தது. விநதையும் கத்துருவுக்கு அடிமையானாள். பின்பு கருடனால் இந்த அடிமைத்தனம் நீங்குகின்றது. இதன் விரிவைத் திருக்குடவாயிற் புராணத்திற் காண்க.

சர்ப்ப சூக்தத்தால் பூஜை செய்தால் மாதா சாபம் பலிக்காது; சர்ப்ப சாபம் நசிக்கும். (சுக்ல பக்ஷம், கிருஷ்ண பக்ஷம்) பஞ்சமி திதியில் நாக தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து நாகலிங்கத்தை நாக *சூக்தத்தால் அர்ச்சிக்க வேண்டும்.

## பூமிதேவி பூசித்தது.

பிருகுவின் சந்ததியான பரசுராமர் க்ஷத்திரிய சந்ததிகளைக் கொன்று பூமியைக் கவர்ந்து யக்ஞம் செய்து காசிப முனிவருக்குப் பூமியைத் தானம் கொடுத்தார். அவர் அந்தப் பூமியைப் பிராமணர்களுக்குக் கொடுத்தார். பூமியில் அரசர்களே இல்லாது ஒழிந்தனர். அதர்மம் மிக்கது. பூமிதேவி அதர்மத்தைப் பொறுக்க முடியாமல் கோகர்ணத்துக்குச் சென்று சத சிருங்கத்தின் உச்சியில் உட்பாகத்திற் பிரவேசித்துக் கடுந்தவம் தேவ வருஷம் ஆயிரம் வருஷம் செய்தனள்; அதனால் திருப்தியுற்ற மஹாதேவர் எதிர் தோன்றி 'வேண்டிய வரத்தைக்கேள்' என்றனர். பூமிதேவி 'பிரபுவே! அரசரில்லாத இவ்வுலகை முன்போலச் செய் தருளுக' என வேண்டினள். சங்கரரும் 'அங்ஙனமே ஆகுக, என வரம் தந்து நீ "காஸ்யபி" எனப் பிரசித்தி பெற்றவளாகுக; நீ தவஞ்செய்த இடம் "கோ கர்ப்பம்" எனப் பிரசித்தி பெற்றதாகுக. இங்கு வரும் நரர்களுக்குக் கர்ப்பவாசம் உண்டாகாது' என வரங்கள் தந்து மறைந்தார். பூமிதேவியும் சாந்தியுற்று முன் போலிருந்தாள்.

## வசிஷ்டர் பூசித்தது (நிமியின் சாபவிமோசனம்).

பிரமாவின் மானஸ புத்திரர் வசிஷ்டர். அவர் இக்ஷ்வாகு என்னும் அரசன் வேண்டியபடியே அவனுக்குக் குலகுரு ஆனார். இக்ஷ்வாகு வமிசத்தில் வந்த உத்தமன் நிமி என்னும் அரசன். அவன் வேட்டையாடி வந்து அலுப்பால் தனது அரண்மனையில் தூங்கும் சமயத்தில் வசிஷ்ட முனிவர் அங்கு வந்தார். வாயிற் காப்போன் 'அரசர் தூங்குகின்றார்' என்றான். என்னை வரவேற்காது அவமதித்த காரணத்தால் அரசனது சரீரம் நாசம் அடைய வேண்டியது எனச்சபித்துப் போய்விட்டார். சிறந்த தருமவானாகிய அரசன் கண் விழித்து விஷயத்தை அறிந்து குரு நியாயமின்றித் தனக்குச் சாபமிட்டதைக் கேட்டுத் தானும் குருவை 'விப்ரேந்திரரே! நீங்கள் எங்ஙனம் என்னைச் சபித்தீர்களோ அங்ஙனமே உமது தேகமும் நசிக்கக் கடவது; இது நிச்சயம்' எனச் சபித்தான். பின்பு இருவரும் வாயு ரூபத்தராய்ப் பிரமலோகத்தை அடைந்தனர். இவர்கள் நிலையைக் கண்ட பிரமா வசிஷ்டரை நோக்கி "முனியே!

---

† சூக்தம் = வேதத்தின் பகுதி.

நீ கோகர்ணம் செல்லுக; அங்கே அதிசிரேஷ்டமான தபோவனத்தில் மித்திரன், வருணன் என்னும் பெயரிய முனிவர்கள் தவஞ் செய்துகொண்டிருக்கின்றனர். அங்கே வருணனால் உன் சரீரத்தை நீ மறுபடி பெறுவாய்' என்றனர். நிமி 'தேவேச! சரீரம் அழியக் கூடியது. அதை நான் விரும்பவில்லை. உன் அநுக்கிரகத்தால் எல்லா மனிதர்களுடைய கண்களிலும் நான் வசிக்க விரும்புகின்றேன்' என்றனன். பிரமாவும் 'அப்படியே ஆகுக' எனக் கூறினர். அது முதல் நிமி எல்லாருடைய கண்களிலும் வசிக்கின்றான்; எல்லா நரரும் இமை (நிமை) உள்ளவர்களானார்கள்.

வசிஷ்டரும் வருணனுதவியால் சரீரத்தை யடைந்து, கோகர்ணத்தில் லிங்கப்பிரதிஷ்டை செய்தும், நிர்மல தீர்த்தம் உண்டு பண்ணியும் தவமியற்றினார். பின்பு மகேசுரரிடத்தில் யோக சித்தியை அடைந்து தமது பழைய இடத்துக்குச் சென்றார்.

## விசுவாமித்திரர் பூசித்தது

பிரமாவின் மானச புத்திரன் குசிகன் என்னும் அரசன். குசிகன் மகன் குசநாபி; குசநாபியின் புதல்வன் காதி. காதி தூர்வாச முனிவரது மகளை மணந்தான். பிருகு புத்திரன் ருசீகன். ருசீகன் காதியின் கன்னிகை சத்தியவதியை மணந்தான். பிருகு முனிவர் ருசீகனுடைய வீட்டுக்கு வந்து தன் மருமகளைப் பார்த்து "பத்ரே! உனக்குப் புத்திரன் உண்டாவான். உன் தாயுக்கும் ஒரு புத்திரன் பிறப்பான். நீங்கள் இருவரும் அரச, அத்தி என்னும் விருக்ஷங்களை ஆலிங்கனம் செய்யுங்கள்" என்று சொல்லிப் போனார். பிறகு சத்யவதியும் அவள் தாயும் யார் அரச மரத்தைத் தழுவுவது, யார் அத்தி மரத்தைத் தழுவுவது என்னும் முறையை மறந்து பிருகு முனிவர் சொன்னதற்கு நேர் மாறாகத் தழுவினார்கள். பின், சத்யவதியும் அவள் தாயும் கருப்பம் ஆனார்கள். பிருகு முனிவர் அப்போது வந்து மருமகளைப் பார்த்து 'நீயும் உன் தாயும் ஆலிங்கன முறை மாறாகச் செய்துவிட்டீர்கள். அதனால் உன் பிள்ளை க்ஷத்திரிய ஆசாரம் கொள்வான்; உன் தம்பி (உன் தாய்க்குப் பிறக்கும் பிள்ளை) தவத்தால் பிராமணன் ஆவான்' என்றார். அதைக் கேட்ட சத்தியவதி "முனிவரேறே! என் புத்திரன் பிராமண ஆசாரனாதல் வேண்டும்; அருளுக" என்றனள். அதற்குப் பிருகு "பத்ரே! அங்ஙனே ஆகுக; ஆனால் உன் பேரன் க்ஷத்திரிய ஆசாரம் உடையவனாவான். இது நிச்சயம்" எனக் கூறிச் சென்றனர்.

பிறகு, காதிக்குப் பேர்போன குமாரன் விசுவாமித்திரன் பிறந்தான். அவன் தரும வழியில் உலகைக் காத்துவந்தான். ஒருநாள் இமயமலைச் சாரலிற் காட்டில் வேட்டையாடி

அதிகக் களைப்புடன் வசிஷ்ட முனிவருடைய ஆசிரமத்தை அடைந்தான். வசிஷ்டர் "அரசே! நீ இங்குத் தங்குக; க்ஷண நேரத்தில் உனக்கு அன்னம் படைக்கின்றேன்" எனக்கூறிக் காம தேநுவை அழைத்துச் 'சேனையுடன் வந்துள்ள இந்த அரசனுக்கு நீ போஜனம் அளிப்பாயாக' என்றனர். தேநுவும் ஒரு நொடியில் விசித்திரமான பலவகைப் போஜனத்தை அளிக்க அரசன் அவைகளை உண்டு மகிழ்ந்தான். பின்பு அரசன் வசிஷ்டரை நோக்கி "முனீந்திரரே! ராஜனான எனக்கு இந்தக் காமதேநு யோக்ய மானது. பதினாயிரம் பசுக்களுக்கு இது சமானமாகும். இது யான் பெறத்தகும்; தந்து உதவுக." என்றனன். வசிஷ்டர் 'ராஜ சிரேஷ்டனே! இப் பசு ஹோமதேநு, இது என்னுடையது. கொடுக்கத் தக்கதல்ல,' என்றனர். அதைக் கேட்ட அரசன் கோபங்கொண்டு "நான் இப் பசுவைப் பலாத்காரமாய்க் கொண்டு போவேன், நான் க்ஷத்திரியன்" எனக் கூறி அங்கிருந்த தேநுவைக் கைப்பற்றித் தனது நகர் நோக்கிப் புறப்பட்டான். அப்பொழுது தேநு முனிவரை நோக்கி "இந்தத் துஷ்டர்களால் இழுத்துப்போகப் படுகிறேனே! நீங்கள் சும்மா இருக்கிறீர்களே" எனக் கேட்டது. வசிஷ்டர் "நாங்கள் பொறுமைக் குணமுடையவர்கள். இவர்கள் பொல்லார்; உன்னைப் பலாத்காரமாய்க் கொண்டு போகின்றார்கள்" என்றார். காமதேநு மிக்க கோபங்கொண்டு ஆகாசத்திற் கிளம்பிப் பலவித யுத்த வீரர்களை உடனே சிருஷ்டித்து அனுப்ப, அவர்கள் அரசனது படையைத் தாக்கி ஒரு க்ஷண நேரத்தில் அழித்தனர். தோல்வியுற்ற அரசன் நாணமடைந்து ருத்ர மூர்த்தியைப் பூசித்து அவரிடமிருந்து ருத்ர தண்டத்தைப் பெற்று மறுபடி வசிஷ்டரை வந்து தாக்கினான். அத் தண்டத்தை வசிஷ்டர் அப்படியே விழுங்கினார். தண்டம் முனிவர் தேகத்தைப் பிளந்து ருத்ர மூர்த்தியை அடைந்தது. பிரமதேவர் திருவருளால் முனிவர் தேகம் இடையூறின்றி செம்மையாயிற்று. இதைக் கண்ட விசுவாமித்திரர் பிரம பலத்துக்கு முன்பு க்ஷத்திரியபலம் நிற்க முடியாது என்னும் உண்மையை உணர்ந்து, க்ஷத்திரிய பலத்தை அவமதித்து, உடனே கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்து சதசிருங்க உச்சியில் லிங்கப் பிரதிஷ்டை செய்து அதன் கீழ்த் தீர்த்தமும் உண்டுபண்ணிப் பதினாயிர வருஷம் தவம் புரிந்தார். பிரமா, விஷ்ணு, மகேசுரர் மூவரும் அவரெதிரில் பிரத்யக்ஷமாகி 'உனக்கு வேண்டிய வரங்களைக் கேள்' என்றனர். அதற்கு விசுவாமித்திரர் "எனக்கு பிராமண்யம் அருளுங்கள். நான் பிரதிஷ்டித்த லிங்கமும் உண்டு பண்ணின தீர்த்தமும் மிகப் பிரசித்தி அடைய அருளுங்கள்" என வேண்டினர். இதைக் கேட்ட மூவரும் 'அங்ஙனமே ஆகுக' என அருள் செய்து பிராமண்யத்தையும், பிரம தண்டத்தையும் விசுவாமித்திருக்குத்

தந்து மறைந்தார்கள். விசுவாமித்திரரும் பிராமண்யத்தைப் பெற்று மஹா சிரேஷ்டரானார். எவன் விசுவாமித்திர தீர்த்தத்தில் முழுகி விசுவாமித்திர லிங்கத்தைப் பூசித்து ஜெபிக்கிறானோ அவன் ஏழு ஜன்மம் உலகில் காயத்திரியை லக்ஷ முறை ஜெபித்த வேத வேதாங்க பாரகனாவான்; பிராமணோத்தமன் ஆவான்.

### சுமித்ர முநிவர் பூசித்தது (கங்காதாரை வரலாறு)

புலஸ்தியர் குலத்தில் சுமித்திரன் என்னும் பெயருடைய பிராமண சிரேஷ்டர் ஒருவர் இருந்தார். அவர் கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்து சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து கடுந் தவம் இயற்றினார். சிவபிரான் உமாதேவியுடன் அவருக்குக் காட்சி தந்தருளினார். இதையறிந்த முநிவர்கள் யாவரும் கங்கையைக் கோகர்ணத்துக்குக் கொண்டுவர விரும்பினராய் ஒன்றுகூடி யோசித்துக் கோடிதீர்த்தம் உள்ள அக்கினி மூலையில் கணபதியைப் பூசித்து, சுமித்திர முநிவரை அடைந்து 'அந்தண சிரேஷ்டரே! சிவதரிசனத்தால் தாங்கள் ஒரு சித்தபுருஷராகின்றீர். மூவுலகத்தும் செல்லவல்ல பாதாள கங்கையை உலக நன்மையைக் கருதி இத்தலத்துக்கு வரும்படிச் செய்யுங்கள்.' என வேண்டினார்கள். சுமத்திரரும் அதற்கு இசைந்து சிவபிரானைப் பூசிக்க, அவர் பிரத்யக்ஷமானார். சுமித்திரர் – 'கங்கையைத் தந்தருள வேண்டும், பெருமானே!' எனப் பிரார்த்தித்தனர். சிவபிரானும் கங்கையை வரும்படி நினைக்கக் கங்கை சதசிருங்க உச்சியில் ஆரவாரத்தோடு பெருகி வந்தனள். அதைக் கங்காதாரை என்று முநிவர்கள் சொல்லுகின்றார்கள். இதுவே உருஅருவாகிய கங்காதேவி கோகர்ணத்தை அடைந்த வரலாறு. இந்தக் கங்காதாரையில் ஸ்நாநஞ் செய்தால் ஏழுஜன்ம பாபங்களும் நாசமாகும்.

(ஏழாம் அத்தியாயம் முற்றும்)

## அத்தியாயம் 8

### கராசுரன் பஸ்மமான கதை: வைதரணி: ஏலாவனம்.

முன்னொரு காலத்தில் சதசிருங்க மஹாகிரியில் ஜலக்ரீடை செய்து கொண்டிருந்த பார்வதியைக் கராசுரன் என்பவன் கண்டு அத்தேவியை அடைய விருப்பங் கொண்டவனாய்ப், பாவியாகிய அவன், கோரமான தபம் செய்தான். அவன் தவத்துக்கு உகந்து பரமசிவன் எதிர் தோன்றி என்ன வரம் வேண்டுமெனக் கேட்கக், கரன் 'எங்கும் உள்ளவனே! யார் தலையில் நான் கையை வைப்பேனோ அவர் பஸ்மமாகப் போக வேண்டும். இந்த வரத்தைத் தந்தருளும்' என வேண்டினன். 'அப்படியே ஆகுக' என்றார் சிவ

பிரானும். அங்ஙனம் வரந் தந்தவுடன் சிவபிரானது தலையிலேயே அவன் கையை வைக்க வருவதைக் கண்டு சிவபிரான் விஷ்ணுவிடம் நிகழ்ச்சியைக் கூற, விஷ்ணு ஓரம்சத்தால் ஒரு மோகினியைச் சிருஷ்டித்து அசுரன் எதிரிற் போகச் செய்தார். மோகினியைக் கண்ட அசுரன் அவளது ரூபலாவண்யத்தைக் கண்டு மயங்கிப் பார்வதி மேல் தான் கொண்ட காதலை மறந்தவனாய், "ஏ! அழகி! நீ யார்? யாருக்கு உறவு? நான் ஹிரண்யகசிபின் வமிசத்திற் பிறந்தவன். லோக பிரசித்தியுள்ளவன். எவர் தலையில் என் கையை வைப்பேனோ அவர் பஸ்மமாகிப் போவார். அப்படிப் பட்ட வரத்தைச் சிவபிரான் என் தவத்துக்கு உகந்து தந்தருளியுள்ளார். சிவனை இவ்வாறு கொன்று பார்வதியை ரமிக்க நான் எண்ணினேன்; ஆயினும் உன் அழகைப் பார்த்த பிறகு நீயே எனக்கு ஒத்தவள்; நானே உனக்குச் சரியானவன்; ரமிக்க என்னுடன் வருக" எனப் பரிவுடன் மோகினியை அழைத்தனன். அதற்கு மோகினி "விவாகம், விவாதம் இவை இரண்டும் ஒருவரோ டொருவர் சமானமாயிருந்தால் நடக்க வேண்டியவை. நீ பெரிய வரப்ரசாதி; நான் ஒரு வரமும் பெறாதவள்; அபலை; ஆதலால் நீ பெற்ற வரத்தை எனக்கு முதலிற் கொடுத்து விட்டுப் பின்பு என்னிடம் கலியாண சுகத்தைப் பெறுவாயாக' என்றனள். இதைக் கேட்ட கரன் 'அங்ஙனே ஆகுக' எனக் கூறித் தான் ஈசனிடம் பெற்ற வரத்தை மோகினுக்குத் தந்து காமாந்தகனாய் அவளை நெருங்கி அணைய முயன்றான். அப்பொழுது மோகினி தனது இடக்கையால் அவன் கழுத்தைப் பிசைந்து தனது வலக்கையை அவன் தலையில் வைத்துப் பஸ்மமாகுக எனச் சபித்தாள். கராசுரன் உடனே பஸ்மமானான். வானவர் இது கண்டு பூ மழை பொழிந்தார். (மோகினி உருவெடுத்த) விஷ்ணு சிவபிரானிடம் சென்று உன் சத்துரு கொல்லப்பட்டான் என்றார். அதைக் கேட்டதும் வைதரணி நதியில் முழுகி மறைந்திருந்த விஷ்ணுவின் பிறிதோ ரம்சமும் ...ரானும் அங்கிருந்து வெளிக் கிளம்பினர். நதியில் எந்தப் பாகத்தில் ... வெளித் தோன்றினார்களோ அந்த இடம் உன்மஜ்ஜனம் எனப்படும். தீர்த்தங்களுள் உத்தம தீர்த்தம் வைதரணி நதி, உன்மஜ்ஜனம் அந் நதியின் முன்பாகம். வைதரணி உருவருவாகிய நதியாகிக் கோடி தீர்த்தத்தில் உற்றுப் பின்பு தாம்ர கௌரியுடன் கலந்து சமுத்திரம் அடைகின்றது. வைதரணியில் மூழ்கி ஸ்நாநம் செய்பவன் எல்லாப் பாபங்களினின்றும் விடுபடுகிறான். உன்மஜ்ஜனத்தில் மூழ்கி ஸ்நாநம் செய்பவன் சந்திரன் போல விளங்குவான். உன்மஜ்ஜனத்தில் முழுகின விசேடத்தால் ஏலாபத்ரம் என்னும் யானை மஹா சக்தியுள்ள சித்தன் ஆயிற்று. உன்மஜ்ஜனத்தின் சுற்றுப்புற மெல்லாம் ஏலாவனம் எனப் பிரசித்தி பெற்றது.

## நரநாரீசுரர்—ஹரிஹரபுரம்—வரலாறு

பின்னர் சங்கரர், விஷ்ணுவை நோக்கி, 'நீ எடுத்த ஸ்த்ரீ ரூபத்தைக் காட்டுக' என்றனர். ஹரியும் அவ்வாறே காட்டிக் கராசுரன் பஸ்மமான வரலாற்றை விளக்கினர். சிவபிரான் 'நீ இந்த மோகினி ரூபமுடன் என்னுடன் இரு' எனக் கூறி அவளைத் தழுவினர். இருவரும் ஒருருவாகி நர நாரீஸ்வரர் ஆனர். அந்த இடம் 'ஹரிஹரம்' என்னும் பெயருடன் கோகர்ணத்தில் விளங்குகின்றது. அது சுரபூஜிதமான உத்தம ஸ்தானம். இங்கு தானம் செய்தவன் தேவபோகம் அடைவான். மூவேழு தலை முறை சுவர்க்கத்தில் வாழ்வான். ஹரிஹரபுரத்தில் மூன்று மண்டபங்கள் உள்ளன. ஒன்று வைராக்கியம் தருவது. ஒன்று ஞானம் தருவது. ஒன்று முத்தி தருவது. வடக்கில் இருப்பது வைராக்ய மண்டபம். இங்கு ஒருமாதம் இருந்து காயத்திரி ஜெபம் செய்தால் வைராக்யம் ஏற்படும். ஹரிஹரர் சந்நிதிக்கு எதிரில் இருப்பது ஞானந் தரும் மண்டபம். அங்கு ஒருவன் ஒரு மாதம் இருந்து அஷ்டாக்ஷர மந்திரம் ஜெபித்தால் ஞானமடைந்து விஷ்ணு சாயுஜ்யம் பெறுவான். நிருதி திக்கில் உள்ளது முத்தி மண்டபம். அங்கு பாபாத்மாக்கள் இறந்தாலும் பாபங்கள் நீங்கிப் பரகதியைப் பெறுகின்றார்கள்; எவன் அங்கு இறக்குந் தருணத்தில் ஹரியை நினைந்து நாம சங்கீர்த்தனம் செய்கின்றானோ அவனுக்கு விஷ்ணு அவன் தலையில் தமது திருக்கரத்தை வைத்துப் பிரமோபதேசம் செய்கின்றார். அவனும் பிரம மாகின்றான்.

## வைதரணி சாபம் தீர்ந்தது

தர்மராஜாது மகள் நதி வைதரணி; அந்த நதி தன் பர்த்தாவாகிய வருணனிடத்திற் போகாததால், பர்த்தா கோபங் கொண்டு "நீ இரத்த நீர் உடைய நதி ஆகுக" எனச் சபித்தார். இதைக் கேட்ட வைதரணி பர்த்தாவை வணங்கிச் 'சாபத்தைத் தீர்த்தருளுக' என வேண்டினள். 'நீ பாதாள லோகம் சென்று ஹரிஹரரைத் தரிசித்துச் செயற்கரிய தவஞ்செய்தால் சாபம் நீங்கும்' என்றான் வருணன். அங்ஙனமே வைதரணி பாதலம் சென்று தவஞ்செய்து சாபம் நீங்கப் பெற்றனள். வைதரணியும் கணவனுடன் சேர்ந்து வாழ்ந்தாள். வைதரணி நதியில் மூழ்கி ஸ்நாநம் செய்பவர்கள் சர்வ தீர்த்தங்களிலும் முழுகின பலனை அடைகின்றார்கள்.

## துர்க்கை தவஞ்செய்தது

அந்த உந்மஜ்ஜந தீர்த்த பாகத்துக்கு அக்கினி திசையில் துர்க்கா தேவி யசோதையிடம் தோன்றினள். துர்க்கை ஆகாச மார்க்கமாகக் கோகர்ணத்துக்கு வந்து வைதரணிக்கு அருகில் ஒரு

தீர்த்தம் உண்டு பண்ணித் தவஞ் செய்தாள். ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் ஆக்ஞைப்படி அங்கிருந்து துர்க்கை விந்தியமலைக்குச் சென்றாள். ஆயினும் தனது ஓரம்சத்துடன் சதசிருங்கத்துக்கு அருகில் துர்க்கை வசித்தாள்.

## பாண்டவ தீர்த்தம்

பாண்டுவின் பிள்ளை தருமபுத்திரர் பூப்ரதக்ஷணஞ் செய்து கோகர்ணத்துக்கு வந்து கோடி தீர்த்தத்தில் முழுகி மஹாபலரைப் பூசித்தார். சதசிருங்கத்தில் நிர்மலமான ஒரு தீர்த்தம் உண்டாக்கித் தன் சகோதரர்களுடன் நான்கு மாத காலம் அங்கு இருந்து பின்பு த்வைத வனம் சென்றார். அதுதான் பாண்டவ தீர்த்தம்.

## ராம தீர்த்தம்.

ராவணாதி ராக்ஷதர்களைக் கொன்ற பிறகு ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டு அயோத்தியில் இருந்தார். அப்பொழுது ஸ்ரீராமர் அகத்திய முனிவர் மூலமாய் ராவணன் பிராமண வம்சம் என்று கேள்விப்பட்டு பிரமஹத்தி தன்னைப் பீடிக்கும் என்று பயந்து வசிஷ்ட முனிவர் உபதேசித்தபடிச் சீதை, லக்ஷ்மணர் முதலானோரும் ஹநுமாரும் தன்னுடன் வரக் கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்தார். அங்கு, தீர்த்தம் உண்டுபண்ணி ஆசை வற்ற தவத்தைச் செய்து, மஹாபலரைப் பூசித்து, அவர் திருவருளால் பிரமஹத்தி தோஷத்தினின்றும் விடுபட்டு அயோத்திக்கு மீண்டு வந்து வாழ்ந்தார். ராம தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்த மாத்திரையில் பிரமஹத்தி தோஷம் நசிக்கும்.

## பீமகுண்டம்

கிருதயுகத்தில், விதர்ப்ப தேசத்து அரசனான பீமன் ஆசைகளைத் துறந்து தனது மகனிடம் ராஜ்யத்தை ஒப்புவித்துத் தன் பத்தினியுடன் காட்டுக்குச் சென்றான். சென்று சதசிருங்க மஹாகிரியை அடைந்து சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்தான். சிவப்ரசாதத்தால் சாசுவத சுவர்க்கம் அடைந்தான். அவன் உண்டு பண்ணின தீர்த்தம் சர்வலோகப் பிரசித்தி உள்ளதும், சகல பாபங்களையும் நீக்கவல்லதுமான பீமகுண்டம் என்னும் தீர்த்தம்.

## ஔர்வ தீர்த்தம்

பிருகு வம்சத்தில் வந்தவர் ஔர்வரென்னும் மஹாமுனிவர். அவர் சராசரங்களை எரித்துத் தள்ளும் விருப்பினராய்க் கோபமுடன் கோகர்ணத்தில் சதசிருங்கத்தில் ருத்ரமூர்த்தியைத் தியானித்து நெடுங்காலம் தவஞ் செய்தார். சிவபிரான் பிரத்யக்ஷமாக

அவரிடம் வரம் பெற்றுத் திரிலோகங்களையும் தகிக்க ஆரம்பித்தார். அக்கினிச் சுவாலை எங்கும் பரவக்கண்ட பிரமா தேவர்களுடன் சென்று விஷ்ணு மூர்த்தியைப் பிரார்த்தித்தனர். அவர் கோகர்ணம் வந்து அக்கினிச் சுவாலையைத் தமது சக்கரத்தால் சூழச் செய்து மேலே சந்திரனை ஸ்தாபித்து, ஔரவரை நேக்கி "அன்ப! கோபத்தை அடக்குக. இப்பொழுது சம்ஹாரம் செய்வது தக்கதல்ல; ஊழி இறுதியில் எனது ஆக்ஞைப்படி நீ சம்ஹாரம் செய்வாயாக; நீ உண்டு பண்ணின தீர்த்தம் ஔரவ தீர்த்தம் எனப் பிரசித்தி பெற்று விளங்குவதாக" எனக் கூறித் தேவர்களுடன் மறைந்தார்.

## சந்திர தீர்த்தம். (ஔஷதக் கூட்டம்)

முன்பொரு காலத்தில் தனது தாயின் அடிமைத் தன்மையை நீக்கக் கருதிய* கருடன் தேவாசுரர்களை ஜெயித்து அமிருதத்தைக் கொண்டு வந்தான். கருடன் அமிருதத்தை வைத்த இடத்தில் சந்திர தீர்த்தம் உண்டாயிற்று. அத் தீர்த்தம் சர்வ ரோகங்களையும் போக்க வல்லது. அந்த இடத்தில் மூன்று ஔஷதக் கூட்டங்கள் உண்டாயின. அவை (1) சோமமாலி (2) சுமாலி (3) சமாலி என்பன. அவை பெருந்தவத்தாற் பெறலாவன; பாபிகளுக்குக் கிட்டாதன.

தக்ஷன் தனது இருபத்தேழு பெண்களையும் சந்திரனுக்கு மணஞ்செய்து தந்தான். அவர்களில் நான்காவது பெண் ரோகிணி மிக அழகு வாய்ந்தவள். சந்திரன் அவளிடமே மிக்க களிப்புடன் இருந்து வந்தான். இதையறிந்த தக்ஷன் "மனைவிகளுள் வேற்றுமை பாராட்டுவதால் நீ விரைவில் க்ஷயரோகி ஆகுக" எனச் சந்திரனைச் சபித்தான். க்ஷயநோயாற் பீடிக்கப்பட்ட சந்திரன் தன் பிதாவின் சொற்படிக் கோகர்ணத்துக்கு வந்து சோம தீர்த்தத்தில் முழுகிச் சிவபிரானைத் திருப்தி செய்து சாபத்தினின்றும் விடுபட்டான். மஹேசுரனது சிரசில் இருக்கும்படியான உயர்நிலையை அடைந்தான்.

## சூரிய தீர்த்தம் (சுதர்சன சக்ரவரலாறு)

த்வஷ்டப் பிரஜாபதியினுடைய கன்னிகை சூரியனுக்கு மனைவியானாள். அவள் தனது கணவனுடைய ஒளியின் வெப்பத்தைப் பொறுக்க முடியாமல் தனது பிதாவின் வீட்டை அடைந்தாள்.

*பக்கம் 25—பார்க்க—குடவாயிற் புராணத்தில் இதன் விரிவைப் பார்க்க.

அதையறிந்து சூரியன் மாமனார் வீட்டுக்கு வந்தான். த்வஷ்டா தேவர்களுடன் ஆலோசித்து யந்த்ர சக்தியால் சூரியனது ஒளி அம்சங்களைக் குறைத்தான். சதசிருங்க தடத்தில் விழுந்த சூரிய ஒளி அம்சத்தைக் கொண்டு சிவபிரான் ருத்ர சக்ரமாகும் சுதர்சனத்தைச் செய்தார். சூரிய ஒளி விழுந்த தீர்த்த பாகம் சூரிய தீர்த்தம் எனப் பெயர் பெற்றது. சூரியன் ஒளி சிதறின இடத்தில் முழுகி ஸ்நானம் செய்பவன் சர்வ தீர்த்தங்களிலும் முழுகினவன் பெறுகின்ற பேற்றைப் பெறுவான்.

## நாகராஜன் பூசித்தது

சித்தி யடையவேண்டி அனந்தன் (நாகராஜன்) கோகர்ணத்தில் மிகக் கடுமையான தவத்தைச் செய்தான். தீர்த்தமும் உண்டு பண்ணினான். அவனது தவத்துக்கு இரங்கிச் சிவபிரான் பிரத்யக்ஷமாகி "நாகராஜ! உனக்கு வேண்டிய வரம் யாது?" என வினவினர். நாகராஜன் "மகாதேவ! பலத்திலும், தைரியத்திலும் சுமக்கும் வல்லமையிலும் எனக்கு மேம்பட்டவர் ஒருவரும் இலராகுக; ஞானம் தருக; யான் உண்டுபண்ண இத்தீர்த்தம் சிரேஷ்டம் ஆகுக' எனப் பிரார்த்தித்தான். சிவபிரான் 'அப்படியே ஆகுக' என வரம் தந்து மறைந்தார். பின்பு நாகராஜன் தனது இடத்துக்குச் சென்று நாகேந்திரர்களாலும் புகழப் பெற்றவனானன். 'அநந்த திருஷத்' என்னும் மலைக்கல் பேர் பெற்றதாயிற்று. அந்தக் கல் கடலிடையே உள்ளது. நாக ராஜ தீர்த்தம் அந்தக் கல்லிடையே உள்ளது. அதில் முழுகினல் சர்வ தீர்த்தங்களிலும் முழுகின பலன் கிடைக்கும். அந்த தீர்த்தத்தையும் அதற்குப் போகும் மார்க்கத்தையும் தரிசித்தால் சகல பாபங்களும் நசிக்கும்.

## சிம்சுமாரன் பூசித்தது

சிம்சுமாரன் என்னும் அரசன் ஆகாரமின்றிச் சித்தியை விரும்பிக் (கோகர்ணத்தில்) கடுந்தவம் செய்தான், தீர்த்தமும் உண்டு பண்ணினான். சிவ பிரான் பிரத்யக்ஷமாகி என்ன வரம் வேண்டுமென அவனைக் கேட்க, அவன் 'சுவாமி! எனக்குப் பரசித்தி வேண்டும்; இந்தத் தீர்த்தம் என் பெயரால் வழங்குதல் வேண்டும். இதில் முழுகினவர் சித்தர்களாதல் வேண்டும்' என வேண்டினான். வேண்டினவாறே வரந் தந்து இறைவன் மறைந்தார். இந்தத் தீர்த்தத்தில் முழுகினவர் சர்வாபீஷ்டங்களையும் அடைவார்கள்.

எட்டாம் அத்தியாயம் முற்றும்.

# அத்தியாயம் 9.

## சக்ர தீர்த்தம்

சநத் குமாரர் கோகர்ணத்துக்கு ஒரு குரோச அளவில் ஆசிரமம் அமைத்து, லிங்கப் பிரதிஷ்டை செய்து அரிய தவத்தைச் செய்தார். சிவ பிரான் பிரத்யக்ஷமானார். சநத்குமாரர் சுவாமி! இந்த லிங்கத்தை நரர்கள் தொட்டுப் பூசித்துத் தடையின்றிச் சுவர்க்கம் அடைய வேண்டும். யோகேசுரர் என்னும் பெயரால் இது பிரசித்தி பெறவேண்டும்! எனப் பிரார்த்தித்தார். 'அப்படியே ஆகுக' எனக் கூறிச் சிவபிரான் மறைந்தார். அது முதல் சகல ஜீவராசிகளும் அந்த லிங்கத்தைத் தொட்டுப் பூசித்துச் சுவர்க்க லோகத்தை இடமில்லாதபடி நிரப்பின. இதைக் கண்ட பிரமா, தேவர்களுடனும், முனிவர்களுடனும் திருமாலைத் தரிசித்து, "சநத்குமாரர் தாபித்த யோகேசுர லிங்கத்தைத் தொட்டுப் பூசித்துப் பிராணிகள் எல்லாம் அழிவிலாத சரீரத்துடன் சுவர்க்கத்தை அடைகின்றன. இதனால் எங்களுக்கு இடமின்றிக் கஷ்டமாயிருக்கின்றது'' என முறையிட்டனர். உடனே திருமால் அங்கு வந்து தமது சக்கரத்தால் அந்த லிங்கத்தைச் சேதித்தார். அதனால் லிங்கத்தின் கீழ்ப்பாகம் பூமியின் கீழும் லிங்கத்தின் மேல்பாகம் சக்கரத்தின் மேலும் அமைந்தன. சக்கரம் பாரமிகுதியால் மூழ்கலாற்றது; பின்பு தேவர்கள் சக்கரத்தைப் பெறவேண்டிச் சிவபிரானைப் பூசித்தனர்; சிவபிரான் சக்கரத்தை வெளிக் கிளப்பினார். அப்பொழுது அங்கு உண்டாகிய தீர்த்தம் சக்கர தீர்த்தம்; இது பிரசித்தமான தீர்த்தம். சர்வ பாபங்களையும் போக்க வல்லது. சக்கரத்தாற் சேதிக்கப்பட்டதால் அந்த லிங்கம் "சக்கிர கண்டேசுரர்" ஆனார். அந்த லிங்கத்தைப் பூசிப்பவன் சுவர்க்கம் எய்துவான்.

## கபில தீர்த்தம்

கிருத யுகத்தில் தை மாதத்தில் சூரிய கிரஹணத்தில் கோகர்ணத்துக்குப் பெருங் கூட்டம் வந்தது. இதைக் கண்ட கவுரி எதற்காக இவ்வளவு கூட்டம் எனச் சிவபிரானை வினவ அவர் கிரஹண காலத்தில் என்னை வழிபடுபவர்கள் சுவர்க்கத்தை அடைவார்கள் என்றார். இத்தனை பேருக்கும் சுவர்க்கத்தில் இடம் எங்கே எனத் தேவி வினவினள். அதற்குச் சங்கரர் "இத்துணைக் கூட்டத்தில் மூவரே சுவர்க்கம் அடைவர். அவரவர் செய்யும் கருமத்துக்கு ஏற்ப அவரவர்க்குப் பலன் கிடைக்கின்றது. இதன் உண்மையை உனக்கு இப்போதே காட்டுகின்றேன்" எனக் கூறித் தேவியும் தாமும் இரண்டு பசுக்களின் ரூபங் கொண்டு

அக் கூட்டம் காணக்கூடிய வழியில் ஓரிடத்தில் தீர்த்தத்திற் சேற்றில் அழுந்தித் தவிப்பது போலத் தோற்றங் காட்டினர். கூட்டத்தார் யாவரும் அப் பசுக்களின் கஷ்டத்தைப் பார்த்து விட்டு ஒன்றும் உதவி செய்யாமற் போய்க் கொண்டிருந்தனர். புருகுத்ஸ என்னும் பிராமணர் ஒருவர் மாத்திரம் அப் பசுக்களைச் சேற்றினின்றும் மீட்க மிக முயன்றனர். பின்னர் ஆத்ரேயன் என்னும் அந்தணரும், சுஹோத்ரர் என்பவரும் உடன் சென்று உதவி மூவருமாக அந்த இரண்டு பசுக்களையும் சேற்றினின்று வெளிக் கிளப்பி, அவைகளைக் குளிப்பாட்டி, உடம்பு தேய்த்து, பசும்புல் உண்ணக் கொடுத்து பலவகைய உதவியும் உபசாரமும் செய்தனர். சிவபிரான் இவர் தம் பக்திக்கு மகிழ்ச்சியுற்று இம் மூவரையும் பிறவிச் சேற்றினின்றும் கரையேற வைத்தார். ஆதலால் பக்தியால் பெறப்படுவது வேறு நூறு கருமங்களாலும் பெறப் படாது. எந்தத் தீர்த்தத்திற் பசு இரண்டும் தவித்தனவோ அந்த தீர்த்தம் கபில தீர்த்தம் எனப்படும். புரட்டாசி மாதம் கிருஷ்ண பக்ஷம், அங்காரகன் சூரியனுடன் கூடினது, ரோகிணி, வ்யதீபாதம் சஷ்டி இவைகளுடன் கூடியது 'கபிலா' எனப்படும். அப்பொழுது அந்தத் தீர்த்தத்தில் முழுகுபவர்கள் பிறவிக் கடலைக் கடக் கின்றார்கள்.

## அரண்ய தீர்த்தம்

அரண்யன் என்னும் அரசன் ஆசைகளைத் துறந்து தனது புதல்வனிடத்தில் ராஜ்ய பாரத்தை ஒப்புவித்து விட்டுத் தான் கோகர்ணத்துக்கு வந்தான். அங்கு ஒரு தீர்த்தத்தை உண்டு பண்ணித் தவநிலையில் இருந்தான். சிவபிரான் பிரத்யக்ஷமாக, அவரிடம் சித்தியைப் பெற்றுக் கோகர்ணத்தில் அன்புடன் வசித்து வந்தான். அரண்ய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால் ராஜ சூய யாகம் செய்த பலன் கிடைக்கும்.

## நாத தீர்த்தம்

'சுநாதன்' எனப் பெயர்கொண்ட அந்தணர் ஒருவர் பாதாளத் துக்குப் போய் அங்கு நாகராஜனிட மிருந்து நாக மணியால் ஆய தொரு லிங்கத்தைப் பெற்றுக் கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்து அதை அங்கே ஸ்தாபித்துப் பூசித்துச் சாயுஜ்யம் அடைந்தார். அந்த ஆலயம் நாதேசுரம் எனப்படும். அங்குக் காலால் அடிக் கும் பொழுது சப்தம் கேட்கின்றது. அங்குள்ள தீர்த்தம் நாத தீர்த்தம் என்பது. நாதேசுரரைத் தரிசிப்பவர்கள் சுவர்க்கத்தை அடைகின்றார்கள்.

## அசோக பஞ்சக தீர்த்தங்கள்

ப்லக்ஷ தீபத்தின் அரசன் "அசோகன்". அவனுக்கு நூறு புத்திரர்களும் நூற்றுக் கணக்கான பேரன்மார் ஆதிய சந்ததிகளும் உண்டு. நூறு பெண்களும் இருந்தார்கள். சுமதி என்னும் அரசன் அசோகனுடன் போர் செய்து ஜெயித்து அசோகனுடைய மக்கள் முதலானோரைக் கொன்றான். பின்பு அசோகன் அக்கினியின் பிரசாதத்தாற் பெற்ற ஒரு குதிரைமீதேறி ஜம்புத்வீபத்திற் கோகர்ணத்துக்கு வந்து சதசிருங்க மலையில் இருந்த தனது பாட்டனாராதிய மூதாதையர்களைத் தரிசித்தான். அவர்கள் உபதேசித்தபடி அக்நித்விதி, அக்நி பாஹு, மேகாசுவன், புரு என்பவர்களுடன் கூடித் தவஞ் செய்தான். சிவபிரான் பிரத்யக்ஷமாக அசோகன் "கருணா நிதி! உன் பிரசாதத்தால் நான் இழந்த ராஜ்யம், புத்ர பௌத்ராதிகள் யாவையும் நான் மீட்டும் பெற வேண்டும்' என்றான். 'அங்ஙனமே பெறுவாய்' எனச் சிவபிரான் வரந் தந்து மறைந்தார். அசோகன் தன் ராஜ்யம் முதலானவையைப் பெற்று முன்போல வாழ்ந்தான். அவன் கோகர்ணத்தில் உண்டுபண்ண தீர்த்தங்கள் ஐந்தும் 'அசோக பஞ்சகம்' எனப்படும். வைகாசி மாதம் பௌர்ணமியில் அவைகளில் முழுகுபவன் துஷ்டர்களுடைய சகவாசத்தினின்றும் விடு படுகின்றான்.

### காமாகநாசிநி நதியின்வரலாறு: (காமன் பூசித்தது)

சிவபிரானது நெற்றிக் கண்ணிலிருந்து வந்த அக்கினியால் எரிபட்ட காமன் தான் சிவாபசாரம் செய்ததை நினைந்து வருந்தி அப்பாவம் தொலைய வேண்டிப் பூப் பிரதக்ஷணம் மூன்று முறை செய்து பின்பு உத்தம தலமான கோகர்ணத்திற் பிரவேசிக்க அஞ்சி அந்த க்ஷேத்திரத்துக்கு வெளியே லிங்கப் பிரதிஷ்டை செய்து தேவ வருஷம் ஆயிரம் காலம் கடுந்தவம் செய்தான். இவனது தவத்துக்கு மகிழ்ந்து வந்த மகேசுரர் 'என்ன வரம் வேண்டும்' என்றனர். அதற்குக் காமன் 'ஈச! தேவர்கள் பேச்சைக் கேட்டு முன்பு உங்களுக்குத் துரோகம் செய்தேன். அந்த தோஷ சாந்தி நான் பெறவேண்டும், இழந்த சரீரத்தையும் பெறவேண்டும். இந்த புண்ணிய தலத்துள் புகுவதற்கு வேண்டிய சுத்தியும், உங்களிடத்து அழியாத பக்தியும் வேண்டும்' என்று உரைத்தான். இதைக்கேட்ட சிவபிரான் 'எப்பொழுது திருமால் வசுதேவரது இல்லத்தில் அவதாரம் செய்வாரோ அப்பொழுது அவருக்குப் புத்திரனாக நீ பிறப்பாய். கோகர்ணத்தில் நீ பிரவேசிப்பதற்காக நான் பிராயச்சித்தம் செய்கின்றேன்' எனக் கூறிச் சிவபிரான் தமது திரிசூலத்தால் அங்கேயே தோண்டப் பாதாளத்திலிருந்து 'கங்கை' மேல் வந்து நதியாய்ப் பரவியது. சிவபிரானது அநுமதி

யுடன் அந்த நதியில் ஸ்நாநம் விதிப்படி செய்து காமன் பரிசுத்த ஞயினுன்; பின்பு, காமன் "தேவே! நான் ஸ்தாபித்த லிங்கத்தைப் பூசிப்பவர்கள் எண்ணிய எண்ணம் நிறைவேறவேண்டும்; 'அக நாசநம்' (அகம்-பாவம்) எனப் பெயர் பெற்ற இந்நதி சிறந்து விளங்குதல்வேண்டும்" எனச் சிவபிரானை வேண்ட, அவர் 'அப்படியே ஆகுக' என வரம் தந்து, 'பிரமஹத்தி, குரு வஞ்சனை, பொன் திருட்டு, மதுவுண்ணல் முதலிய பெரும் பாதகங்களும், சிறுபாதகங்களும் இந்நதியில் முழுகிக் காமேசரைப் பூஜிக்க நசிந்துபோகும்' எனஉரைத்து மறைந்தார். காமன் கோகர்ணத்துக்குள் புக்கு, கோடி தீர்த்தத்தின் முன் நிலையில் லிங்கப் பிரதிஷ்டை செய்து பக்தியுடன் பூசித்துத் தனது பணியைச் செம்மைபெறச் செய்து முடித்துத் தனது இடத்துக்குச் சென்ருன்.

## சம்பு என்னும் அந்தணன் பூசித்தது.

கலிங்க தேசத்தில் சம்பு என்னும் பெயர்கொண்ட பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் கெட்ட சஹவாசம் செய்து காமம் மிக்கவனுய் ஒழுக்கம் குன்றிப் பிராமணருள் அதமன் ஆனுன். சூது, களவு, தாயைப் புணர்தல் ஆகிய பலவித பாபச் செயல்களையும் புரிந்தான். உலகமெல்லாம் அவனைப் பழித்தது; வெறுத்தது. ஆசை, வறுமை, இவைகளால் பீடிக்கப்பட்டுப் பல இடங்களிலும் அலைந்தான். பின்பு, ஒருகால் துருவாச முனிவரைக் கண்டு சேவித்து 'எனக்கு அநுக்ரகம் செய்யவேண்டும்' எனப் பிரார்த்தித்தான். அவர் 'நீ செய்த பாபத்துக்கு அளவில்லை; ஆயினும் சகல பாபங்களையும் போக்கவல்ல கோகர்ண க்ஷேத்திரத்துக்கு நீ உன் தாயுடன் சென்று அங்குச் சிவபிரானது திரிசூலத்தால் உண்டாக்கப் பட்ட காமாக நாசிநீ என்னும் நதியில் விதிமுறை முழுகிப் பஞ்சாக்ஷரத்தை ஜெபித்துக் காமேசுர லிங்கத்தைப் பூஜைசெய்: உய்வாய்' என்றனர். அப்படியே சம்பு காமாக நாசிநியை அடைந்து, அந்த நதியில் முழுகி, காமேசுரனைப் பூஜித்துப் பஞ்சாக்ஷர ஜெபம் செய்துகொண்டு பன்னிரண்டு வருஷம் அங்கு இருந்தான். பின்பு கோகர்ண க்ஷேத்திரத்திலுள்ள கோடி தீர்த்தம் முதலிய தீர்த்தங்களிலும் முழுகி, மஹாபலரைப் பூஜித்துப் பரிசுத்தனுகித் தனது வீடுவந்து சேர்ந்து நல்ல நெறியில் நிற்பவனுன். ஆதலால் எப்படிப்பட்ட பாதகங்களையும் காமாகநாசிநி தொலைத்துவிடும்.

## ராவணன், கும்பகர்ணன்—விபீஷணன் பூசித்தது.

புலஸ்தியர் புத்திரர்களான அநேகர் சித்தி பெற்ருர்கள். கோகர்ணத்தில் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன் மூவரும் உணவு இல்லாமலும், பிரமத்யானம் செய்துகொண்டும் தவம்

செய்தார்கள். ராவணன் தனது தலையையே சேதித்து ஓமம் செய்தான். பிரமதேவர் எதிர் தோன்றி ராவணன் விரும்பியபடி அவனுக்கு அணிமாதி சித்திகளேயும், ஆயுள் யோகத்தையும், மனிதர் தவிர வேறு எவராலும் கொல்லமுடியாத வரத்தையும் தந்து உதவினர். கும்பகர்ணன் விரும்பியபடி அவனுக்கு மஹா நித்திரையை உதவினர். விபீஷணர் வேண்டிய வண்ணம் அவருக்குத் தருமத்தில் விருப்பத்தையும், விஷ்ணு பக்தியையும், மரண மின்மையையும் தந்தருளினர். இம்மூவரும் பிரதிஷ்டித்த லிங்கங்களைப் பூசிப்பவர் தீர்க்காயுள் உள்ளவர்களாவார்கள்.

## குபேர தீர்த்தம்—குபேரன் பூசித்தது

கோகர்ணத்தில் சிலேஷ்மாதக வனம் தவத்துக்குச் சிரேஷ்டமானது; சித்தர்கள் நாடுவது; ஹேதி, ப்ரஹேதி, விசுவ சித்தி, விதூரதன் முதலானோர் இங்கு சித்தி பெற்றார்கள். வரத்தின் பலத்தால், ராவணுதியர் தமது தாய் சொன்னபடி, குபேரனெடு பொருது வெற்றி பெற்றார்கள். குபேரனுடைய புஷ்பக விமானத்தை ராவணன் அபகரித்துக்கொண்டு தனது ராஜதானியான லங்கைக்குப் போய்விட்டான்; குபேரன் தனது தந்தையின் சொற்படி கோகர்ண க்ஷேத்திரத்துக்கு வந்து சிலேஷ்மாதக வனத்தில் செயற்கரிய தவத்தைச் செய்து, தீர்த்தம் உண்டுபண்ணி, லிங்கப் பிரதிஷ்டை செய்து பூசித்தான். சிவபிரான் பிரத்யக்ஷமாகி அவனுக்கு ஆட்சிக்கு அளகாபுரிப் பட்டணத்தையும், அஷ்ட நிதிகளையும், லக்ஷ்மீகரத்தையும், வடதிசைக்குத் தலைமையையும் தமது (சிவபிரானது) தோழமையையும் தந்து உதவினர். குபேர தீர்த்தத்தில் முழுகிக் குபேரேசுரனைக் கார்த்திகைத் திரயோதசியில் பூசிப்பவர்க்கு லக்ஷ்மீகரம் என்றும் நிலைத்திருக்கும்.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றும்.

# அத்தியாயம் 10.

## பிரமா பூசித்தது—பிரம தீர்த்தம்.

முன்னொருகால் பிரமா, விஷ்ணு இருவர்க்கும் "நானே உயர்ந்தோன்—நானே உயர்ந்தோன்" என வாக்குவாதம் உண்டாயிற்று. இருவர்க்கும் போர் நிகழ்ந்தது. அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் லிங்க வடிவாகத் தோன்றி—"கலகமிடாதீர்கள். இந்த லிங்கத்தின் அடிமுடியை உங்களுள் எவர் காண்கின்றாரோ அவரே சிரேஷ்டர்" என்றார். பிரமா உடனே அன்ன வடிவெடுத்து அந்த லிங்கத்தின் முடியைத் தேடப் பறந்தார். விஷ்ணு வராக உரு

எடுத்து லிங்கத்தின் அடியைக் காணக் கீழே தோண்டிச் சென்றார். விண்ணிற் பறந்து செல்லும்பொழுது மத்தியில் லிங்கத்தின் சிரசினின்றும் நழுவி விழுந்த ஒரு தாழம் பூவைப் பிரமா பார்த்தார். முடியைக் கண்டதாகத் தாம் சொல்ல நினைத்த பொய்க்கு அந்தத் தாழம் பூவைச் சாக்ஷி சொல்லும்படி ஏற்பாடு செய்துகொண்டு பிரமா சிவ சந்நிதியை அடைந்தார். விஷ்ணு லிங்கத்தின் அடியைக் காணமுடியாமல் சோர்ந்து வந்து சேர்ந்தார். சிவபிரான் உங்களிருவர்களில் யார் கண்டீர்கள் என, பிரமா 'நான் லிங்கத்தின் சிரசைக் கண்டேன். இந்த தாழை சாக்ஷி' என்றார். தாழையும் 'ஆமாம், இவர் சிரசைக் கண்டார்' எனப் பொய்ச்சாக்ஷி கூறிற்று. "அடியை என்னால் காண முடியவில்லை" எனத் திருமால் உண்மையை உரைத்தார். பொய் யுரையையும் பொய்ச் சாக்ஷியையும் கேட்ட சிவபிரான் கோபமடைந்து "நீ உலகில் பூஜை பெறாது போகக் கடவை" எனப் பிரமாவைச் சபித்தார். 'நீ பொய்ச்சாக்ஷி சொன்னதால் என்னைப் பூசிப்பதற்கு நீ யோக்யதை இல்லாது ஒழிக' எனத் தாழையைச் சபித்தார். திருமாலை நோக்கி 'நீ உண்மை உரைத்தபடியால் உலகம் உன்னைப் போற்றிப் பூசிப்பதாக' என மகிழ்ந்து உரைத்தார். பின்பு சிவபிரான் தமது கோபத்தால் பைரவரை உண்டுபண்ணி 'நீ பிரமனது உச்சித் தலையைப் பறிக்க' எனக் கட்டளையிட்டார். பைரவரும் அப்படியே செய்ய, பிரமஹத்தி பைரவரைப் பிடித்தது. பிரமா—ஆலோசித்துக் கோகர்ணத்துக்கு வந்து சத சிருங்க கிரியில் லிங்கமும் தீர்த்தமும் தாபித்து நெடுங்காலம் மலையடிவாரத்தில் தவஞ்செய்தார். சிவபிரான் தோன்றியருளி 'யாகத்தில் நீ பூஜையைப் பெறுவாயாக' என அருளி மறைந்தனர். பிரமா தனது திருவுருவையையும் தாபித்து சத்யலோகம் சேர்ந்தனர். பிரம குண்டத்தில் முழுகிப் பிரமேசனையும் பிரமாவின் திருவுருவையும் பூசிப்பவர் தீர்க்காயுஷ்மான் ஆவர். தாழையும் தீர்த்தமொன்று உண்டாக்கிச் சிவனைப் பூசித்துத் தனது தவத்தாலும் (முன் இல்லாத) பக்தியாலும் சிவபிரானை மகிழச் செய்து சிவராத்திரி புண்ணிய தினத்தில் பூஜைக்கு யோக்யமாயிற்று. அன்றைய தினத்தில் தாழம்பூவால் சிவனைப் பக்தியுடன் அர்ச்சிப்பவன் சர்வயாக பலனையும் பெறுவான். பொய்ச் சாக்ஷியால் வரும் பாவமும் தாழைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்வதால் நசிக்கும்.

## பைரவர் பூசித்தது.

பின்பு, பைரவர் கோகர்ணத்துக்கு வந்து அங்கு ஓர் ஆசிரமம் செய்துகொண்டு கண்டா கர்ணன் என்பவனுடன் ஆயிரம் தேவ வருஷம் பெருந்தவம் செய்தார். சிவபிரான் திருப்தியுற்றுப் பிரத்யக்ஷமாகப், பைரவர் 'தேவ தேவ! பிரமஹத்தி என்னைப் பகலும்,

இரவும் பாதிக்கின்றது ; அதினின்றும் என்னை விடுவிக்கவேண்டும்" என வேண்டினர். சிவபிரானும் "பைரவ! இனி உன்னை பிரமஹத்தி பாதிக்காது. அது நாசம் செய்யப்பட்டது. இனி நீ துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனம் செய்வாயாக ; நீ விரைவில் குருக்ஷேத்திரத்துக்குச் செல்க. அங்கே விஷ்ணு (பிரம கபாலத்தினின்றும்) விடுவிப்பார்" எனக் கூறி மறைந்தார். கண்டா கர்ணனும் சிவபிரான் திருவருளால் க்ஷேத்ர பாலத்துவத்தை (க்ஷேத்ர பரிபாலனத்தை)ப் பெற்றான். பைரவர் அவ்வாறே குருக்ஷேத்திரஞ் சென்று அங்கு திருமாலைக் கண்டு பிரமகபாலத்தையும் விட்டெறிந்து கோகர்ணத்துக்கு வந்து கண்டாகர்ணனுடன் அங்கேயே துஷ்ட நிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்து வாசஞ்செய்து வந்தார்.

## விநாயகர் வரலாறு: விநாயக தீர்த்தம்

மன்மதன் சிவபிரானது நெற்றிக் கண்ணால் எரிபட்ட பிறகு முனிவர்கள் சிவபிரானை அணுகி "ஈச! காமனைத் தந்தருளுக" என வேண்டினர். சிவபிரான் "இனி காமனுக்கு உருவம் கிடையாது. அவன் இனி (ஒவ்வொருவர்) சித்தத்தில் உதிப்பவனாவான். வைவஸ்வத அந்தரத்தில் (முடிவில்) அவன் கிருஷ்ணனுக்குப் புத்திரனாகத் தோன்றுவான்" என்றார். இங்ஙனம் சொன்ன பொழுது சிவனார் மனத்தில் காமன் உதித்தான். உடனே சிவன் பார்வதியைப் பார்த்தார். அவர் நெற்றியிலிருந்து ஓர் ஒளி தோன்றிச் சிவன் போலவே உருவுள்ள ஒரு குமாரன் ஆயிற்று. அந்தக் குமாரனுக்கு 'விநாயகன்' எனப் பெயரிட்டு ஈசன் கவுரிக்கு அளித்தான். உருவு ஒற்றுமையால் தேவி முதலில் அந்தக் குமாரனைத் தனது கணவன் என மயங்கிப் பின்னர்க் குழந்தை என உணர்ந்து, 'நீ விகார உருவத்தன் ஆகுக' என அந்தக் குமாரனைக் கோபத்தால் சபித்தாள். குமரனும் "யானை முகத்தனாய், பத்து புயங்களைக் கொண்டவனாய், குறுகிய தாளை உடையவனாய், தொங்கும் தொந்தியை உடையவனாய், முறம் போன்ற காதை உடையவனாய்த் தாயின் சாபத்தால் விகார உருவத்தன் ஆயினன். சிவபிரான் பார்வதியை நோக்கி இவன் யார் என வினவினர். இவன்தான் உங்கள் பிள்ளை 'விநாயகன்' எனக் கூறி வேற்றுருவம் வந்த விவரத்தைத் தேவி விளக்கினாள். சிவபிரான் தன் குமரனை எடுத்து "கஜானன! தாயின் சாபத்தால் அல்லவா உனக்கு இந்த விகார உருவம் ஏற்பட்டது. நீ கோகர்ணத்துக்குச் சென்று தவஞ் செய்க; அழகிய உருவத்தன் ஆவாய்" என்றனர். விநாயகரும் உடனே கோகர்ணத்துக்கு வந்து, தீர்த்தம் உண்டுபண்ணி, நெடுங்காலம் தவம் செய்தார். பிரமாதி தேவர்களுடன் மஹேசுரர் எதிர் தோன்றி என்ன வரம் வேண்டும் என வினவினர். விநாயகரும் "பரமேசுர! தாய் இட்ட சாபம் விலக வேண்டும்" என

வேண்டினர். சிவபிரான் "உன் விகார ரூபம் இனி அழகிய உருவமாக விளங்கும், கஜானனே! நீ கணங்களுக்குத் தலைவனாக வும், விக்னங்களுக்கு அதிபனாகவும் ஆகுக" என்றார். தேவர்கள் யாவரும் களிப்புற்றுத் தங்கள் தங்கள் ஆயுதங்களை விநாயகருக்கு அளித்தார்கள். திருமால் தன் மகள் சக்தியைத் தந்தார். இவ்வாறு வரங்களைத் தந்து ருத்ராதி தேவர்கள் விநாயக ருடன் அங்கே மறைந்தனர். விநாயக தீர்த்தத்தில் முழுகிக் "கணநாதவா" என்னும் மந்திரத்தால் கணபதியைப் பூசிப்பவன் சர்வா பீஷ்டங்களையும் பெறுவான்.

## பிரகலாதன் அருள் பெற்றது

ஹிரண்யகசிபின் புத்திரன் — பிரகலாதன் எனப் பெயர் கொண்ட மஹா சுரன்—தந்தைக்குச் செய்த துரோகத்தைக் கருதி, நாரத முனிவர் சொற்படி, கோகர்ண க்ஷேத்திரத்துக்கு வந்து கோடி தீர்த்தத்துக்குத் தெற்கே நரசிம்ம மூர்த்தியை ஸ்தாபித்து நிலையான தவத்தைச் செய்தான். நரசிம்ஹர் பிரசன்னமாகி என்ன வரம் வேண்டும் எனப் பிரகலாதரைக் கேட்க, அவர் "நான் தந்தைக்குத் துரோகம் செய்தேன். அந்த பாப வினை என்னை அணுகாதிருக்க அருள் செய்க" என வேண்டினர். நரசிம்ஹ மூர்த்தியும் "அன்ப! நீ பித்ரு துரோகத்திலிருந்து விடுபட்டாய்; உலகம் உன்னைப் பூசிக்கும். எவன் விசாக மாதம் சுக்ல பக்ஷ சதுர்த்தசியில் என்னைப் பூசிக்கின்றானோ அவன் செய்த பித்ரு துரோக பாபம் உடனே நசிக்கின்றது" எனக்கூறிப் பிரதிஷ்டித்த உருவத்தில் மறைந்தார். பிரகலாதரும் தனதிருப்பிடம் சேர்ந்தார்.

## கிருஷ்ண மூர்த்தி பூசித்தது

பாணாசுரன் மகள் உஷை என்பவள் கிருஷ்ண பகவானது பேரனை அபகரித்தாள். தன் பேரனைக் காணாது கிருஷ்ண பகவான் கவலையுற்றார். பின்பு நாரத முனிவர் சொற்படி கிருஷ்ண மூர்த்தி கோகர்ணத்துக்கு வந்தார். அங்கு, கோடி தீர்த்தத்தில் முழுகி மஹாபலரைப் பூசித்தார். நான்கு மாதகாலம் பெருந்தவம் செய் தார். சிவபிரான் பிரத்யக்ஷமாகி "கிருஷ்ண! விஷ்ணுவே! போரில் நீ என்னை ஜெயித்து பாணனது வலியை அடக்கி உன் பேரனைப் பெறுவாயாக" என வரம் அளித்து மறைந்தனர். கிருஷ்ணபகவான் துவாரகையை அடைந்து பாணாசுரனை வென்று தமது பேரனை மீட்டார். அந்த கிருஷ்ணமூர்த்தியைப் பூசிப்பவர் தமது இச்சை கள் நிறைவேறப் பெறுவார்.

## துர்வாசர், தத்தாத்ரேயர் பூசித்தது

துர்வாச முனிவர் தத்தாத்ரேயருடன் கோகர்ணத்தில் தவம் செய்து யோக சித்தரானார்.

## வேதங்கள் பூசித்தது

சங்காசுரனல் அபகரிக்கப்பட்ட வேதங்களும் சாஸ்திரங்களும் கோகர்ணம் வந்து லிங்கமியற்றித் தனித்தனி தவம் செய்தன. அப்போது விஷ்ணுபகவான் எதிரில் தோன்றி 'உங்கள் தவத்தினல் திருப்தி யுற்றேன்', என்றுர். அதற்கு வேத சாஸ்திரங்கள் "சுவாமி! நாங்கள் சங்காசுரனல் அபகரிக்கப் பெற்ருேம். எங்களைக் காத்தருளுக. நாங்கள் பூசித்த லிங்கங்கள் உலகிற் பிரசித்தமாகுக" என வேண்டின. அதற்குத் திருமால் "நான் வியாசராக அவதாரம் செய்து தீர்த்த யாத்திரை செய்யும் முறையில் இந்தத் தலத்துக்கு வந்து தவஞ்செய்து உங்களைக் காப்பேன். நீங்கள் தாபித்த லிங்கங்கள் பிரசித்தி பெற்றவையாகும். அவைகளை வேத சாஸ்திர முறைப்படி பூசிப்பவர்கள் பிறப்பு எழுடன் நின்று முடிவில் மோக்ஷம் அடைவார்கள்" என வரங்கள் தந்து மறைந்தார்.

## வியாசர் பூசித்தது

பின்னர், பராசரரின் புதல்வராக வியாசர் தோன்றி முறைப்படி தீர்த்த யாத்திரை செய்து கோகர்ணத்துக்கு வந்து நிலையான தவம் செய்தார். சுகரைத் தோற்றுவித்தார். தவத்தையும் விடாது செய்துவந்தார். மஹேசுரர் எதிர்தோன்றி "வியாசனே! வேதங்களும் சாஸ்திரங்களும் இருண்ட பாபநிறைந்த அசுரனுற் சிக்குண்டன. நீ அவைகளைச் சிக்கறுத்துப் பிரித்தால் மறையோர் அவைகளை ஓதுவார்கள்" என்று கூறி மறைந்தார். வியாசரும் உடனே வேத சாஸ்திரங்களைப் பிரிவினைசெய்து முறைப் படுத்தினர்.

## சுகர் பூசித்தது

சுகரும் கோகர்ணத்தில் தவமிருந்து யோகசித்தி அடைந்தார்.

## விசுவகர்மா பூசித்தது

விசுவகர்மா கோகர்ணத்தில் தவம் செய்து லிங்கம் தாபித்துப் பிரமதேவரைக் களிப்பித்தார். பிரமதேவர் திருவருளால் விசுவகர்மாவுக்குச் சிற்ப சாஸ்திரம் நன்கு மனத்திற் பதிந்தது.

## சக்ரன் பூசித்தது

காம மிகுந்த சக்ரன் என்பவன் கௌதமரால் சபிக்கப்பட்டான். அவன் கோகர்ணத்துக்கு வந்து லிங்கம் தாபித்து தவம் செய்து சிவபிரானை மகிழ்வித்து சித்தியடைந்தான்,

## கௌதமர் பூசித்தது.

அகலிகையை விட்டுப் பிரிந்த பின் கௌதமர் பூப்ரதக்ஷிணம் செய்பவராய்க் கோகர்ணத்துக்கு வந்து, அங்கு லிங்க ப்ரதிஷ்டை செய்து தவஞ் செய்து சித்தி பெற்றார்.

## பலர் பூசித்தது.

த்ருஞக்னி என்னும் அந்தண சிரேஷ்டன், காசிப முனிவர், கபோதப் பெயர் (புறாவின் பெயர்) கொண்ட மகா முனிவர், சுரசை என்கின்ற நாகலோக மாதா, ஹநுமான் பிதா கேசரி, விசுவ தேவர்கள், வசுக்கள், கிரகங்கள், பிருகு முனிவர், ஜமதக்னி முனிவர், க்ருது, அப்ஸர கணங்கள்,—இவர்கள் யாவரும் சத சிருங்கத்தில் தவஞ் செய்து சித்தி யடைந்தார்கள். அத்திரி, ஆங்கிரசு, பௌமன்—இவர்களது ஆசிரமத்தையும், புண்ணிய தீர்த்தத்தையும் தரிசித்தாலே அறிந்தும் அறியாமலும் செய்யப்பட்ட பாபங்கள் யாவும் அழிந்து போகும். இவ்வாறே விசுவாவசு, தும்புரு, சித்ர சேனன், கந்தர்வர்கள், சித்தர்கள், மருத்துக்கள், கின்னரர்கள், சாத்யர்கள், குஹ்யகர்கள், ராக்ஷசர்கள், வித்யாதரர்கள், கிம்புருஷர்கள்—என்பவரது ஆசிரமங்களும் தீர்த்தங்களும் உள்ளன. வால்மீகி முனிவரும் கோகர்ணத்தில் தவம் செய்து மஹாதேவர் அருளாற் சித்தி பெற்றார்.

### ஹநுமார்

வாயுவின் புத்திரன், மஹா பலவானான ஹநுமார், கோகர்ணத்தில் நெடுங்காலம் தவநிலையில் இருந்து தாம் விரும்பியபடியே, யுத்தத்தில் எப்போதும் வெற்றி தமக்கே உண்டாகும் படியான வரத்தைச் சிவபிரானிடம் பெற்றனர். ஹநுமார் தாபித்துப் பூசித்த லிங்கம் "ஹநுமேசரைப்" பூஜித்தால் எப்படிப்பட்ட பகைவர்களையும் வெல்லலாம்,

### துர்க்கை

துர்க்காதேவி 'துர்க்கா குண்டம்' எனப் பிரசித்தி பெற்ற தீர்த்தத்தை உண்டுபண்ணித் தபம் செய்து அரிய சித்தியை அடைந்தாள்.

### காளி

மஹாகாளி, சும்பன் முதலாய ராக்ஷசர்களைக் கொன்று, தன் ஆயுதங்களைச் சத சிருங்க தீர்த்தத்தில் நன்றாய்க் கழுவித் தெற்கு நோக்கினவளாய்த் தவஞ் செய்யும் கோலத்தில் இருக்கின்றாள்.

ஆயுதங்களைக் கழுவிய தீர்த்த இடம் "காளி மடு" எனப்படும். அதைப் பூசித்தல் வேண்டும். மஹா காளியைப் பூசித்தால் எல்லா விருப்பங்களையும் பெறலாகும். இந்தக் காளி சிவபிரானால் கோகர்ணத்தை ரக்ஷிக்கும் பொருட்டு அனுப்பப்பட்டாள்.

## நான்கு மறையவர்

அத்திரி வம்சத்திற் பிறந்த நான்கு மறையவர்கள் "பிந்து" என்னும் பெயரினர், யார்க்கும் காணுதற்கு அரியராய், கோகர்ணத்தில் துர்க்கை பூஜை செய்த இடத்தருகே வனத்தில் மரம் போல அசைவற்று நின்று தவம் செய்தார்கள். சிவபிரான் அவர்கள் முன் பிரத்யக்ஷமாகி, சந்திரனைக் கொண்டு அவர்கள் மீது அமிர்தம் தெளிப்பித்து, 'மறையவர்களே! உங்களால் இப்போது அமிருதம் பருகப் பட்ட படியால் நீங்கள் அரிய சித்தியை அடைந்தவர்களாயினீர்கள்; பிரம சொரூபிகளாய்ச் சஞ்சரிப்பீர்கள். நீங்கள் உண்டு பண்ணின தீர்த்தங்கள் சர்வ பாபங்களையும் போக்க வல்லன. அத்தீர்த்தங்களிற் சந்த்ர தாரை என்றும் பொழியும்' என வரந் தந்து மறைந்தார்.

## பீம கதா தீர்த்தம்.

தரும ராஜாது தம்பி பீமன் தீர்த்த யாத்திரை செய்பவனாய்த் தன் தாயுடன் கோகர்ணத்துக்கு வந்தான். மலையிடையே கல்லால் மூடப் பட்ட "தேச பிந்து" என்னும் தீர்த்தம் உளதென்பதை அங்குள்ள ருஷிகளால் அறிந்து தனது கதையால் கற்களை உடைத்தெறிந்து அந்த தீர்த்தத்துக்குச் செல்ல வழியுண்டாக்கினான். அதுமுதல் அந்த தீர்த்தம் பீம கதாதீர்த்தம் என்னும் பெயருடன் பிரசித்தி பெற்றது.

(பத்தாம் அத்தியாயம் முற்றும்)

# அத்தியாயம் 11.

## ருத்ரபாத மாஹாத்மியம்—(சுஹோத்ரன் கதை).

வடமதுரையில் சுஹோத்ரன் என்னும் பேருள்ள அந்தணன் இருந்தான், அவன் புரோகித வேலையை மேற்கொண்டு நால்வகை ஜாதியார்க்கும் சுப அசுப சடங்குகளைச்செய்து வந்தான். பொருளாசை மிக்கவனாய், எந்த இழிந்த தானத்துக்கும் முந்துபவனாய், சிவபூஜை செய்யாதவனாய், விரதம் ஒன்றையும் அநுஷ்டிக்காதவனாய், லோபியாய், ஊர் ஊராகச் சென்று திரவியம் சேகரித்தான்.

ஒரு முறை சஹ்ய (மலை) வனாந்தரத்திற் செல்லும்போது அங்கு இலையில்லாத சால்மலி விருக்ஷத்தின் கிளையில் தலைகீழாகத் தொங்குவனவும், இளைப்புற்றனவும், பயம் ஊட்டுவனவும், மேல் நோக்கும் உரோமங்களைக் கொண்டனவும், உலர்ந்த நெஞ்சம், உதடு, கன்னம் கொண்டனவும், புலம்புவனவுமான பிசாசுக் கூட்டத்தை இந்த அந்தணன் கண்டு பயமடைந்து வெகு வேக மாக நடந்தான். அப்பொழுது அந்தப் பிசாசுகள், இந்த அந்தணன் தங்களது வம்சத்தவன் என அறிந்து "சுஹோத்ர, அஞ்சாதே, வருக; உனக்கு மங்களம் உண்டாகுக" என அன்புடன் கூப்பிட்டு, மிக ப்ரீதியாய் "புத்திரனே! உனது பித்ருக்களாய எங்களை நீ காக்க வேண்டும். நீ செய்த பாபங்களின் பயனாக நாங்கள் பைசாச யோனி யுள்ளவராய் நரகில் விழ வேண்டியவர்களாய் இருக்கின்றோம். உன்னால் தான் நாங்கள் கரையேற வேண்டும்" எனக் கூறின. சுஹோத்திரன் தன் பித்ருக்களுடைய வார்த்தையைக் கேட்டு மிக நடுங்கி சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து தன்னைத் தானே நிந்தித்து "யான் செய்த அபராதங்கள் மன்னிக்கத் தக்கன அல்லவா? இப்பொழுது இனி யான் செய்யும் புண்ணிய கருமங்களால் உங்களுக்குச் சுவர்க்கலோகம் நிச்சயம் கிடைக்கும்" எனக் கூறினான். இதைக் கேட்ட பித்ருக்கள் "நீ மஹா புண்ணிய ஸ்தலமான கோகர்ணத்துக்கு இப்பொழுதே செல்லுக. அங்கே மலைத் தலத்தே "ருத்ர பாதம்" உள்ளது. முன்பொரு காலத்தே குரு சாபத்தால் ராக்ஷசனான மித்ர சஹராஜன் வசிஷ்டருடைய பிள்ளைகள் நூற்றுவரைக் கொன்று தின்றான். உயிரிழந்த நூற்றுவரும் அதனால் கோர ரூபம் அடைந்தார்கள். பின்னர் வசிஷ்டருடைய உத்தரவைப் பெற்று சக்தியின் புத்திரனான பராசரன் கோகர்ண க்ஷேத்திரத்துக்குப் போய் 'ருத்ர பாதம்' என்னும் ஸ்தானத்தில் விதிப்படி சிராத்தம், திலோதகம் கொடுத்ததினால் சக்தியும் மற்று யாவரும் பிரமலோகம் எய்திச் சுகமுற்றனர். ஆதலால், சுஹோத்ர, நீயும் மங்களகரமான அந்த ருத்ரபாதத்துக்குப் போய், அங்கே ருத்ராது பாதத்தை நன்கு பூஜித்து விதிமுறையிற் கையில் உள்ள பொருளுக் கேற்பச் சிராத்தம் செய்க; தானம் செய்க, சிவபிரான் மகிழ்வர்" என்றார்கள். இதனைக் கேட்டு பித்ருக்கள் சொன்னபடியே ருத்ரபாதம் என்னும் ஸ்தானத்தை அடைந்தான். அருகில் உள்ள கடலில் முழுகி ஒருமைப்பட்ட மனத்தினனாய்ச் சிராத்தம் செய்தான். பித்ருக்களின் முத்திக்காகத் தானங்கள் செய்தான். சிவபிரான் பிரத்யக்ஷமாகி நீ இச்சித்த வரத்தைப் பெற்றுக்கொள் என்றனர். சுஹோத்ரன் "தேவேச! எனது பித்ருக்களுக்கு முத்தி தந்தருள்க" என வேண்டினன். அதற்குச் சிவபிரான் 'உனது பித்ருக்களுக்குச் சுவாக்கலோகம் கிடைத்தல் நிச்சயம். புரட்டாசி மாதத்தில் நண் பகலில் இங்கு

வந்து ருத்ர பாதத்தில் சிராத்தம் செய்பவன் தன் பித்ருக்களையும் கரையேற்றுவான்; தானும் என்னுலகை யடைந்து மரண மின்மையைப் பெறுவான்" எனக் கூறி மறைந்தார். சுஹோத்ரனது பித்ருக்கள் பிரமலோகம் அடைந்து களிப்புற்றுர்கள். சுஹோத்ரனும் தனது தேக முடிவில் சுவரக்கம் பெற்றுன்.

## தர்மமும் அதர்மமும்

தருமம் அதர்மத்தை வெல்லும். தருமத்தை வெல்லவேண்டும் என்னும் எண்ணத்துடன் அதர்மம் கோகர்ணத்துக்குச் சென்று நிலையான தவத்தைச் செய்து சிவபிரானிடம் வரம்பெற்றுக் கலியுகத்தில் தருமத்தை வெல்லும் சக்தியைப் பெற்று வெல்கின்றது. கார்த்திகை மாதம் சோமவாரத்திற் கோகரணத்தில் தீர்த்த ஸ்நாநம் செய்பவன் அதர்மகுணம் அடையான்; அக்னிஷ்டோம பலனைப் பெறுவான். அசூயை, பொறுமை, சண்டித்தனம், குரோதம், துவேஷம், பொறுமை யின்மை, ஆசை, மூதேவித்தனம், விகாரம், மோகனம் என்பன தரும புத்திரர் போன்ற சத்திய புருஷர்களால் துக்கம் அடைந்து வெல்லப்பட்டுக் கோகர்ணத்துக்கு வந்து விதிமுறை தவம் செய்து, சிவபிரானிட மிருந்து கடையுகமான (கலியுகத்தில்) தருமங்கள் அழிவு பெறவும் தாமே பலம் அடையவும் வரம் பெற்றன. கோகர்ணத்தில் தீர்த்த ஸ்நாநம் செய்தவர்களுக்கு அதர்மத்தால் உண்டாகும் பயமில்லை. பொறுமை, சத்தியம், கரணங்களை அடக்குதல், கீர்த்தி, அஹிம்சை, ஆனந்தம், புத்தி, மானம், லக்ஷ்மி, லஜ்ஜை, சுருதி, ஸ்மிருதி, மேதை என்பன அதர்மக் குழந்தைகளால், அசூயை யாதிகளால் ஜெயிக்கப்பட்டு, பிரமாவின் சொற்படி கோகர்ண க்ஷேத்திரம் எய்தி சாலூகினி என்னும் தீர்த்தக் கரையில் நெடுங்காலம் தவம் செய்து தேவேசன் திருவருளால் அதர்மப் புத்திரர்களை ஜெயித்துத் தாமும் பலத்தை அடைந்தன. அவைகள் உண்டு பண்ண தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்பவர் நற்குணங்கள் முதலிய நன்மைகளைப் பெறுவர்.

## மேரு - மேருவின் புதல்வர்கள் - பிறர் பூசித்தது

ஒரு முறை விந்திய மலையால் மேரு ஜெயிக்கப் பட்டது. இதனுல் மேரு துக்கம் அடைந்து தன் புத்திரர்களுடன் கோகர்ணத்துக்கு வந்து கடுஞ் தவஞ் செய்தது. சிவபிரான் எதிர் தோன்ற அவரது வரப்ரசாதத்தால் மேரு பின்பு ஜெயமடைந்து புத்திரர்களுடன் மகிழ்ச்சி யுற்றிருந்தது.

மேருவின் புதல்வர்களான ரம்யனும் ரமணகனும் நான்கு யுகங்களினும் கோகர்ண க்ஷேத்திரத்துக்கு வந்து தீர்த்தம் உண்டு பண்ணி மஹேசுரரைப் பூசித்துச் சித்தி யடைந்தனர், அந்த

தீர்த்தங்களில் முழுகினவர் சுவர்க்க லோகம் அடைவார். அஷ்ட திக்கு பாலகர்களும், அந்தணர்களாய காலவரும் கஹோளரும் கடுந்தவம் இயற்றிச் சிவனை ஆராதித்துச் சித்தி பெற்றனர். கநகணன் என்னும் ராஜகுமாரன் சிவனைப் பூசித்துத் தன் தந்தை யிழந்த ராஜ்யத்தைத் திரும்பப் பெற்றான். கஷன், ரோமசன் என்பவர்களும் அங்குப் பூசித்துச் சித்தி யடைந்தார்கள்.

## சாலூகினி நதியின் வரலாறும் ஜந்நு முநிவர் பூசித்ததும்

பகீரதன் சுவர்க்கத்திலிருந்து கங்கையைக் கொண்டுவர, வழியில் கங்கையானது ஜந்நு முனிவரால் பருகப் பட்டது. பகீரதன் ஜந்நு முனிவரை வணங்கிக் கேட்டு அவரிடமிருந்து கங்கையை மீளப் பெற்றுப் பாதாளத்தில் பஸ்மமான தன் பித்ருக்களின் சாம்பலில் தோயச்செய்து பித்ருக்களைக் கரையேற்றினான், கங்கையும் கடலொடு கலந்தது. சத்ய தபரென்னும் முனிவர் ஜந்நுவின் ஆசிரமத்துக்கு வந்தார். ஜந்நு முனிவர் சத்யதபரை வரவேற்று க்ஷேமத்தை விசாரித்தார். அதற்குச் சத்யதபர் "நான் புஷ்ப பத்ரா நதிக்கரையில் இருக்கின்றேன். கங்கா ஸ்நாநம் செய்து இங்கு வந்துள்ளேன்; கங்கை உங்களாற் பருகப் பட்டது என்று உலகில் ஒரு அபவாதப் பேச்சு நிகழ்கின்றது. காசிபராதி முனிவர்கள் அங்ஙனம் பேசிக் கொள்கிறார்கள். அந்த அபராத தோஷ சாந்திக்காகத் தாங்கள் கோகர்ணம் சென்று அங்கு "சாலூகிநி" எனப் பெயருள்ளதும், சகல மலங்களையும் நீக்க வல்லதுமான நதிக்கரையில் லிங்கப் ப்ரதிஷ்டை செய்து கங்கா மூர்த்தியை நிதமும் பூஜை செய்தால் இந்த அபவாதம் நிச்சயமாய் நாசமாகும். அந்தத் தீர்த்தத்தில் முழுகி முன்பு ரோம பாதர், ப்ருதுக்ரீவர் என்னும் பிராமணர் இருவர் பொய் சாக்ஷி சொன்ன பாபத்தினின்றும் விடுபட்டனர்" என்றார். ஜந்நு முனிவர் இவ்விருவர்களின் விவரத்தை வினவ— சத்யதபர் கூறுகின்றார்:—"ரோமபாதர்—ப்ருதுக்ரீவர் இருவரும் என்னிடம் இருந்தவர்கள். இருவரும் வேதாப்யாசம் செய்கிறவர்களாய், பிரமசர்யம் பூண்டவராய் இருந்தார்கள். ஒருமுறை பிருகுவின் பிள்ளை "கண்டு" என்பவர் என்னிடம் வந்தார். அவரும் வேதாப்யாசம் செய்துகொண்டு என் சிஷ்ராய் அமர்ந்தார். ஒரு நாள் ப்ருதுக்ரீவர் என்னிடம் வந்து "குருவே! கண்டு என்பான் கள் குடிக்கின்றான், நான் பார்த்தேன். ரோம பாதனையும் விசாரியுங்கள்" என்றான். ரோமபாதனை விசாரிக்க "ஆமாம். அது உண்மைதான்" என்றான். அதனால் நான் கோபமடைந்து கண்டுவை நோக்கி "கண்டு! நீ என் ஆசிரமத்தை விட்டு அகலுக! நீ பிராமணருக்குள் அதமன்" என்றேன். அவன் உடனே

சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து "குருவே! என் தந்தையாரின் சொற்படி நான் அறுகம் புல்லின் ரசத்தைத் தினம் குடிக்கின்றேன்" என்றான். அப்படி இருந்தால்கூட, குலத்திலிருந்து நீ வெளிப் படத் தக்கவன் தான் எனக் கூறினேன். அப்பொழுது ஒரு அசரீரி வாக்கு "சத்யதபரே! உன் சிஷ்யன் பிருகுவின் பிள்ளை 'கண்டு' பாபம் செய்யாதவன். ப்ருதுக்ரீவன், ரோம பாதன் இரு வரும் அவன் மீது பொறாமை கொண்டு பொய் கூறினார்கள். உண்மையைத் தீர விசாரித்து ஆராயாமையால் நீயும் கொஞ்சம் பாபத்துக்கு ஆளானாய். இந்த பாபம் நீங்க நீ இப்பொழுதே கோகர்ணத்துக்குச் செல்லுக. அங்கே விதிமுறை தவம் செய்க. சிவபிரானது பிரசாதத்தால் உன் தோஷம் நீங்கும்; ரோம பாத னும் ப்ருதுக்ரீவனும் அவ்வாறே செய்யட்டும்; கண்டுவும் உடன் செல்லவும்" என உரைத்தது. பிறகு நான் இந்த மூன்று சிஷ்யர் களுடன் கோகர்ணத்துக்குச் சென்று அந்த க்ஷேத்திர எல்லையில் தவத்தை மேற்கொண்டேன். சிவபிரான் எதிர் தோன்றி என் தோத்திரங்களுக்கு இரங்கித் தமது சடை முடியிலிருந்து கங்கையை விடுத்தார். கங்கை, நதிரூபமாகப் பிரவாகித்துச் சமுத்திரத்தை அடைந்தது. அப்போது சிவபிரான் "இந்நதி புண்ணிய தீர்த்தம், இதற்குச் சால்மலி எனப் பெயர். மஹா பாதகர்களாயினும், பொய் கூறினவர்களாயினும் அவர் தம் புதல்வர்கள் பக்தியுடன் பித்ருக் களைக் குறித்து இந் நதியில் ஸ்நாநம் செய்தால் எல்லா பாபங் களும் விடுபட்டவராவார்கள்; பரகதி அடைவார்கள்; ஆதலால் சாலூகிநி என இந் நதியின் பெயர் இனி உலகில் வழங்கும்". எனக் கூறி மறைந்தார். பிறகு நான் சிஷ்யருடன் நிலைத்த புத்தி யுடன் அந்நதியில் முழுகி, கோகர்ணத்துள்ள பிற தீர்த்தங்களிலும் முழுகி மஹாபலரைப் பூசித்து என் இருப்பிடம் சேர்ந்தேன்".

இங்ஙனம் தன் வரலாற்றைக் கூறிச் சத்யதபர் ஜந்நுவை நோக்கி—"நீங்களும் இவ்வாறே அந்த கங்கையில் ஸ்நாநம்செய்து மஹாபலரைப் பூஜை செய்யுங்கள்." என உரைத்துத் தனது ஆசிரமத்துக்குச் சென்றார். ஜந்நு முநிவரும் உடனே கோகர்ணத் துக்கு வந்து சால்மலியில் ஸ்நாநம் செய்து கங்கா மூர்த்தியைப் பூஜித்தார். கங்கை பிரத்யக்ஷமாகி என்ன வரம் வேண்டும் என ஜந்நு "தாயே! என் அஞ்ஞானத்தாலும் ஆசையாலும் உனக்கு நான் அபசாரம் செய்துவிட்டேன். அந்த பாபத்தை ஒழித்தருளுக" என வேண்டினர். அதற்குக் கங்கை "ஜந்நுவே! உன் தோஷம் நீங்கிற்று. ஐப்பசி மாசம் கிருஷ்ண பக்ஷம் அஷ்டமியில் அருணோ தயத்தில், நான் எல்லா நதிகளுடனும் சர்வ தீர்த்தங்களுடனும், தேவ கணங்கள் சித்தர்களுடனும், நரர்களின் எல்ல பாபங்களையும் தீர்ப்பவளாய் இந்த நதியில் தோன்றுகின்றேன்; ஆதலால்,

அந்த சமயத்தில் நான் 'கங்காவளி' என்ற பெயரால் விளங்குவேன். அப்பொழுது இந் நதியில் முழுகிக் கங்கா மூர்த்தியைத் தோத்திரத்தாலும் உன்னாற் செய்யப்பெற்ற சஹஸ்ர நாமங்களாலும் பூசிப்பவனுக்கு எல்லா போகங்களையும் என் பதத்தையும் தருகின்றேன்" என உரைத்து மறைந்தான். ஐந்து முனிவரும் இவ் வரம்பெற்றுக் கோடி தீர்த்தமாதிய அங்குள்ள தீர்த்தங்களில் முழுகித் தனது இருப்பிடம் சேர்ந்தார்.

## இடும்பி பூசித்தது.

இடும்பன் சகோதரி இடிம்பை என்னும் அரக்கி வியாச முனிவர் உபதேசப்படி கோகர்ணத்தில் ஆசிரமம் உண்டுபண்ணித் தவம் செய்து தன் கணவனுக்குத் தான் செய்த துரோகத்தால் வந்த பாபத்தினின்றும் விடுபட்டாள். இடும்பி நிருமித்த ஆசிரமம் முத்தி தருவது.

## நகுடன் பேறு பெற்றது.

நூறு அசுவமேத யாகம் செய்து சுவர்க்க பதவிக்கு உரியவனை நகுட மகா ராஜன், அகத்திய முனிவர் சாபத்தால் அப் பதவியை இழந்து பாம்புருவ மானவன், கோகர்ணத்தில் தவம் செய்து சிவ ப்ரசாதத்தால் மறுபடி சுவர்க்கத்தை அடைந்தான்.

## பலர் பூசித்தது.

அம்பரீஷன், நளன், நிமி, நாபாகன், இக்ஷுவாகு, யயாதி, பாணாசுரன்—பின்னும் அநேகர் இங்ஙனம் கோகர்ணத்தில் தவம் செய்து சித்தி பெற்றார்கள்.

(பதினோராம் அத்தியாயம் முற்றும்)

# அத்தியாயம் 12

## உமா வனமும் உமை மடுவும்.

முன்பு கயிலாயத்தில் கோகர்ண மாஹாத்மியத்தைச் சிவபெருமான் பார்வதி தேவிக்கும் கந்தப் பெருமானுக்கும் எடுத்துரைத்தார். அப்பொழுது அதைக் கேட்டிருந்த மணிபத்திரனும், சித்தனும், பூதநாதனும் சிவ பெருமானைச் சேவித்து "தேவேச! நாங்கள் விதி முறை யாத்திரை செய்து அந்த க்ஷேத்திரத்தைத் தரிசித்து விரைவில் உங்களருகில் வந்து சேருகின்றோம்" என்றனர். சிவனும் 'நன்று' எனக் கூற, அவர்களும் விரைவில் கோகர்ணம் வந்து சேர்ந்தனர். அந்த க்ஷேத்திரத்தின் கிழக்கு எல்லையில் ஆசிர

ம்மும் தீர்த்தமும் உண்டு பண்ணி, லிங்கப் ப்ரதிஷ்டை செய்து சித்தன் தவஞ் செய்தான். சிவபிரான் எதிர் தோன்றி என்ன வரம் வேண்டும் எனச் சித்தனைக் கேட்க, அவன் "சுவாமி! உனக்கு உகந்த இந்த க்ஷேத்திரத்திலே உன் சேவையைச் சதா செய்ய விரும்புகின்றேன்" என்றான். சுவாமியும், 'நீ இங்கேயே கிழக்குத் திசையை ரக்ஷித்துக் கொண்டிரு; நீ உண்டு பண்ண தீர்த்தம் சித்த குண்டம் எனப் பிரசித்தம் அடையும்." எனக்கூறி அந்த லிங்கத்தில் மறைந்தார். பிறகு, மணிபத்திரன் தலைகீழாகப் பூமியையும் தொடாது அந்தரத்தில் நெடுங்காலம் சதசிருங்க தடத்தருகில் சிவனது திருவடிகளைத் தியானித்துத் தபம் செய்தான். சிவபெருமான் ப்ரத்யக்ஷமாகி - அவன் விரும்பினபடியே அந்த ஸ்தலத்தின் மேற்கு எல்லையை ரக்ஷிக்கும்படி வரம் தந்து மறைந்தார். பூதநாதனும் அங்ஙனமே தபம் செய்து அந்தத் தலத்தை ரக்ஷிக்கும் வரம் பெற்றான். இங்ஙனம் அம் மூவரும் கணங்களுடன் அந்தத் தலத்திலேயே தங்கினார்கள்.

பார்வதி தேவியும் "நாதா! அந்த ஸ்தலத்தை எனக்குக் காட்டுவாயாக" என விரும்பிக் கேட்டனள். சுவாமி உடனே தேவியுடன் விடையில் ஏறி வந்து கோகர்ணத்தைக் காட்டினார். பார்வதி கண்டு அதிக ஆச்சரியம் அடைந்து "நாதா! நானும் இங்கு வசிக்க விரும்புகின்றேன்" என்றனள். இதைக் கேட்டுச் சிவபிரான் தேவியுடன் அங்கேயே தங்கினார். தேவி தங்கின இடம் "உமாவனம்" எனப் பிரசித்தம் அடைந்த ஆசிரமமாக விளங்கினது. அந்த ஆசிரமும் மிக்க புண்ணிய ஸ்தானமாகும். அது ஒரு கல்லாலாய குண்டிகையின் உருவுடையது. கடலின் மேல் உள்ளது. அதைத் தரிசித்த மாத்திரமே எல்லா பாவங்களும் நீங்கும். உலகில் எல்லா தீர்த்தங்களும் புனிதமாகும் பொருட்டு அங்குத் தேவியை அடைந்தன. இவை ஒன்று சேர்ந்த மடுவினின்று "உமை மடு" என்னும் தீர்த்தம் உண்டாயிற்று. "உமாமஹேசுர" உத்தம லிங்கமும் அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. அங்கு தீர்த்தத்தில் முழுகி அந்த லிங்கத்தைப் பூஜை செய்பவன் சகல பாபங்களும் நீங்கி விரும்பின வரங்கள் எல்லாவற்றையும் பெறுவான். உமாவநத்தில் கற்ப தரு "சாயா பாதபம்" என்னும் பெயருடன் சதா பூவும் பழமுமாக (ஏழு கை) 14 அடி உயரத்தில் வளர்ந்து ஓங்கி உள்ளது. ஜந்துக்கள் அவ் விருக்ஷத்தை அடைந்து இறத்தலை ஒழிக்கின்றன. இது நிச்சயம்.

## சந்த்ரதேவன் - மாலினி பூசித்தது.

க்ரீடாகிரியின் கீழ்ப் பாகத்தில் 'மாலினி' என்னும் நதி உள்ளது. அது புண்ணியமான தீர்த்தத்தை உடையது. புண்ணி

யத்தைத் தருவது. ஸ்வாயம்புவ மந்வந்தரத்தில் "சந்திரதேவன்" என்னும் பெரியோன் ஒருவன் இருந்தான். அவனுடைய உத்தம பத்தினி 'மாலினி' என்பவள். சித்தியை விரும்பி இருவரும் க்ரீடா கிரியின் கீழ்ப் பாகத்திற் சிவபிரானைத் தியானித்துத் தவம் செய்தார்கள். சிவபிரான் தேவியுடன் ப்ரத்யக்ஷமாகி என்ன வரம் வேண்டு மெனக் கேட்டார். அதற்குச் சந்த்ரதேவன் "ஈச! நான் சாயுஜ்யம் பெற விரும்புகின்றேன்" என்றான். மாலினியும் தேவியிடம் அதே வரத்தைக் கேட்டாள். அவர்கள் விரும்பிய வண்ணம் வரம் கொடுத்தார்கள் சிவனும் தேவியும். அவர்கள் இருவரும் உடனே வாயு பூதர்களாக சிவனோடும் தேவியோடும் முறையே கலந்தார்கள். சந்த்ர தேவன் நிருமித்த 'சந்த்ர தேவாசிரமம்' பிரசித்தமானது. முத்தி தருவது.

## மாலினி நதி.

சிவனும் பார்வதியும் அங்கு க்ரீடை செய்தனர். அவர்கள் சம்போகத்தால் உண்டான சுக்கிலம் சுத்த ஸ்படிகம் போல ஒரு மஹா நதி ஆயிற்று. அந்த தீர்த்தம் நிர்மலமானதும் பாபங்களை ஒழிப்பதுமான பெருமை வாய்ந்தது. அதன் பெயர் மாலினி. பன்னிரண்டு வருஷத்துக்கு ஒரு முறை பங்குனி உத்திரத் தன்று அது காணப்படுகின்றது. நன்றி கொன்றவர் கண்களுக்கு அது புலப்படாது. அங்ஙனம் அது தோன்றும் போது அதில் ஸ்நாநம் செய்பவன் அமரன் ஆகின்றான். இது சத்தியம்.

## துர்முகன் (வேடன்) பூசித்தது.

சஹ்ய மலையில் துர்முகன் என்னும் துஷ்ட வேடன் - இரக்கமற்றவன்—மஹாபாபி-ஒருவன் இருந்தான். பசுவோ, பக்ஷியோ, அந்தணரோ-யாவரையும் கொல்வான். அவனுக்குப் பயந்து யாரும் அவனிருக்கும் மலைப் பக்கம் போவதில்லை. இங்ஙனம் பல நாள் செல்ல, ஒருமுறை அந்தண சிரேஷ்டரான கௌசிகர் என்பவர் கோகர்ணத்துள்ள தீர்த்தங்களில் முழுகிக் கமண்டலம் நிறைய தீர்த்தத்துடன் சஹ்ய மலைப் பக்கம் வந்தார். அவரைக் கண்ட துர்முகன் வாளேந்திய கையினனாய் "நில், நில்" எனக் கூவி அவரை அணுகினான். கௌசிகர் அவனைக் கண்டு, நடுங்கிய தன் கையிலுள்ள கமண்டலத்தை அவன்மீது சுழற்றி எறிந்தார். கமண்டல தீர்த்தம் அவன் மீது பட்டதும் அவன் பாபங்கள் நசித்தன. அவனுக்குத் தெய்வ பக்தி உண்டாயிற்று. நல்லறிவு உதித்தது. கையிலிருந்த வாளை விட்டெறிந்தான். இனிப் பிராணிகளுக்கு சுகம் தருவதையே நான் விரதமாகக் கொள்ளப் போகின்றேன், அவர்களுக்கு அபயம் தருவேன் எனத் தீர்மானித்து "அந்தணரே! நீங்கள் பயப்பட வேண்டாம்; நான் உங்களை ஒன்றும் இம்சிப்பதில்லை" என்று

கூறிக் கீழே விழுந்து வணங்கி "சுவாமி! நான் பாபி-என்னைக் கரையேற்றுங்கள்" என வேண்டினான். கௌசிகர் இதைக் கண்டு பயத்தை விட்டு அன்புடனே "அப்பா! நீ என்ன பாபஞ் செய்துள்ளாய்! கூறுக" என்றனர். அதற்குத் துர்முகன்—"அந்தண சிரேஷ்டரே! நான் செய்துள்ள பாபங்களுக்குக் கணக்கே இல்லை. உங்களைக் கண்டதும் உங்களைக் கொல்ல வந்தேன். கையிலிருந்த புனிதமான மந்திரநீரை நீங்கள் என்மீது எறிந்தீர்கள். அந்தப் புனித நீர் என் பாபங்களை ஒழித்தன. தபஞ் செய்ய விரும்புகின்றேன், உபதேசித்தருளுங்கள், பிரபுவே!" என்றனன். இதைக் கேட்ட கௌசிகர் "நீ கூறுவது திடமாயின், உண்மையாயின், ஏ! வேடனே! நீ பட்டினி விரதம் பூண்டு இப்பொழுதே கோகர்ணத்துக்குச் செல்லுக. அங்கு ஆசிரமம் உண்டு பண்ணி உன் உயிர் உள்ளவரையில் சிவபிரானைத் தியானித்துத் தவநிலையில் இரு; முடிவில் சுவர்க்கம் பெறுவாய்" என்றுரைத்துத் தான் போக வேண்டிய இடத்துக்குப் போனார். வேடனும் உடனே கோகர்ணத்துக்குச் சென்றான். ஒரு மரத்தடியில் ஆகாரம் அற்றவனாய்த் தவநிலையிலிருந்தான். சிவனது நாம பஜனையால் அவன் பாபங்கள் யாவும் அழிந்து போயின. பிறகு மரணம் அடைந்தான். அவன் செய்த பெரும் புண்ணியத்தின் பயனாகத் திவ்ய விமானம் ஏறித் திவ்ய ஸ்த்ரீகள் தன்னைச் சேவித்து வரக் கயிலாயத்தை அடைந்தான். வேடன் உண்டு பண்ண ஆசிரமம் புண்ணியமானது, புனிதமானது, பாபத்தைப் போக்க வல்லது, சுவர்க்கம் தருவது.

## ஸம்வர்த்தகன் பூசித்தது.

இங்ஙனம் கோகர்ணம் சுவர்க்க மோக்ஷம் தரவல்லது. சர்வ சித்தர்களும் அந்த ஸ்தலத்தை அடைந்து சித்தியைப் பெற்றுள்ளார்கள். வருஷம் நூறானாலும் அத் தலத்தின் மஹிமையைச் சொல்ல முடியாது. அங்குள்ள சிலையை எடுத்து லிங்கார்ச்சனை செய்பவர்கள் ருத்ரலோகம் அடைவார்கள். நாரத முனிவர் சொற்பிரகாரம் ஸம்வர்த்தகன் என்னும் அந்தணன் தான் உண்டுபண்ண தீர்த்தத்தில் முழுகி லிங்கார்ச்சனை செய்து நெடுங்காலம் தவஞ் செய்து சித்தி பெற்றான்.

## அலிஜங்கன் பேறு பெற்றது.

துவாபரயுகத்தில் வைவஸ்வத மநு காலத்தில் மதுரையில் (மத்ராவில்) அத்திரி கோத்திரத்தில் உதித்த அலிஜங்கன் என்னும் மறையவன் ஒருவன் இருந்தான். அவன் தெய்வ சிந்தனையேயில்லாதவ, கெட்ட சஹவாசம் கொண்டவனாய், துர்ப் புத்தியனாய், கட்குடியனாய், சூதாடுபவனாய், பரஸ்திரி கமனம் செய்பவனாய், பித்ரு பக்தி இல்லாதவனாய், தேவர்களையும், அந்தணர்களையும் தூஷிப்

பவனுய்த் தினந்தோறும் கணக்கிலாப் பாபம் செய்பவனுய்க் காலங் கழித்தான். அவன் மனைவி அநங்கலதிகை என்பவள், பதி பக்தி யற்றவளாய், வேசித் தொழில் பூண்டவளாய், சதா கடுஞ் சொல்ல ளாய், பல பாவங்கள் தினந்தோறும் செய்து வந்தாள். இவர்க ளிருவரும் கர்மவசத்தால் உத்தம ஸ்தலமான ஸ்ரீரங்கத்துக்குச் சென்றனர். கார்த்திகை மாசத்தில் சூரியன் துலா ராசியில் புண் ணியந் தருங் காலத்தில் அநேகர் அந்த ஸ்தலத்துக்குப் போய்க் கொண்டிருந்தனர். இவர்கள் இருவரும் அவர்களுடன் போய்க் காவேரியில் உஷத் காலத்தில் முழுகி, ஒருமாதம் அங்கு தங்கி யிருந்து ஸ்ரீரங்கநாதரையும் பூஜித்து, ஹரி கதைகளைக் கேட்டு வந் தனர். மாத முடிவில் கோயில் திரவியங்களை அலிஜங்கன் திரு டிச் சென்ருன். அவன் மனைவியும் உடன் சென்ருள். காணுது போன சொத்தைக் கண்டு பிடிக்கக் காவலாளர்கள் உடனே புறப் பட்டு வந்து சொத்துடன் அலிஜங்கனைப் பிடித்துக் கொண்டார்கள். அவனை இறுகக் கட்டி அவன் மனைவியுடன் அரசன் முன்னிலையில் சேர்த்தார்கள். அரசனுல் தண்டனை விதிக்கப்பட்டு இருவரும் கொஞ்ச காலம் சென்றதும் அங்கேயே இறந்தார்கள். யம படர்கள் இவர்கள் உயிரைக் கட்டிக்கொண்டுபோய் யமனது முன்னிலையில் விட அவனது ஆக்ஞைப்படி இவர்கள் இருவ ரையும் நரகில் தள்ளினுர்கள். பிறகு அநங்கலதிகை பெண் கிரியாகவும் அலிஜங்கன் ஆண் நாயாகவும் கோகர்ணத்திற் பிறந் தார்கள். முற்பிறப்பிற் செய்த காவேரி ஸ்நாநத்தாலும் விரதாதி களாலும் பிறவி ஞானம் பெற்றுக் கோகர்ணத்தில் பலநாள் இருந் தார்கள். புண்ணிய வசத்தால் ஸம்வர்த்தருடைய ஆசிரமத்தில் நாரத முநிவர் கோகர்ண க்ஷேத்திர மாஹாத்மியம் சொல்லப் பட்டதை இந்தக் கிரியும் நாயும் கேட்டு வந்தன. இந்தப் புண்ணி யத்தால் இவை இரண்டும் கீழான பிறப்புக்கள் நீங்கப்பெற்றன. அவை இறந்தபொழுது தேவேந்திரனது உத்தரவுப்படி, தேவ தூதர்கள் விமானத்தோடு வந்து அவைதமைச் சுவர்க்கத்துக்கு அழைத்துச் சென்ருர்கள். அங்கே வெகு காலம் இவர்கள் போகங்களை அநுபவித்து மறுபடி பூலோகத்துக்கு வந்தார்கள். அவன் அங்க தேசத்து அரசனுய் வந்தான். கநகாங்கதன் என் னும் பெயருடன் விளங்கினுன். அவன் பத்தினியும் கோராஷ்ட் ராதி பதியின் மகளாய்க் கலாவதி என்னும் பெயரினளாய்க் கநகாங்கதனையே மணந்தனள். கநகாங்கதன் நெடுங் காலம் செங்கோல் செலுத்திப் பிரஜைகளுக்கு நன்மைசெய்து வந்தான். அவனுக்கு மூன்று உத்தம புத்திரர்கள் பிறந்தார்கள். அசுவ மேதம் முதலிய யாகங்களையும், சகல தானங்களையும் அவன் செய்து புத்ர பௌத்ராதிகளுடன் வாழ்ந்தான். பின்பு செல்வத்தில் ஆசையற்றுத் தன் மனைவியுடன் தீர்த்தயாத்திரை செய்து

கோகர்ண க்ஷேத்திரத்தை அடைந்தான். அங்குள்ள தீர்த்தங்களில் முழுகி மஹாபலரையும் பூசித்து அங்கேயே தவத்திலிருந்து மோக்ஷ மடைந்தான்.

## முடிவு

கோகர்ண க்ஷேத்திர மாஹாத்மியத்தை ஒரு முறை கேட்டதன் பலனைப் பார்த்தீர்களா! அலிஜங்கனுக்குத் தன் மனைவியுடன் ராஜ போகமும் பின்பு மோக்ஷமும் கிடைத்தனவே. ஆதலால் இந்த க்ஷேத்திரத்தின் மகத்துவத்தை ஒருகாலோ, இருகாலோ, முக்காலோ எவன் கேட்கின்றானோ அவனுடைய புண்ணிய பலன் நூறு வருஷம் சொன்னாலும் சொல்லி முடியாது. அவன் விரும்பின விருப்பங்கள் யாவும் கைகூடப் பெறுவான். சர்வ தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்த பலனை, சர்வ யாகங்கள் செய்ததனால் வரும் பலனை, சர்வ விரதங்களால் வரும் பலனை அவன் பெறுவான். சர்வ வியாதிகளும் நாசமுறும். சர்வ பூதசேஷ்டைகளும் நாசமாகும். பிள்ளை வேண்டுபவன் பிள்ளைப் பேறு அடைவான்; கீர்த்தி வேண்டுபவன் கீர்த்தியைப் பெறுவான்; ராஜ்யம் வேண்டுபவன் ராஜ்யம் பெறுவான்; தனம் வேண்டுபவன் தனம் பெறுவான்; வித்தை வேண்டுபவன் வித்தை பெறுவான்; பாசங்களாற் கட்டுண்டவன் பாசங்களிலிருந்து விடுபடுவான்; ஆயுள் விரும்புவன் ஆயுள் பெறுவான்; ஸ்த்ரீ போகம் விரும்புவன் ஸ்த்ரீ போகம் பெறுவான்; சுவர்க்கத்தை விரும்புவன் சுவர்க்கத்தைப் பெறுவான்; மோக்ஷம் விரும்புபவன் மோக்ஷம் பெறுவான். இது மஹா ரஹஸ்யமான உண்மை; பக்தி யில்லாதவர்களுக்கு இதைச் சொல்லக் கூடாது; சத்தியம், சத்தியம், (முக்காலும்) சத்தியம். இது கை தூக்கிச் சொல்லப்படுகின்றது.

கோகர்ண க்ஷேத்திரத்தில் வாசம் செய்பவனும், சித்தி தருபவனும், இரு புஜங்களை உடையவனும், பக்தர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுபவனும் ஆகிய கணேசன் உங்களைக் காக்க.

சிந்தாமணியும், தன்னை வணங்குவோருக்கு நிஜ மணியும், சிரோமணியும், கபாலியும், லோக பாலனுயும் உள்ள மஹாபலர் உங்களைக் காக்க.

---

இங்ஙனம் ஸ்ரீ காந்தத்தில் கோகர்ண கண்டத்தில் ஸ்ரீ கோகர்ண மாஹாத்மியத்தில் சாரோத்தாரத்தில் பன்னிரண்டாம் அத்தியாயம் (முற்றும்.)

ஸ்ரீ மஹாபலேசுரர் துணை.

திருச்சிற்றம்பலம்.

# கோகர்ண ஸ்தல ஸ்துதி சுலோகம்

கோகர்ணம் ஸா மஹா காசீ, விசுவ நாதோ மஹாபல :
கோடி தீர்த்தஸ் தத்ர கங்கா ஸமுத்ரோயம் விசிஷ்யதே. ௧

குஞ்சா மாத்ரா திகம் காசியா கோகர்ண மபிதீயதே
கோகர்ண ஸத்ருசம் க்ஷேத்ரம் நாஸ்தி நாஸ்தி ஜகத்ரயே. ௨

ஸர்வேஷாம் சிவலிங்காநாம் ஸார்வபௌமோ மஹாபல :
மஹாபல ஸமலிங்கம் நபூதோ நபவிஷ்யதி. ௩

கங்காதி ஸரிதோ யஸ்மாத் ஸாகரம் ப்ரவிசந்தி ஹி
தஸ்மாத் ஸமுத்ரோஹ்யதிகோ கோகர்ணே தத் விசிஷ்யதே ௪

ஆத்யம் பசுபதே ஸ்தாநம் தர்சநாத்ஏவ முக்திதம்
யத்ர பாபோபி மநுஜ: ப்ராப்நோத்ய் பயதம் பதம் ௫

பச்சிமாம்புதி தீரஸ்தம் கோகர்ண க்ஷேத்ர முத்தமம்
மஹாபல ஸமம் லிங்கம் நாஸ்தி ப்ரஹ்மாண்ட கோளகே. ௬

பூர்வே ஸித்தேச்வரோ நாம, தக்ஷிணேத் யக நாசிநீ,
உத்தரே சால்மலீ கங்கா, பச்சிமே லவணம் புதி : ௭

(1) கோகர்ணமே மஹாகாசி, மஹாபலரே விசுவநாதர், கோடி தீர்த்தமே கங்கை ; சமுத்திரம் கூட இருப்பதால் பின்னும் விசேஷம். (2) காசியிலும் ஒரு பங்கு அதிகம் கோகர்ணம், அதற்கு இணையான தலம் மூவுலகிலும் இல்லை. (3) எல்லா சிவ லிங்கங்களுக்கும் மஹாபலரே சக்ரவர்த்தி ; அவருக்கு இணை இன்றும் இல்லை, என்றும் இராது. (4) கங்கை முதலான சகல தீர்த்தங்களும் இங்கு கடலிற் சேர்கின்றபடியால் கோகர்ணத்தில் உள்ள சமுத்திர தீர்த்தம் பெருமை வாய்ந்தது. (5) மஹாபலேசுரர் ஆதி மூர்த்தி ; தரிசித்த மாத்திரையில் அவர் முத்தி யளிப்பவர் ; பாபியான மனிதனுக்கும் அவர் அபயம் அளிப்பார். (6) மேற்குக் கரையில் உத்தம கோகர்ணம் அமைந்துள்ளது ; பிரமாண்ட கோளத்தில் மஹாபல லிங்கத்துக்கு இணை யில்லை. (7) கிழக்கில் சித்தேசுரர், தெற்கே அகநாசினி, வடக்கில் சால்மலி கங்கை ; மேற்கே உப்புக் கடல்.

N48

PRINTED AT THE SARASWATHI VILASAM PRESS & PUBLISHED BY UNIVERSAL BOOK SERVICE, MADRAS. Q. H. No. M. S. 35